
www.padippakam.com

நவம்: டிச. '90 - ஜன. '91 மக்கள் கலை இலக்கியக் கழக இதழ் விலை ரூ.2

# புதிய கலாச்சாரம்




படிப்பகம்



# கேட்டீரா சேதி!

## கொலை செய்வது ஜோதிபாசு சீடர்களின் தொழில்!

சென்ற ஆகஸ்ட் 26-ந் தேதி சுபாலாதாஸ் என்ற 35 வயது பெண்மணி மண்ணெண்ணை ஊற்றி தீயிட்டுக் கொல்லப்பட்டார். ஜோதிபாசு தலைமையிலான போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மேற்கு வங்கத்தில் புகழ் பெற்ற ஜாதவ்பூர் பல்கலைக்கழக வளாகத்தில் காலை 9 மணிக்கு சி.பி.எம். குண்டர்களால் நடத்தப்பட்ட நெஞ்சை உலுக்கும் படுகொலை இது.

ஜாதவ்பூர் பல்கலைக் கழகத்தில் பியூனாகப் பணியாற்றும் சரஸ்வதி என்பவரின் சகோதரி தான் சுபாலாதாஸ். பல்கலைகழக நான்காம் பிரிவு ஊழியர் குடியிருப்பில் இருக்கும். இவருக்கும் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும், குடி நீர் பிடிப்பதில் ஏற்பட்ட குழாயடிச் சண்டை சற்று முற்றியதன் விளைவு தான் இந்தப் படுகொலை.

ஆனால், சுபாலாதாஸ் தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டார். என 'போலீஸ்' பாணியில் திசை திருப்புகின்றனர் சி.பி.எம். குண்டர்கள். கொலையும் செய்து விட்டு 'சுபாலாதாஸ்' நடத்தைக் கெட்டவள், அவள் ஒரு விபச்சாரி எனக் கூறி விசயத்தை மூடி மறைக்க முயல்கின்றனர். இந்த உண்மையைத் தெரிந்தும் அச்சத்தால் வாய்திறக்க மறுக்கின்றனர் பிற ஊழியர்கள்.

விபச்சாரி என்றால் கொலை செய்யலாம் என்பது தான் ஜோதிபாசு சீடர்களின் எழுதாத சட்டம் போலும்!

## உயர்தர அதிகாரிகளின் கீழ்த்தர விளையாட்டுகள்

கடந்த செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடந்த 11-வது ஆசிய விளையாட்டுப் போட்டியின் போது, போட்டிகள் நடக்கும் இடத்தில் மது அருந்துவதை முற்றாகத் தடை செய்தது, சீன அரசு. அதனால் என்ன? என்கிறீர்களா! நல்லாயிருக்கு!

விளையாட்டு வீரர்களைக் குடிக்கக்கூடாது என்றாலாவது ஒரு நியாயம் இருக்கிறது. அவர்களை அழைத்துச் சென்ற இந்திய உயர் அதிகாரிகளும் குடிக்கக் கூடாது என்றால் என்ன நியாயம்? 'ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு கோப்பை மதுவாவது குடிக்க அனுமதிக்கக் கூடாதா?' என ஆத்திரப்பட்டனராம் இந்திய அதிகாரிகள். இவர்களின் கோபத்தில் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்கிறது. வெளிநாடுகளில் நடக்கும் போட்டிகளுக்கு விளையாட்டு வீரர்களை அழைத்துச் செல்லும் இந்திய அதிகாரிகளின் பழைய நடவடிக்கை சிலவற்றை நினைவு கூர்ந்தால்தான் நியாயம் புரியும்.

1956-ல் மெல்போர் நகரில் கடந்த ஒலிம்பிக் விளையாட்டுக்கு வசீகரமான குடும்பப் பெண்களை வரவேற்பாளர்களாக அமர்த்தியது, ஆஸ்திரேலிய அரசு. அந்த வரவேற்பாளர் ஒருவரை உல்லாசத்திற்கு அழைத்த இந்திய அதிகாரி ஒருவரை உதைக்காத குறையாக எச்சரித்தது ஆஸ்திரேலிய அரசு. ஒலிம்பிக் முடிந்து கப்பலில் திரும்பினார் ஒரு அதிகாரி. இந்தியா வந்தவுடன் புலம்பினார். கப்பலில் வரும்போது ஏற்பட்ட புயல் காற்றில் கணக்கு வழக்கெல்லாம் பறந்து போய் கடலில் விழுந்து விட்டன என்று ஒரு குண்டை வீசி தனது திருட்டுக்களை மறைத்துக் கொண்டார்,

ஆஸ்திரேலியாவில், சில ஆண்டுகள் கழித்து நடந்த கிரிக்கெட் போட்டிக்காகச் சென்ற இந்திய அதிகாரி ஒருவர் ஓட்டல் வரவேற்பாளரான ஒரு பெண்ணிடம் முத்தம் கேட்கப்போய் - மானம் போய்விடுமே என மூடி மறைக்கப்பட்டது.

1966-ல் பாங்காக்கில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு - மல்யுத்தக் குழுவுடன் சென்றார் ஒரு அதிகாரி. அவன் தங்கியிருந்த விடுதிப் பெண்ணிடம் 'மல்யுத்தத்தில் இந்திய முறையிலான சில தந்திரங்களைக் கற்றுத் தருகிறேன்' என நைச்சியமாகப் பேசி அந்தப் பெண்ணின் தொடையைப் பிடித்திருக்கிறான். இவனின் கீழ்த்தரமான உள்நோக்கத்தை உணர்ந்து அந்த பெண் உடனே அபாய ஒலி எழுப்பி கூட்டம் கூட்டி விட்டார். 'நட்பு' நாட்டுக்கு அவமானம் நேர வேண்டாம் என தாய்லாந்து அரசு விசயத்தை அத்தோடு விட்டு விட்டது.

1972-ல் மியூனிச்சில் நடந்த ஒலிம்பிக் போட்டிக்குச் சென்ற இந்திய உயர்அதிகாரிகள் அனைவரும் வீரர்களை கவனிப்பது என்பதை விட்டு விட்டு தினமும் இரவு விடுதிகளில் ஆபாச நடனங்களைப் பார்பபதிலேயே பொழுதைக் கழித்தனர் என்பது பத்திரிகைகளில் நாறியது.

1984-ல் நடந்த லாஸ்ஏன்ஜில்ஸ் ஒலிம்பிக்கின்போது ஒரு அதிகாரி என் நேரமும் களியாட்ட விடுதிகளிலேயே இருக்கிறார் என்ற புகாரை ஒட்டி அப்போதைய இரயில்வே அமைச்சர் மாதவராவ் சிந்தியா அவரை வரவழைத்துக் கண்டித்தாராம்.

இப்படி, இவ்வளவு உரிமைகளையும் சலுகைகளையும் அதிகாரத்தையும் கொண்ட இந்திய அதிகாரிகளை ஒரு கோப்பை மது கூட குடிக்கக்கூடாது என சீன அரசு தடை செய்தால் நமது அதிகாரிகளுக்கு ஆத்திரம் வருமா வராது! வருவதும் நியாயம் தானே!

## பி.ஜே.பி. கலகம் ஏன்?

பம்பாய் சாகர் விமான நிலையத்திற்கு மராட்டிய மன்னன் சத்ரபதி சிவாஜியின் பெயரைச் சூட்ட வேண்டும் எனக் கோரி, சிவசேனா பாரதீய ஜனதாக் கட்சி இரண்டும் இணைந்து பெரிய பேரணியை நடத்தின. பேரணியில் சிவசேனா, பாரதீய ஜனதாக் கட்சிகளின் உயர் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற, மாநகராட்சி தலைவர்கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

'ஜெய் பவானி, ஜெய் சிவாஜி! சிவசேனை வாழ்க, சிவசேனை - பாரதீய ஜனதா கூட்டு வெல்க!' என்றவாறு முழக்கங்கள் எழுப்பி தங்களின் இனவாத, மதவாத அரசியலைக் கிளறி கலவரத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை ஆகஸ்ட் 9-ம் தேதி 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' தொடங்கிய தேதியில் இந்தியாவை விட்டு வெளியேறு என்று முஸ்லீம்களுக்கு எதிராக வெறியைத் தூண்டும் விதத்தில் திட்டமிட்டனர். ஆர்ப்பாட்டத்தில் பேசிய சிவசேனாத் தலைவர் கோபிநாத் முண்டே, இந்த சர்வதேச விமான நிலையத்திற்கு சிவாஜியின் பெயரைச் சூட்டவேண்டும்; ஏனெனில் இங்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள் அனைவரும் வணங்கிச் செல்ல வேண்டும் எனக் கூறினார்.

தமிழகத்தில் திண்டுகல்லுக்கு காயிதேமில்லத் பெயரை வைக்கக் கூடாது எனக் கலவரம் செய்யும் பாரதீய ஜனதா தலைமையிலான மத வெறியர்கள் எங்கும் மதவாதிகளின் பெயரை வைக்கவேண்டும் என்றும் கலகம் செய்கின்றனர்.

மதவெறியர்கள் அமைதியை அனுமதிக்கவில்லை. அமைதியை விரும்புவர் அவர்களை அனுமதிக்க கூடாது.

## சிவப்பு போயி காவி வந்தது டும் டும் டும்!

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம் அடித்து வீழ்த்தப்பட்டு முதலாளித்துவம் நிலை நாட்டப்பட்டது. இதை வைத்து கம்யூனிசம் காலாவதி ஆகிவிட்டது. ஜன நாயகத்திற்கு வெற்றி என புளகாங்கிதம் அடைந்தது முதலாளித்துவம். இதோ கிழக்கு ஜெர்மனியின் 'ஜனநாயகத்தைப்' பாருங்கள். சிவப்பு வண்ணம் மறைந்த பிறகு எங்கு பார்த்தாலும் காவி.

கிருஷ்ணா பக்த இயக்கத்தினர் காவி உடையுடன் வீதிகளில் திரிகின்றனர்.



→ 7

www.padippakam.com

**கலை இலக்கியம்**
**யாவும் மக்களுக்கே!**



- போர் : 8
- குரல் : 6, 7, 8
- நவ., டிச. '90; ஜன.'91.

உள்நாடு
தனிஇதழ் ரூ.2
ஆண்டுச்சந்தா ரூ.8

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
தனிஇதழ் ரூ.8.50
ஆண்டுச்சந்தா ரூ.34

படைப்புகள், சந்தா
அனுப்பவும், மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்:

சீனிவாசன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்,
சென்னை - 600 049.

# சாதி, மதவெறி பாசிச சக்திகளை முறியடிப்போம்!

நித்திய கண்டம் பூரண ஆயுசு என்கிற நிலையில் இருந்த வி.பி.சிங் தலைமையிலான ஜனதா தளம் - தேசிய முன்னணி அரசாங்கம் நிச்சயம் கவிழ்ந்துவிடும் கட்டத்துக்கு வந்து விட்டது. நாடு பலமுனை நெருக்கடிகளில் சிக்கித் திணறுகிறது. சாதி மத வெறிச் சக்திகளால் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படுகிறது. ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவோ, கைப்பற்றிக் கொள்ளவோ புதிய கூட்டுக்கள் - பேரங்களில் மும்முரமாக ஈடுபட்டுள்ள ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் இன்னொரு பொது இடைத் தேர்தல்களுக்கும் தயாரித்துக் கொண்டிருக்கின்றன.

லஞ்ச ஊழலுக்கு எதிரான புனிதப் போரில் பதவியையும், அரசியல் வாழ்வையும் கூடத் தியாகம் செய்யும் பரிசுத்தவன் என்கிற பாத்திரமேற்று கடந்த பொதுத் தேர்தல்களில் பதவியைப் பிடித்தார் வி.பி.சிங். பதினோரு மாதமாக பாரதீய ஜனதாக் கட்சியின் தயவில் அதிகாரத்தில் இருந்த அவர் இப்போது அக்கட்சியும் அதன் பின்பலமாயும் இயக்கு சக்தியாயும் உள்ள இந்து மதவெறி அமைப்புகளும்தான் நாட்டின் எதிரிகள் என்று பிரச்சாரம் செய்கிறார். அவைகளால் நாட்டின் மதச்சார்பின்மைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் பேராபத்து வந்துவிட்டது என்கிறார்.

அரசியல் ரீதியில் முற்றாகத் தனிமைப்படுத்தப்பட்டுத் தீண்டத் தகாத சக்தியாகத் தள்ளப்பட்டுவிட்ட போதும் பாரதீய ஜனதாக் கட்சி மற்றும் பிற இந்து மதவெறி அமைப்புகள் நாட்டின் அரசியலில் தீர்மானகரமான சக்தியாக வளர்ந்துவிட்டன. பேரழிவை விளைவிக்கும் இந்து மதவெறி நாசகார சக்திகளை அவை உசுப்பிவிட்டிருக்கின்றன. மதச் சார்பின்மை மற்றும் ஒருமைப்பாடு பற்றி இவ்வளவு காலமும் ஆண்டுவந்த எல்லாக் கட்சிகளும் அரசாங்கங்களும் எவ்வளவோ பிரச்சாரம் - இயக்கம் நடத்தி வந்த போதும் அவற்றுக்கு மக்களின் முழு ஆதரவும் இருந்த போதும் இப்போது இந்து மதவெறி அமைப்புகள் கணிசமான அளவு மக்கள் ஆதரவு பெற்று இருப்பதற்கு என்ன காரணம்? அடுத்தடுத்து வந்த ஆளும் கட்சிகள் மக்களின் நம்பிக்கை யிழந்து அவையும் அரசு இயந்திரமும் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், பயங்கரவாத ஒடுக்குமுறையின் சின்னங்களாகி விடும்போது, மக்களைப் புரட்சிக்கு வழி நடத்தும் தலைமையும் அமைப்பும் தயார்நிலையில் இல்லாதபோது - தவிர்க்க முடியாமல் மக்களில் ஒருபகுதியினர் மதவெறி அடிப்படை வாதத்தின் பக்கம் திரும்புகின்றனர்.

இப்படித்தான் ஈரானில் அயதுல்லா கொமைனி, பஞ்சாபிலே பிந்தரான்வாலே, பாகிஸ்தானிலே ஜியா வுல் அக் போன்றவர்களின் பின்னே மதவாத அடிப்படையில் ஆதரவு திரண்டது. ஒழுங்கும், கட்டுப்பாடும், தியாகமும் நிறைந்த, தூய - புனிதமான இயக்கமாக இந்த மதவெறி அமைப்புகள் தோற்றமளிக்கின்றன. மக்களது பிரச்சினைகளை, குறைகளைத் தீர்க்கவல்ல நவீன அவதாரங்களாக அவற்றின் தலைவர்கள் தெரிகிறார்கள். இந்த அடிப்படையில்தான் முல்லாக்கள், அயதுல்லாக்கள் போல இந்து மதவெறி மகாந்துகளும் (பூசாரிகள்) தர்மாச்சாரிகளும் (மடாதிபதிகள் - ஆதீனங்கள்) அரசியலில் குதித்துள்ளனர். ''முஜாகதீர்களை'ப் போல ராமபக்தர்கள் திரட்டப்பட்டுள்ளார்கள். ஆனால், இவர்கள் எல்லாம் நரபலி கேட்கும் - நரவேட்டையாடும் அவதாரங்கள் என்பதை நம் கண்முன்னே காண்கிறோம்.

இந்து மதவெறி அமைப்புகளுக்கு எதிராகப் போராடி வரும் மதச் சார்பின்மை மற்றும் ஒருமைப்பாட்டுச் சக்திகளாக ராஜீவ் கும்பலும் ஜனதா தளமும் கூறிக் கொள்கின்றன. ஆனால் பாசிச இந்திரா 1982 இல் ஜம்மு - காஷ்மீர் இடைத் தேர்தலில் துவக்கி வைத்ததிலிருந்து, 1989 பொதுத் தேர்தல்களுக்காக அயோத்தி ராமர் கோவிலுக்கு அடிக்கல் நாட்டுவிழா - பூசை நடத்த பாசிச ராஜீவ் அரசு இரகசிய ஒப்பந்தம் போட்டதுவரை இந்து மதவெறியைத் தூண்டி ஆதாயமடைவது காங்கிரசின் பகிரங்க தேர்தல் உத்தியாகிவிட்டது. இந்து மதவெறி அமைப்புகளுடன் தேர்தல் கூட்டுவைத்துக் கொண்டு அவற்றின் தயவில் பதினோரு மாத ஆட்சி நடத்தி வந்த வி.பி.சிங் கடைசி நிமிடம் வரை அதைக் காப்பாற்றிக் கொள்ளவே முயன்றார். இன்னொருபுறம் முஸ்லீம் மதவெறியர்களுடன் கூடிக் குலாவி சமரசம் செய்து கொண்டும், சாதிகளின் கூட்டமைப்பை உருவாக்கியும் மக்களைப் பிளவு படுத்தி ஆதாயமடையவே முயன்று வருகிறார். ஆனால், இப்போது நடப்பது மேல் சாதி இந்து மதவெறிச் சக்திகளுக்கு எதிராக கீழ்சாதி சிறுபான்மைப் பிரிவினர் மதச் சார்பின்மைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் நடத்தும் போராட்டமாகச் சித்தரிக்கிறார். ஆகவே உண்மையில் மதவெறிச் சக்திகளுக்கும் அவற்றுடன் மாறிமாறி சமரசம் செய்து கொள்ளும் பிற்போக்கு, சந்தர்ப்பவாத போலித்தனமானமதச் சார்பின்மைச் சக்திகளுக்கும் இடையிலான போராட்டமே உக்கிரமாகியிருக்கிறது. அதுவும் ஆட்சி அதிகாரத்தை யார் கைப்பற்றுவது என்பதற்காக!

நாட்டின் இப்போதைய சமூக, பொருளாதார, அரசியல் அமைப்பு முறை முழுவதுமே நெருக்கடிக்குள் சிக்கி இனிமேலும் நீடிக்க முடியாது என்கிற நிலை உருவாகியிருக்கிறது. பஞ்சாப், காஷ்மீர், அசாம் போன்ற பிரச்சினைகள் எதுவுமே தீர்க்கப்படவில்லை; அரசியல் கட்சிகளால் நிலையான ஆட்சியைத் தரமுடியவில்லை; இவற்றைவிட முக்கியமாக நாட்டின் அரசியல் நிர்ணயச் சட்டத்தை மதிக்க முடியாது, மீறியே தீருவோமென மதவெறி அமைப்புகள் பகிரங்கமாக அறிவித்து விட்டன. பணவீக்கம், பற்றாக்குறை, தேக்கநிலையிலே சிக்கியுள்ள பொருளாதாரம் வளைகுடா நெருக்கடியால் நிலைகுலைந்து நிற்கிறது. வருணாசிரம - பார்ப்பனிய சாதி, மத அடிப்படையிலான சமூக அமைப்பு அழுகி நாறுகிறது. இவை அனைத்தையும் தகர்த்து புதிய சமூக, பொருளாதார, அரசியல் அமைப்பை உருவாக்காமல் எவ்வளவு தேர்தல்கள், சீர்திருத்தங்கள் வந்தாலும் நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது!

படிப்பகம்



# இசுலாமிய மன்னர்கள் மதவெறியர்கள் என்றால் இந்து மன்னர்கள்...?

ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளை பாசிஸ்டுகள் எப்போதுமே விரும்புவதில்லை. அயோத்தி விவகாரத்தில் தற்போது பாபர் மசூதி இருக்கும் இடத்தில்தான் ராமன் பிறந்தான் என்றும் அவனுக்கு ஆலயம் கட்டப்பட்டிருந்தது என்றும் கூறி வரும் விசுவ இந்து பரிசத், பாரதீய ஜனதா போன்ற இந்து மதவெறி அமைப்புகள் ஆரம்ப காலத்தில் தங்களது கூற்றுக்கு ஆதாரம் காட்டுவது போல பொய்யையும் புனை சுருட்டுகளையும் கொஞ்சம் அவிழ்த்துவிட்டுப் பார்த்தார்கள். ''இதோ ஆதாரம்'' என்று வாதாடினார்கள். ஆனால் வரலாற்று ஆசிரியர்களும் ஜனநாயக உணர்வுள்ள அறிஞர்களும் அவற்றுக்கு எதிர்வாதங்களை வைத்து முறியடிக்க தொடங்கியவுடனே தங்கள் ராகத்தை மாற்றிக் கொண்டு விட்டனர், இந்து மதவெறியர்கள்.

அயோத்தியில் அவர்கள் குறிப்பிடும் இடத்தில்தான் ராமன் பிறந்தான் என்பதற்கு 'அசைக்க முடியாத' வரலாற்று ஆதாரம் இருப்பதாகக் கூறியவர்கள் ''சரி அவற்றை முன் வைத்து கோர்ட்டில் வாதாடுங்கள்'' என்றவுடனே ''இல்லையில்லை; இது ஒரு மதத்தினரின் நம்பிக்கை சம்பந்தப்பட்ட பிரச்சனை: இதன் மீதெல்லாம் கோர்ட் தீர்ப்பு வழங்க முடியாது'' என்று மாற்றிப் பேசத் தொடங்கிவிட்டனர். இந்து மத நம்பிக்கை கொண்டவர்களை வெறி கொள்ளச் செய்யும் வகையில் இப்போது பேசுகின்றனர்.

''ராமனுக்கு அயோத்தியில் கோயில் கட்டாமல் லண்டனிலா கோயில் கட்ட முடியும்?'' என்கிறார், அத்வானி. ''எல்லாம் வல்ல இறைவன் இராமனை கோர்ட் கூண்டில் வாதியாக நிற்க வைத்து வாதாடச் சொல்கிறீர்களா?'' என்று திசை திருப்புகிறார், விஸ்வ இந்து பரிசத் தலைவர் சிங்கால்.

அயோத்தி நகரில் எந்த இடத்திலும் கோயில் கட்டக்கூடாது என்று யாரோ தடை விதித்து விட்டதைப் போல அத்வானி பேசுவதில் நயவஞ்சகத்தனமும் பித்தலாட்டமும் வெளிப்படையாகத் தெரிகிறது. பாபர் மசூதி இருக்குமிடத்தில் தான் ராமன் பிறந்தானா? என்று கேட்டவுடன் ''கடவுளைக் கூண்டிலேறி தனக்காக வாதாடச் சொல்கிறீர்களா?'' என்று கேட்கும் சிங்காலையோ, விசுவ இந்து பரிசத்தையோ இராமனின் வக்கீலாக யார் நியமித்தார்கள்? அல்லது இந்து மதத்தினரின் பிரதிநிதியாக யார் தேர்ந்தெடுத்தார்கள்?

குருட்டு நம்பிக்கைகளையே தங்களது கோரிக்கைகளின் ஆதாரமாக வைக்கும் இவர்கள் வரலாற்றைத் திரிக்கும் வேலையை நிறுத்தி விட்டார்களா என்றால் இல்லை. அது ஒருபுறத்தில் நடந்து கொண்டு தானிருக்கிறது.

அக்டோபர் 30-ம் தேதி பாபர் மசூதியை இடிப்பதற்காக குஜராத் மாநிலம் சோமநாதபுரத்திலிருந்து தனது ரத யாத்திரையைத் துவங்கும் போது அத்வானி பேசியுள்ளதே இதற்கு ஆதாரம். ''சோமநாதபுரம் கோயிலை கஜினி முகமது மீண்டும் மீண்டும் படையெடுத்துக் கொள்ளையடித்தான். கோயிலை நாசம் செய்தான். இந்த வரலாற்று இழிவைத் துடைப்பதையே தனது முதல் கடமையாக எடுத்துக் கொண்ட சுதந்திர இந்தியாவின் உள்துறை அமைச்சர் வல்லபாய் படேல் இக்கோயிலை புனர் நிர்மாணம் செய்து தூய்மைப்படுத்தினார். அது முதல் கட்டம். தற்போது பாபர் மசூதி எனும் அவமானச் சின்னத்தைத் தகர்த்து ராமனுக்கு நாங்கள் கோயில் கட்டவிருப்பது இரண்டாவது கட்ட நடவடிக்கை. அன்று அதை எதிர்க்காதவர்கள் இன்று எங்களை மட்டும் எதிர்ப்பது ஏன்?'' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

**7-ம் நூற்றாண்டைச் சேர்ந்த திருஞான சம்பந்தர் பாண்டிய மன்னனை சமண மதத்திலிருந்து சைவமதத்திற்கு மதமாற்றம் செய்ததுடன் 8000 சமணர்களை கழுவிலேற்றிக் கொன்றார் என்பது வரலாறு. இந்த வரலாற்றுக் களங்கத்தை மதுரையிலும், சீர்காழியிலும் இன்றுவரை விழாவாகக் கொண்டாடி வருகிறார்கள் என்பது நாமறிந்ததே. 'இந்து' மதத்தினரின் ''சகிப்புத் தன்மைக்கு'' இன்னும் வேறென்ன சான்றுகள் வேண்டும்?**

காங்கிரசை மதசார்பற்ற கட்சியாகவும், படேல் போன்ற இந்து மதவெறியர்களை மத சார்பற்ற தலைவர்களாகவும் ஏற்று தலையில் வைத்துக் கூத்தாடிய போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட ஓட்டுக் கட்சிகளால் இதற்கு பதில் சொல்ல இயலவில்லை.

''பிரிட்டிஷார் மட்டுமல்ல முஸ்லீம்களும் அன்னியர்களே. அவர்கள் அன்னியர்கள் மட்டுமல்ல. இசுலாமிய மத வெறியர்கள். அதனால்தான் அவர்கள் இந்து கோயில்களைச் சூறையாடினார்கள். இடித்துத் தள்ளினார்கள். இந்த 'தேசிய அவமானத்தை'த் துடைத்தெறிய அவ்வாறு கோயில்களை இடித்துக் கட்டப்பட்ட மசூதிகளை எல்லாம் இப்போது இடிக்க வேண்டும். பழையபடி அங்கே கோயில்களை எழுப்ப வேண்டும்'' என்பதுதான் இந்து மத வெறியர்களின் தற்போதைய போர் முழக்கம்.

முஸ்லீம்கள் இந்த நாட்டுக்கு அன்னியர்கள் என்றால் ஆரியர்கள் மட்டும் என்ன? முஸ்லீம்களிலாவது மதம் மாறியவர்கள் பலர் உண்டு. ஆனால் ஆரியர்கள் யார்? முழுவதும் அன்னியர்கள் தானே!

இசுலாமிய மன்னர்கள் அனைவரும் மதவெறியர்களா? அதனால்தான் அவர்கள் இந்து கோயில்களை இடித்தார்களா? இந்து மன்னர்களும் மதத் தலைவர்களும் ஆர்.எஸ்.எஸ் கூறுவது போல சகிப்புத் தன்மை மிக்கவர்களா? அவர்கள் சக மதத்தினரை எவ்வாறு நடத்தினார்கள் என்பதற்கு சில வரலாற்று ஆதாரங்களை நாம் பார்ப்போம். அதற்கு முன் மன்னர்களின் காலத்தில் அரசியலில் மதத்தின் பாத்திரம் என்ன? மதசார்பின்மை என்பது அப்போது நிலவியதா என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

மன்னராட்சிக் காலத்தில் இங்கு மட்டுமல்ல; உலகெங்கிலுமே மதம் அரசியலுடன் பிரிக்க முடியாதபடி கலந்திருந்தது. மன்னனின் மதம் எதுவோ அதுவே அரசு மதமாக இருந்தது. பிற மதத்தினர் ஒடுக்கப்பட்டனர் அல்லது பாரபட்சமாக நடத்தப்பட்டனர். படையெடுப்புகள் நடத்தப்படும் போது வெற்றி கொள்ளப்பட்ட நாட்டினர் வேறு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பின் அவர்களுடன் சேர்ந்து அவர்களது மதத்தையும் ஒடுக்குவதென்பது அடக்குமுறையின் வடிவமாக இருந்தது. இதற்கு யாரும் விதிவிலக்கில்லை.

இன்று பேசப்படுகிற மதச்சார்பின்மை, அரசியலிலிருந்து மதத்தைப் பிரிப்பது

www.padippakam.com

என்ற கோட்பாடுகளெல்லாம் முதலாளித்துவ ஜனநாயக காலத்தின் கருத்துக்கள். மதச் சார்பின்மையைப் போலவே மதவெறி என்பதும் இன்றைய காலத்தில் தோற்றமெடுத்ததுதான். பல்வேறு மதங்களைச் சார்ந்த உழைக்கும் மக்களுடைய மதம் சம்பந்தப்படாத கோரிக்கைகளை - வர்க்க அடிப்படையிலான கோரிக்கைகளைத் - திசை திருப்புவதற்காக ஏகாதிபத்தியம் திட்டமிட்டே ஊட்டி வளர்த்ததே தான் மதவெறிக் கோட்பாடு. எனவே இசுலாமிய மன்னர்களெல்லாம் மதவெறியர்கள் என்று பிரச்சாரம் செய்து அதன் மூலம் இந்து மதவெறியைத் தூண்டி அதிகாரத்தைப் பிடிக்க திட்டமிடும் ஆர்.எஸ்.எஸ்ஸின் சதியை முறியடிக்க இந்து மன்னர்களின் 'சகிப்புத் தன்மைக்கு' சில வரலாற்று உதாரணங்களை மட்டும் பார்ப்போம்.

கஜினி முகமது மற்ற பல கோயில்கள் இருக்க சோமநாதபுரத்தை மட்டும் ஏன் கொள்ளையடிக்க வேண்டும்? 11-ம் நூற்றாண்டின் துவகத்திலேயே இந்த ஆலயத்திற்கு 10,000 கிராமங்களும், 500 தேவதாசிகளும், 300 முடி திருத்துபவர்களும் சொந்தமாக இருந்தனர். மற்ற சொத்துக்களைப் பற்றி சொல்லத் தேவையில்லை. எனவே இந்து மதத்திற்கெதிரான வெறியல்ல கஜினியின் கொள்ளைக்கு காரணம்; மாறாக சோமநாதபுரம் ஆலயத்தின் சொத்துதான். இத்தகைய கொள்ளையை இந்திய வரலாற்றில் இசுலாமியர்கள் மட்டும்தான் செய்தார்களா என்றால் இல்லை.

**11-ம் நூற்றாண்டின் இறுதியில் காஷ்மீர் பகுதியை ஆண்டுவந்த ஹர்ஷன் என்னும் இந்து மன்னன் தனது அரசவையில் விக்கிரகங்களைத் திருடுவதற்கென்றே ஒரு இலாகாவையும் அதற்கு ஒரு அதிகாரியையும் (தேவோத்பாதனா) நியமித்திருந்தான்.**

11-ம் நூற்றாண்டின் இறுதியில் காஷ்மீர் பகுதியை ஆண்டு வந்த ஹர்ஷன் என்னும் இந்து மன்னன் தனது அரசவையில் விக்கிரகங்களைத் திருடுவதற்கென்றே ஒரு இலாகாவையும் அதற்கு ஒரு அதிகாரியையும் (தேவோத்வாதனா) நியமித்திருந்தான். மூட நம்பிக்கைகளையும் பொய்களையும் பரப்புவதன் மூலம் மக்களிடம் பணம் வசூல் செய்யலாம் என்று சாணக்கியனின் அர்த்த சாஸ்திரம் மன்னனுக்கு ஆலோசனை வழங்குகிறது.

ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டு மக்கள் தனது மதத்தையே சேர்ந்தவர்களாக இருந்தாலும் அங்கிருந்த கோயில்களை இந்து மன்னர்கள் சூறையாடினார்கள். இதற்கு காரணம் கோயில்களில் விலைமதிப்பற்ற பொக்கிஷங்கள் நிறைந்து கிடந்ததுதான். இப்படிக் கொள்ளையடிப்பதை கஜினி மட்டும் செய்யவில்லை; ராஜராஜ சோழன் முதல் ஹர்ஷன் வரை அனைவரும் செய்தனர்.

இசுலாமியர் ஆட்சியை எதிர்த்தனர் என்பதற்காக ஆர்.எஸ்.எஸ். கும்பலால் புகழ் பாடப்படும் சிவாஜி போன்ற மராத்திய மன்னர்கள் வங்காளத்திலும், ஒரிசாவிலும் இந்துக்களைக் கொன்று குவித்ததையும், கொள்ளையடித்ததையும் என்னவென்று சொல்வது?

இந்து மன்னர்கள் மட்டுமல்ல; மதப் பெரியார்கள் என இன்று வழிபடப்படுகின்ற 'அன்பின் திருவுருவான' ஆழ்வார்களும், நாயன்மார்களும் என்ன செய்தார்கள்? தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருமங்கையாழ்வார் நாகை புத்த விகாரத்திலிருந்து தங்கத்தினாலான புத்தர் சிலையைத் திருடி உருக்கி விற்று ஸ்ரீரங்கம் கோயில் திருப்பணிக்கு 'நன்கொடை' கொடுத்திருக்கிறார் அவரது பாடல்களில் ஜைனர்களுக்கும், புத்தர்களுக்கும் எதிரான தாக்குதல் நிரம்பி வழிகிறது.

சொத்துக்களைக் கொள்ளையிடுவது ஒருபுறமிருக்க மற்ற மதத்தினரை ஆயிரக்கணக்கில் கொன்று குவிப்பதிலும் 'இந்து' மன்னர்கள் முன்னணியில் நின்றனர்.

7-ம் நூற்றாண்டில் மேற்கு வங்கத்தின் ஒரு பகுதியை ஆண்டு வந்த சைவ மதத்தைச் சேர்ந்த சசாங்கன் என்ற மன்னன் புத்த மதம் தழைத்தோங்கிய 47 நகரங்களை



அத்வானியின் ரதயாத்திரை எதிரொலியாக உ.பி. மாநிலம் கோண்டா மாவட்டத்தில் இந்துமத வெறியர்களால் கொலை செய்யப்பட்ட முஸ்லீம்கள் - ஒன்றுமறியா இளம் சிசுக்கள்.

www.padippakam.com

(உ.பி. மாநிலத்தில்) பூண்டோடு ஒழித்தான். புத்தருக்கு ஞானோதயம் ஏற்பட்டதாக சொல்லப்படுகின்ற போதி மரத்தை வெட்டித் தள்ளினான். அவனுக்குமுன் 5-ம் நூற்றாண்டைச் சேர்ந்த அஜாதசத்ரு என்ற மன்னனும் இவ்வாறே புத்த மதத்தினரை வேட்டையாடினான்.

மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் சுங்க வமிச ஆட்சியைத் தோற்றுவித்த புஷ்யமித்திர சுங்கன் எனும் பார்ப்பன மன்னன் ''ஒரு புத்த பிக்குவின் தலைக்கு நூறு பொற்காசுகள்'' என்று பகிரங்கமாக பிரகடனம் செய்து புத்த மதத்தினரை ஒடுக்கினான்.

7-ம் நூற்றாண்டைச் சேர்ந்த திருஞான சம்பந்தர் பாண்டிய மன்னனை சமண மதத்திலிருந்து சைவ மதத்திற்கு மத மாற்றம் செய்ததுடன் 8,000 சமணர்களைக் கழுவிலேற்றிக் கொன்றார் என்பது வரலாறு. இந்த வரலாற்றுக் களங்கத்தை மதுரையிலும், சீர்காழியிலும் இன்று வரை விழாவாகக் கொண்டாடி வருகிறார்கள் என்பது நாமறிந்ததே. 'இந்து' மதத்தினரின் ''சகிப்புத் தன்மைக்கு'' இன்னும் வேறென்ன சான்றுகள் வேண்டும்?

பார்ப்பன ஆதிக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கிய ஒரே காரணத்திற்காக புத்த மதத்தினரை பார்ப்பனர்களும் அவர்களால் வழிகாட்டப்பட்ட மன்னர்களும் துன்புறுத்தினர். புத்த பிக்குகளில் முக்கியமானவரான நாகார்ஜுனரின் பெயரால் அமைந்த ஒரு புத்த விகாரத்தைத் தகர்த்துத் தரைமட்டமாக்கி அங்கேயிருந்த புத்த பிக்குகளை கொன்று குவித்தனர் பார்ப்பனர்கள். இதற்குத் தலைமை தாங்கி நடத்திச் சென்றவர் முதல் சங்கராச்சாரி என்பது குறிப்பிடத் தக்கது.

புத்த மதத்தின் மீது பார்ப்பன மதத்தினர் (அதாவது இந்து மதத்தினர்) கொண்டிருந்த வெறுப்பு அளவு கடந்தது. 11-ம் நூற்றாண்டில் துருக்கியர்கள் (இசுலாமியர்கள்) படையெடுத்து வந்த போது அவர்களை 'போதிசத்துவர்கள்' என்று கூறி வரவேற்றது யார் தெரியுமா? பார்ப்பனர்கள்தான். யாரோடு கூட்டு சேர்ந்தாவது பௌத்த மதத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதில் அவர்களுக்கு இருந்த வெறிக்கு இது ஒரு உதாரணம். 11-ம் நூற்றாண்டைச் சேர்ந்த 'சூன்ய புராணம்' எனும் வடமொழி நூல் இதற்கு ஆதாரமாக உள்ளது.

புத்த, சமண மதங்களை எதிர்ப்பதில் மட்டுமல்ல; சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சௌரம், காணாபத்யம் போன்ற 6 மதப்பிரிவுகளும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்வதிலும் படுகொலை செய்து கொள்வதிலும் கூட மூர்க்கமாகவே இருந்தனர். ('இந்து' என்றொரு மதம் இருந்



ததில்லை. வருணாசிரம தருமம் தான் 'இந்து' மதம் என்று பின்னர் அழைக்கப்பட்டது. ஆனால் வழிபாட்டு முறைகளின் அடிப்படையில் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளும் பல்வேறு மதங்கள் இந்தியாவில் நிலவின.)

வைணவ மதத்தைச் சார்ந்த ராமானுஜரும் அவரது சீடர்களும் சோழ மன்னர்களால் துன்புறுத்தப்பட்டனர்; வேட்டையாடப்பட்டனர். கி.பி. 1098 முதல் 1122 வரை ஸ்ரீரங்கத்தை விட்டு ராமானுஜர் கர்நாடக மாநிலத்திற்கு ஓட வேண்டியிருந்தது. அங்கே ஹொய்சாள மன்னனை சமண மதத்திலிருந்து வைணவ மதத்திற்கு மத மாற்றம் செய்து அவனது தயவில் காலம் கழிக்க வேண்டி வந்தது.

வைணவத்திற்கும், சைவத்திற்கும் நடந்த மோதல்களுக்கும், வைணவத்திலேயே வடகலை, தென்கலை ஆகிய இரு உட்பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற ஆயுத மோதல்களுக்கும் வரலாற்றில் ஏராளமான ஆதாரங்கள் உண்டு.

ஏன்? முகலாயப் பேரரசைத் தாக்கி அழித்த தைமூர் கூட ஒரு இசுலாமியன் தானே!

இந்துக்களுடன் சேர்ந்து விட்டதால் முகலாயர்களின் புனிதம் கெட்டுவிட்டதென்றும் அதனால்தான் அவர்கள் மீது படையெடுப்பதாகவும் அன்று தனது ஆக்கிரமிப்புக்கு நியாயம் கற்பித்தான் துருக்கியனான தைமூர். முஸ்லீம் மத வெறியன் என இன்று ஆர்.எஸ்.எஸ். கும்பலால் அவதூறு செய்யப்படும் திப்பு சுல்தான் எவ்வாறு முறியடிக்கப்பட்டான்? திப்புவை ஒழித்துக்கட்ட பிரிட்டிஷாருக்கு உதவியவர்கள் யார்? 'இந்து'க்களான மராட்டிய மன்னர்களும், முஸ்லீமான ஐதராபாத் நிஜாமும் தானே! ஆர்.எஸ்.எஸ். ''தேச பக்தர்கள்'' இதற்கு என்ன விளக்கம் சொல்வார்கள்?

வரலாற்று நிகழ்வுகளில் இருந்து இன்னும் ஏராளமான உதாரணங்களை நாம் காட்டவியலும். இந்த உதாரணங்களெல்லாம் இசுலாமிய மதத்தைச் சேர்ந்த சில மன்னர்கள் 'இந்து' மதத்தினர் மீது நடத்திய அடக்கு முறைகளை நியாயப்படுத்துவதற்காக கொடுக்கப்பட்டவை அல்ல; மாறாக இசுலாமியர்கள் மட்டுமல்ல; இந்து மன்னர்களும் அவ்வாறுதான் நடந்து கொண்டார்கள் என்பதை நிரூபிக்கத்தான். சொல்லப் போனால் இசுலாமியர்கள் 'இந்து' மதத்தினரிடம் காட்டிய சகிப்புத் தன்மையில் நூற்றிலொரு பங்கைக் கூட சமண, புத்த மதத்தினரிடம் இந்து மன்னர்களும், மதத் தலைவர்களும் காட்டவில்லை என்பதுதான் வரலாற்று உண்மை.

இசுலாமியர்களால் கறைபடுத்தப்பட்ட வரலாற்றைத் துடைத்து சுத்தம் செய்யப் போவதாகக் கூறும் ஆர்.எஸ்.எஸ். 'இந்து' மன்னர்கள் தோற்றுவித்த கறைகளைக் கழுவ எத்தனை கோயில்களை இடிக்கத் தயாராக இருக்கிறது?

மன்னர்களின் நாடு பிடிக்கும் வெறி, பொன்னாசை, மண்ணாசை ஆகியவற்றில் இருந்து விலகி நின்று தங்களுக்குத் தெரிந்த வகைகளில் எல்லாம் (அவை மூட நம்பிக்கைகளாயினும்) பல்வேறு மதத்தைச் சேர்ந்த மக்கள் மத நல்லிணக்கத்தையும் ஒற்றுமையும் தோற்றுவித்து வளர்த்து வந்திருக்கிறார்கள். வடக்கே ஆஜ்மீரிலிருந்து தெற்கே நாகூர் வரை இந்துக்களும், முஸ்லீம்களும் இணைந்து வழிபடும் இடங்கள் ஏராளமாக உள்ளன. துருக்கியர்கள், ஆப்கானியர்கள், பத்தானியர்கள், பாரசீகத்தினர், அராபியர்கள் போன்ற பல்வேறு இனங்களைச் சேர்ந்த இசுலாமியர்களும் பல்வேறு இனங்களைச் சேர்ந்த 'இந்து' மதத்தினரும் இணைந்து இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சியில், கலை, இலக்கியங்களின் வளர்ச்சியில் கணிசமான பங்காற்றியுள்ளனர்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் காங்கிரஸ் கட்சியிலும் பிறகு முஸ்லீம் லீக்கிலும் இருந்த அப்துல் ரகுமான் சித்திக் என்பவர் ஒருமுறை கூறினாராம்: ''ஒரு இந்து இறந்து விட்டால் அவனது உடலை எரித்து சாம்பலை நதியில் கலந்து விடுகிறார்கள். அந்த ஆற்று நீரோட்டம் சாம்பலை எங்கு கொண்டு சேர்க்குமோ அது கடவுளுக்கே வெளிச்சம். ஆனால் ஒரு முஸ்லீம் இறந்து விட்டால் அவனுக்கு ஆறடி நீளம், மூன்றடி ஆழமுள்ள குழி ஒன்று தேவைப்படுகிறது. அவன் பிறப்பிலும், இறப்பிலும் இந்த நாட்டைச் சேர்ந்தவன்தான்''

வரலாறு அனைவருக்கும் புரிகின்ற மொழிகளில்தான் எழுதப்பட்டுள்ளது. ஒரு வேளை ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறியர்களுக்கு அவை புரியவில்லை என்றால் அவர்களுக்கு புரிகின்ற மொழியில் நாம் பதில் சொல்வோம்!

**சூரியன்**

இன்று பேசப்படுகின்ற மதசார்பின்மை, அரசியலிலிருந்து மதத்தைப் பிரிப்பது என்ற கோட்பாடுகளெல்லாம் முதலாளித்துவ ஜனநாயக காலத்தின் கருத்துக்கள். மதசார்பின்மையைப் போலவே மதவெறி என்பதும் இன்றைய காலத்தில் தோற்றமெடுத்ததுதான். பல்வேறு மதங்களைச் சார்ந்த உழைக்கும் மக்களுடைய மதம் சம்பந்தப்படாத கோரிக்கைகளை - வர்க்க அடிப்படையிலான கோரிக்கைகளைத் - திசை திருப்புவதற்காக ஏகாதிபத்தியம் திட்டமிட்டே ஊட்டி வளர்த்ததுதான் மதவெறிக் கோட்பாடு.

www.padippakam.com

ஆனந்த மார்க்கிகளும், செக்ஸ் சாமியார் ரஜனீஷின் சீடர்களும் எங்கும் காணப்படு கின்றனர். ஆழ்நிலைத் தியானம் சொல்லித் தரப்படுகிறது. சுவரில் ஒட்டப்பட்டுள்ள சுவ ரொட்டிகளிலிருந்து அன்னை நிர்மலா தேவி அருள்வாக்குகளை வழங்குகிறார். யோகா, புத்தமத தத்துவம், இஸ்லாமியக் குழுக்கள் தங்கள் ஆன்மீகக் கருத்துக்களை எங்கும் பரப்புகின்றனர்.

கிழக்கு ஜெர்மனியில் சமீப காலம் வரை தடை செய்யப்பட்ட நவீன மதக் குழுக் கள் பெர்லின் சுவர் உடைக்கப்பட்டதும் மடை திறந்த வெள்ளமென, ஆன்மீகத் தேவையால் காய்ந்த இடத்தில் பாய்ந்திருக் கின்றன. கீழ்த்திசை மதக் குழுக்கள் மட்டு மன்றி கிருத்துவ அடிப்படையிலான சுதந்தி ரத் தாக கொள்கையைப் பரப்பும் நிலாக் குழு, 'கடவுளின் குழந்தைகள்', 'அன்புக் குடும்பம்' ஆகிய அமைப்புகள் இப்போது நுழைந்துள்ளன. ஜெர்மன் ஆதிக்கக் கடவு ளர்களான உட்டன், ஓடில், ஆகியவற்றை யும் அவற்றின் சிஷ்யக் கடவுள்களையும் சிலர் வழிபடத் தொடங்கியுள்ளனர்.

இன்னும் ஒருபடி மேலே போய் மனித குரங்கு பாரம்பரியத்தை நடைமுறையில் கடைபிடிக்கும் 'புதிய ஜெர்மன்' குழுக்க ளும் தோன்றியுள்ளன. இவற்றிற்கெல்லாம் சிகரமாக ஜெர்மனிய இனமே உயர்ந்தது. அதன் தூய்மையைப் பாதுகாக்க வேண்டும் என்ற இனவாதம் மேலோங்கி வருகின்றது.

கிழக்கு ஜெர்மனியில் வீசும் 'ஜனநாய கக் காற்று' பாசிசப் புயலாக உருவாகப் போகிறது. மீண்டும் ஒரு ஹிட்லரை உலகம் சந்திக்கப் போகிறது.

## அமெரிக்க ரகசியம்!

சென்ற ஆகஸ்ட் மாதம் அமெரிக்க தூதர் வில்லியம் கிளார்க் பஞ்சாப் பயணம் மேற்கொண்டார். அகாலி தளத்தின் ஒரு பிரி வின் தலைவரான சிம்ரஞ்சித்சிங் மான் அமெரிக்கா அரசுக்கு ஒரு விண்ணப்பத்தை தூதரிடம் கொடுத்தார். அதில் தனது ஏகாதி பத்திய விசுவாசத்தை பகிரங்கமாக அறிவித் துள்ளார்.

'சீக்கியர்களின் சுய நிர்ணய உரி மையை அமெரிக்கா மதிக்க வேண்டும்'

சீக்கிய தேசமும், சிரோமணி அகாலித ளமும் சுதந்திரப் பொருளாதாரக் கொள்கை யையே ஆதரிக்கும். ஆகவே இப்போதே பஞ்சாப் மாநிலத்தில் மூலதனமிடவும், பெரிய தொழில்களைத் தொடங்கவும் வேண்டும்.

பஞ்சாபில் கல்வி, மருத்துவ நிலையங் களை அமெரிக்கா தொடங்க வேண்டும். அமிர்தசரசுக்கும் அமெரிக்காவுக்கும் நேரடி விமான வசதியைத் துவக்க வேண்டும். அமெரிக்க வானொளிக் கழகங்கள் விண் கோள் மூலம் பஞ்சாபுக்கு நேரடியாக ஒளிப ரப்பு வசதி ஏற்படுத்த வேண்டும்.

மான், அவர் கட்சியின் செயலாளர் ராம்சிங், பத்திரிகைச் செயலர் ஜக்மோகன் சிங், ஆகியோர் கையெழுத்திட்ட 15 பக்க அறிக்கையில் விண்ணப்பித்து இருப்பவை தான் இவை.

காலிஸ்தானிகள் தனி நாடு கேட்பது அமெரிக்காவிடம் அடகு வைக்கத்தான்.



## என்ன தொடர்பு?

லட்சக் கணக்கான மக்களுக்கு தோழர் லெனின் அறை கூவல் விடும் காட்சி, பக்கத் திலேயே...

'உலக நுகர்வோரே எழுக!' என்ற தலைப்பில் ஒரு விளம்பரம். விளம்பர வாச கம் இதுதான்.

''இன்றைய நுகர்வோர் நெவில் சேம்பர்லின் அல்ல. சர்ச்சிலைப் போல் இறுதிவரை போராடுபவர். இன்றைய நுகர்வோர் வேறு படுத்திப் பார்த்து தேர்வு செய்யும் தன்மை யுள்ளவர்.


அதிக வாங்கும் சக்தி - உயர்ந்த அபி லாசைகளுடன் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் இருப்பதால், போலியை வீழ்த்தும் பலம் இருக்கிறது. இப்படி போலி பன்னாட்டுக் கம்பெனிப் பொருட்களுடன் மோகம் உள் நாட்டுப் பொருட்கள் தரும் இலவசம், நிர்மா, சர்ப் பவுடர் போட்டி, கோல்கேட், ப்ராமிஸ் இவற்றுக்கிடையே நெஸ்கேப் கோல்ட் கேப் விளம்பரச் சண்டை''

என சந்தையில் நடக்கும் வணிகப் போட்டி பற்றி கவிதையில் எழுதி நுகர்வோருக்குத் தேவையான அனைத்துச் செய்திகளையும் தரும் பத்திரிகை - எக்கனாமிக் டைம்ஸ் புதன் தோறும் வெளியிடும் 'BRAND EQUITY' வாங்குங்கள்'' எனக் கேட்கிறது இந்த விளம்பரம்.

இந்த விளம்பரத்திற்கும் தோழர் லெனி னுக்கும் என்ன சம்பந்தம்? சந்தைப் பொரு ளாதாரத்தை அருவெறுப்பான முதலாளித்து வத்தை வேறோடும் வேறடி மண்ணோடும் வீழ்த்தியவர் லெனின். ஆனாலும் லெனின் படத்தை முதலாளிகள் பயன்படுத்துகின்ற னர். வெறும் விளம்பரத்திற்காக அல்ல. முத லாவதாக 'கம்யூனிசம் தோற்றுவிட்டது', சந் தைப் பொருளாதாரம் ரஷ்யாவிலும் வந்து விட்டது. என்பதைச் சுட்டிக் காட்ட. இரண் டாவது, லெனினியம் என்ற சொல்லின் பொருட் செறிவை நீற்றுப் போகச் செய்ய.

## எது குருபீடம்?

சென்ற ஆகஸ்ட் மாத மத்தியில் லண்ட னில் தனது பிறந்த நாளைக் கொண்டாடி




னார், சர்வதேச ஆயுத வியாபாரியும், கடத் தல்காரனுமான ஆதனான் கஷோகி. ராஜீவ் காந்தியின் பீரங்கி ஊழலிலும் சம்பந்தப்பட் டவர், இந்த கஷோகி. இவரின் பிறந்த நாளுக்கு வாழ்த்துச் சொல்லும் தலையாய கடமையை நிறைவேற்ற இந்தியாவிலிருந்து இருவர் லண்டனுக்குப் பறந்து சென்றனர். ஒருவர் கஷோகியின் வியாபாரக் கூட்டாளி யும் ஆயுதபேர ஊழலில் முக்கியத் தரகனு மான சந்திரசுவாமி இன்னொருவர் இந்திய அரசியல்வாதிகளின் ஊழலை ஒழித்து 'தூய அரசியலை நிலை' நாட்ட பழைய ஜனதா கட்சியை தலைமை தாங்கி நடத்தும் சுப்பிரம ணிய சுவாமி.

சர்வதேச கடத்தல் கூட்டம் தான் நமது தேசத் தலைவர்களின் வழிகாட்டிகள்.

## கள்வரே நல்லாசிரியராய்...!

பீகார் மாநிலம்; அராவில் உள்ள செகாத்ரியா பள்ளியின் தலைமை ஆசிரியர் சீதாராம்சிங். இவருக்கு இவ்வாண்டு ஜனா திபதியின் நல்லாசிரியர் விருது வழங்கப்பட் டது. கல்வித் துறையில் தலைசிறந்த சேவைக்காக ஆசிரியர்களுக்காக வழங்கப் படும் உயர் பரிசு இது.

சீதாராம்சிங் சுமார் பன்னிரெண்டு கிரி மினல் வழக்குகளில், நேரடியாக சம்பந்தப் பட்டவர். அதோடு தனது சக ஆசிரியர்கள் ஆறு பேர் சேர்ந்து சீதாராம் சிங் மீது தொடுத்த வழக்கை லோக் ஆயுக்தா (மக்கள் நீதிமன்றம்) விசாரித்து வருகிறது.

1983-ல் பீகார் அரசு ஜனாதிபதி விரு துக்கு சீதாராம் சிங் பெயரை சிபாரிசு செய் தது. ஆனால் கடுமையான பொதுமக்கள் எதிர்ப்பால் மத்திய அரசு அவர் பெயரை விருது பட்டியலில் இருந்து நீக்கியது.

பீகார் மாநில அரசியலில் அடி முதல் நுனி வரை கிரிமினல்கள் நிறைந்திருக்கும் போது 'நல்லாசிரியர்' மட்டும் எங்கிருந்து கிடைப்பார்?

www.padippakam.com

# மேல்சாதி வெறியர்களின் 'திறமை'யான கட்டுக்கதை!

மண்டல் கமிசன் அறிக்கை அமலாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டவுடனே பார்ப்பனிய பனியா பத்திரிக்கைகளும், மேல்சாதி 'அறிவாளிகளும்' நாட்டின் 'முன்னேற்றம்' பற்றி ரொம்பவும்தான் கவலைப்படத் தொடங்கி விட்டார்கள். ஒரு குறிப்பிட்ட பதவிக்குப் பொருத்தமான, தேவையான திறமை இல்லாதவர்களுக்கு, குறிப்பிட்ட சாதியில் பிறந்தவர்கள் என்ற காரணத்திற்காக வேலை கொடுத்தால் நாடு குட்டிச்சுவராகிவிடும் என்பதுதான் இவர்களுடைய கவலை. முதல்பிரிவு (உயர்) அதிகாரிகள் சங்கம் தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளிட்டு யாருக்கும் எந்தத்துறையிலும் இடஒதுக்கீடு தரப்படக் கூடாது என்று தீர்மானம் போட்டுள்ளது.

தகுதியும் திறமையும் பிறப்பினால் தீர்மானிக்கப்படுவதா? தகுதியையும், திறமையையும் அளிப்பதற்கான அளவுகோல் என்ன? மேல்சாதியினர் கூறுவதுபோல 'தகுதியற்றவர்கள்' அரசுப் பணிகளுக்கு வருவதால் நாடு முன்னேற்றம் காணாதா? 'தகுதியானவர்களும், திறமையானவர்களும்' அரசுப்பணிகளில் இருந்தால் நாடு முன்னேறிவிடுமா?

ஒரு தனிமனிதனின் சமூக அந்தஸ்தும், திறமையும் அவனது பிறப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதல்ல என்பது சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும் நடைமுறையில் இன்று மேல்சாதி வெறியர்கள் வைக்கும் வாதங்களெல்லாம் இந்த அடிப்படையிலானவையே. தெரிந்தெடுத்த உயர்குடி ஆண்களுக்கும், பெண்களுக்கும் பிறந்த ஒரு தனிவகைச் சாதி மட்டும்தான் ஆளும் தகுதியுடையது என்றான் பிளாட்டோ. ஆரிய இனம் மட்டுமே ஆளும் தகுதி படைத்தது என்றும் ஜெர்மானியர்கள் மட்டுமே தூய்மை கெடாத ஆரியர்கள் என்றும் கூறினான் இட்லர். அவர்களிலேயே வலிமையான ஆண்களையும், பெண்களையும் கூடச்செய்து அவர்களுக்குப் பிறக்கும் சந்ததிகளை வைத்து உலகைக் கட்டியாளத் திட்டமும் தீட்டினான். தனது இந்தக் கோட்பாடுகளை சில கூலி விஞ்ஞானிகளைக் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தி, ஆதரிக்கச் செய்து இதற்கு அறிவியல் அந்தஸ்து கொடுக்கவும் முயன்றான்.

இட்லருக்கு எதிராகவும் பாசிசத்துக்கு எதிராகவும் போராடிய ஜனநாயகவாதிகள் என்று பீற்றிக் கொள்ளும் பிரிட்டிஷ்காரர்கள் இந்தியர்களுக்கு ஆளத்தெரியாது என்றும் தாங்கள் ஆளக் கற்றுக் கொடுப்பதாகவும் கூறியபோது பார்ப்பன சனாதனிகளான திலகர் போன்றோர் 'கொதித்தனர்'. ஆனால் திலகரின் வாரிசுகளான மேல்சாதி வெறியர்கள் இன்று இடஒதுக்கீட்டுக்கு எதிராக வைக்கும் வாதங்கள் எல்லாம் அடிப்படையில் இட்லரும், வெள்ளையனும் வைத்த வாதங்களே தான். வார்த்தைகள் மட்டும்தான் வேறு.

''பரயனும், பள்ளனும் அதிகாரியானால் நாடு உருப்படுமா?'' என்று தங்களுக்குள் தனியே பேசிக்கொள்பவர்கள் எழுதும்போது மட்டும் கொஞ்சம் சர்க்கரை தடவி அதையே வேறுவிதமாக சொல்கிறார்கள். சமூகவியல் நோக்கில் இது அப்பட்டமான சாதிவெறி என்பது ஒருபுறமிருக்க பிறப்பினால் 'தானாக' வரும் திறமை குறித்த பித்தலாட்டக் கோட்பாடுகளை உலகெங்குமுள்ள விஞ்ஞானிகள் பலநூறு முறை முறியடித்திருக்கிறார்கள். நீக்ரோ இன மக்களிடையே தோன்றிய ஆயிரக்கணக்கான அறிஞர்கள் வெள்ளை நிறவெறியர்களின் அகங்காரத்துக்கு ஆப்பறைந்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து தோன்றிய, தோன்றி வருகின்ற ஏராளமான அறிஞர்களும் விஞ்ஞானிகளும் பார்ப்பன, மேல்சாதி வெறியர்களின் திமிரை அடக்கி வருகிறார்கள்.

எனவேதான், கடைந்தெடுத்த சாதிவெறியர்களான இவர்கள் ''திறமை இருப்பவர்கள் வரட்டும், எந்தச் சாதியாய் இருந்தாலென்ன?'' என்று நைச்சியமாகப் பேசுகிறார்கள்.

திறமையின் இலக்கணம் எக்காலத்திலும் மாறாத நிரந்தரத் தன்மை கொண்டதல்ல; ஏரும் கலப்பையும் பழங்காலம் - டிராக்டர் நவீன காலம்; ஈட்டியும் வாளும் பழங்காலம் - பீரங்கியும் துப்பாக்கியும் நவீன காலம். இவற்றைக் கையாள்வதற்கான திறமையும், கையாள்வோருக்குக் கிடைக்கும் வருவாயும் சமூக அந்தஸ்தும் வேறுபடுகின்றன. எனினும், இக்கல்வியைப் பெற வாய்ப்பற்றவர்களெல்லாம் இவ்வேலைகளுக்குத் தகுதியற்றவர்கள் என்று பொருளல்ல. உரிய கல்வித் தகுதி இருந்தும் 'பொருளாதாரத் தகுதி' இல்லாத ஒரே காரணத்தால் உயர்கல்வி கற்கும் வாய்ப்பிழந்தவர்களை எந்தக் கணக்கில் சேர்ப்பது?

வாங்கும் சம்பளத்தையும், அந்தஸ்தையும், அதிகாரத்தையும் வைத்து அல்ல; எந்த தகுதியும் திறமையும் நாட்டின் முன்னேற்றத்தையும் மக்களின் வாழ்க்கையையும் முன்னேற்றுவதற்கு உதவியாக இருக்கிறதோ அதுவே உயர்வானதாக மதிப்பிடப்பட வேண்டும். அந்த அடிப்படையில் நாட்டின்




சமூகமாகத் தீர்த்து விட்டேன். அரசுப் போக்குவரத்து பஸ்களின் 7 சதவீதத்தை அவர்கள் கொளுத்திக் கொள்ளலாம் என்று ஒதுக்கீடு செய்து விட்டேன்.



படிப்பகம்

www.padippakam.com

முன்னேற்றத்தில், அர்ப்பணிப்பு மிகுந்த தகுதியும் திறமையும் பிரதானமாக மக்களின் உழைப்பில் தான் தங்கியிருக்கிறது. இந்த அடிப்படையில் தான் நாம் திறமையையும் தகுதியையும் மதிப்பிட முடியும்.

தகுதி, திறமையை இந்த அடிப்படையில் பார்க்காது அரசுப் பணிகளில் பங்கேற்கும் அதிகார வர்க்கத்தின் தகுதி, திறமையைப் பற்றிப் பேசுகிறார்கள். அதனால்தான் மண்டல் கமிசன் சிபாரிசை எதிர்க்கக் கூடிய மேல் சாதியைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவர்கள் இந்த வாதத்தை முன் வைக்கிறார்கள். அதாவது இன்ன சாதியில் பிறந்தவர்கள் என்பதற்காக, தகுதி, திறமை பார்க்காது அரசு பொறுப்புகளில் அமர்த்துவது அரசு நிர்வாகத்தைச் சீர்குலைக்கும், நாட்டின் முன்னேற்றத்தையும் தடை படுத்தும் என்கிறார்கள்.

அரசுப் பணிகளில் அமர்த்த சாதி பார்க்கக் கூடாது, திறமை, தகுதிதான் பார்க்க வேண்டும் எனக் கூறுபவர்கள், ஒரு குறிப்பிட்ட சாதிக்காரன்தான் கோவில் அர்ச்சகனாக இருக்க வேண்டும் என்று ஏன் கூற வேண்டும்? இதில் பிரச்சனை என்றால் நீதிமன்றம் வரை செல்கிறார்கள். மேலும் மடாதிபதி, ஆதீனம் போன்ற பொறுப்புகளிலும் ஒரு குறிப்பிட்ட சாதிக்காரன் தான் வர வேண்டும் என்ற விதி பின் பற்றப்படுகிறது. இங்கேயெல்லாம் சாதி முறையைத்தான் அமுல்படுத்துகிறார்கள். டி.வி.எஸ். போன்ற பார்ப்பன நிறுவனங்களில் பார்ப்பனர்களையே அதிகாரியாக நியமிப்பது எழுதாத சட்டமாகப் பின்பற்றப்படுகிறது. தகுதி, திறமை பற்றி பேசுபவர்கள் இவைகளை என்றைக்காவது எதிர்த்த துண்டா?

கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல், தெரு கூட்டுதல் போன்ற வேலைகளைச் செய்யும் நகர சுத்தி தொழிலாளர்கள் குறிப்பிட்ட கீழ்ச்சாதியில் பிறந்தவர்கள் என்பதற்காகத்தானே இந்த வேலைகளில் அமர்த்தப் படுகிறார்கள்! அரசு வேலைகளில் தகுதி, திறமை பார்க்க வேண்டும் என்று கூறுபவர்கள் இந்த வேலைக்கு சாதி பார்ப்பது ஏன்? அரசு வேலைகளில் அதிகார வர்க்க வேலையானால் தகுதி திறமை பார்க்க வேண்டும் என கூறுவதும், தோட்டி வேலையானால் சாதிபார்க்க வேண்டும் எனக் கூறுவதும் இவர்கள் போட்டிருக்கும் இரட்டை வேடமாகும்.

"இடஒதுக்கீட்டின்படி , தகுதி, திறமை பாராது எடுத்தவுடனேயே அரசுப் பணிகளில் அமர்த்துவது முட்டாள்த்தனம். ஆரம்ப கல்வியிலிருந்தே பிற்பட்ட மாணவர்களுக்கு தகுதி, திறமைகளை வளர்க்க வேண்டும். அதிக மதிப்பெண் எடுப்பவர்களுக்கு அதிக ஊக்கத்தொகை, உணவு, படிப்பதற்குரிய விடுதி, உடை, புத்தகம் போன்றவைகளை அரசு செய்து தர வேண்டும்'' என்றெல்லாம் மேல் சாதி அறிவாளிகள் உபதேசம் செய்கிறார்கள். இன்னும் ஒருபடி மேலே போய் நிலமில்லாதவர்களுக்கு எல்லாம் நிலம் கொடுக்க வேண்டும் என்று நிலச்சீர்த் திருத்தம் பற்றிப் பேசுகிறார்கள். இவையெல்லாம் செய்து பிற்பட்ட மாணவர்களின் கல்வித் தகுதியைக் கூட்டி அதன்பிறகு அரசு பணிகளில் அமர்த்தலாம் என்பது இவர்கள் ஆலோசனை.



நான் கம்ப்யூட்டர் விஞ்ஞானம், மெக்கானிக்கல் எஞ்சினீயரிங் ஆகியவற்றில் பட்டதாரி. நீ என்ன பட்டம் வாங்கியிருக்கிறாய்?

வர்க்கங்களைப் பேசும் கம்யூனிசம் நமது நாட்டிற்கு ஒத்துவராது. இது மேற்கத்திய சிந்தனை என்று பேசியவர்கள்தான் இன்று வர்க்கங்களைப் பற்றியும் ஏழ்மையைப் பற்றியும் பேசுகிறார்கள். இவர்களின் சொந்த நலனுக்கு ஆபத்து என்பதால்தான் இப்படியெல்லாம் பேசுகிறார்கள்.

உலகம் விஞ்ஞானதிசையில் போய்க் கொண்டிருக்கும் போது திறமையற்றவர்களை அரசுப் பணிகளில் அமர்த்துவது நாட்டிற்கு கேடு விளைவிக்கும் என்று அருண் சோரி போன்றவர்கள் கூறுகிறார்கள். ஜெயினுக்கும் மத்திய அரசுக்கும் இடையிலான ஒரு வழக்கில் இதய பிரிவு மருத்துவம் பயில, இட ஒதுக்கீடு அடிப்படையில் மாணவர்களை சேர்க்கக் கூடாது. திறமை, தகுதி அடிப்படையில் தான் சோர்க்க வேண்டும் என்று தீர்ப்புரை வழங்கப் பட்டிருப்பதாக அருண்சோரி எடுத்துக் காட்டி பிற மருத்துவத் துறைகளுக்கும் இதைப் பொருத்த வேண்டும் என்று கூறுகிறார். இட ஒதுக்கீடு அடிப்படையில் வரும் மாணவர்கள் அனைவரும் எதிர்காலத்தில் திறமையற்ற டாக்டர்களாகத்தான் இருப்பார்கள் என்றும், தகுதி, திறமை அடிப்படையில் தேர்வு செய்யப்படும் மாணவர்கள் எல்லாம் நல்ல திறமையான டாக்டர்களாக உருவாகிவிடுவார்கள் என்றும் அருண்சோரி வெட்கக்கேடான முறையில் நியாயப்படுத்துகிறார். ஆனால் எதார்த்தத்தில் அவ்வாறு இருப்பதில்லை. எந்த அடிப்படையில் திறமையான டாக்டர்கள் வந்தாலும் அவர்களின் திறமையும் தகுதியும் எந்தளவுக்கு யாருக்குப் பயன்படுகின்றது என்று பார்க்க வேண்டும். அப்பல்லோ போன்ற மருத்துவமனைகளில் திறமையான டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களின் திறமை, தகுதி ஏழைமக்களுக்குப் பயன்படுவதில்லை. மக்களின் வரிப்பணத்தில் கல்வி பயின்ற இந்த திறமையான டாக்டர்களுக்கு ஏழை மக்களுக்கும் தன் வைத்திம் போய் சேரவேண்டும் என்ற உணர்வு வராமல் இருக்கும்போது அவர்களின் திறமையை, தகுதியை எப்படி நாம் மதிக்க முடியும்? இவர்களுடைய 'திறமையால்' மக்களுக்கு என்ன பயன்? பணம் இருந்தால் டாக்டர் பட்டத்தையே விலை கொடுத்து வாங்க முடியும் என்ற நிலை இருக்கும் போது இதைப் பற்றி ஒன்றும் பேசாமல், இடஒதுக்கீட்டால் திறமையற்றவர்கள் வந்து விடுவதால் நாடு

**அரசுப் பணிகளில் அமர்த்த சாதி பார்க்கக் கூடாது. திறமை, தகுதிதான் பார்க்க வேண்டும் எனக் கூறுபவர்கள், ஒரு குறிப்பிட்ட சாதிக்காரன்தான் கோவில் அர்ச்சகனாக இருக்கவேண்டும் என்று ஏன் கூறவேண்டும்? இதில் பிரச்சினை என்றால் நீதிமன்றம் வரை செல்கிறார்கள். மேலும் மடாதிபதி, ஆதீனம் போன்ற பொறுப்புகளிலும் ஒரு குறிப்பிட்ட சாதிக்காரன்தான் வரவேண்டும் என்ற விதி பின்பற்றப்படுகிறது. தகுதி, திறமை பற்றி பேசுபவர்கள் இவைகளை என்றைக்காவது எதிர்த்ததுண்டா?**

**தாழ்த்தப்பட்டோர் 'உரிய' தகுதி இல்லாதபோதும் தங்கள் சாதியின் காரணமாக இட ஒதுக்கீட்டில் அரசு பணிபெறுவது என்பது படிக்காமலேயே ஒருவன் பொய் சான்றிதழைக் காட்டி வேலை பெறுவதற்குச் சமமாகும். உண்மையிலேயே ஒருவன் போலிச் சான்றிதழ் காட்டி வேலைக்குச் சேர்ந்தால் அரசு அவனைத் தண்டிக்கிறது. ஆனால் இடஒதுக்கீட்டின் பெயரால் போலிகளை அரசே வேலைக்கு அமர்த்துகிறது என்று ஒரு மேல்சாதிக்காரர் இட ஒதுக்கீட்டை எதிர்த்து தன் சாதிவெறியைக் கக்குகிறார்.**

கெட்டுவிடும் எனப் பேசுவது தவறானதாகும். இடஒதுக்கீடால், வேலைக்கு வரும் திறமையற்ற ஆசிரியர்களால் மாணவர்களுக்குத் திறமையாகப் பாடம் கற்றுக் கொடுக்க முடிவதில்லை; ஒன்றும் தெரியாத விவசாயிகூட நல்ல நெல் விதையை விதை நெல்லாகத் தேர்வு செய்கிறான்; நல்ல ஆசிரியரைத் தேர்வு செய்ய வில்லையானால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்றெல்லாம் பேசுகிறார்கள்.

திறமையான, தகுதியான ஆசிரியர்களை எப்படி பார்ப்பது? மதிப்பெண்களை வைத்துதான் திறமை, தகுதி மதிப்பிடப் படுகிறது. மதிப்பெண்களை இன்றைக்கு பல குறுக்கு வழியில் பெறமுடியும். பல பல்கலைக் கழகங்களில் 'மார்க்சீட்' ஊழல் நாற்றமெடுப்பதை அறிவோம். இன்றைக்குள்ள தேர்வு முறையால் குருட்டு மனப்பாடம் செய்து அதிக மதிப்பெண்களைப் பெற்றுவிட முடியும். இதற்கிடையில் பெரிய சிபாரிசு மூலமும் தகுதியைப் பெற்றுவிட முடியும். இந்நிலையில் இடஒதுக்கீட்டால் தகுதி, திறமை அற்றவர்கள் அரசு வேலைக்கு வந்து விடுவதால் நாடு கெட்டு விடும் என்று பேசுவது சரியான வாதமல்ல.

எழுத்தர் வேலைக்கும் அரசு அதிகாரி வேலைக்கும் என்ன திறமை வேண்டும்? மேலும் நமது நாட்டில் மெக்காலே புகுத்திய அடிமைக் கல்விதான் இன்னும் பின்பற்றப்படுகிறது. நிர்வாகத்திற்குத் தேவையான எழுத்தர்களையும், அடிமைச் சேவகர்களையும் உருவாக்கத்தான் இந்த கல்விமுறை கொண்டு வரப்பட்டது என்பதை மறந்து தகுதி, திறமை இல்லாதவர்கள் அரசு வேலைகளில் இருப்பதால் தான் நாடு முன்னேறவில்லை என்று பார்ப்பது உண்மையை மூடி மறைப்பதாகும். ஊழலும், அடிமைத்தனமும், சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள கல்வி முறையையும், அரசு அமைப்பையும் வைத்துக் கொண்டு, இடஒதுக்கீட்டால் தகுதி திறமையற்றவர்கள் அரசுப் பணிகளுக்கு வந்துவிடுவர்; அதனால் நாடு முன்னேற்றமடையாது என்று பேசுவது கடைந்தெடுத்த பித்தலாட்டமாகும்.

அவர்கள் கருத்துப்படி தகுதி, திறமை கொண்ட அதிகாரிகள் பணியில் அமர்த்தப்பட்டால் உயர் அதிகாரிகளும் அரசியல்வாதிகளுமே அவர்களுக்கு குறுக்கே நிற்கிறார்கள். திறமையும் தகுதியும் உள்ளவன் தனக்குக் கீழே வேலை செய்தால் மேல் அதிகாரி அதைச் சகித்துக் கொண்டிருப்பதில்லை. தனக்குக் கீழே உள்ளவன் ஊழல் புரியாதவனாக இருந்தால் அவனை ஊழல் பழக்கத்திற்கு மேல் அதிகாரி உட்படுத்துகிறான். நேர்மையாக அதிகாரி யாரும் இருந்தால் அரசியல்வாதி தன் ஊழலுக்கு உடந்தையாக்குகிறான். மறுத்தால், அந்த அதிகாரியை வஞ்சிக்கிறான். உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகளின் குறுக்கீடுகளினால் நேர்மையான ஊழியர்கள் கூட மேலே வர முடிவதில்லை. தகுதி, திறமை படைத்த அதிகாரிகளுக்கு அரசு அமைப்பே தடையாக இருக்கும் போது இவர்களால் நாட்டை முன்னேற்றிவிட முடியமா?

நமது நாட்டு மக்களின் வரிப்பணத்தில் கல்வி பயின்ற ஆயிரக்கணக்கான கல்வியாளர்கள் நமது நாட்டில் வேலை செய்ய வேண்டும் என்ற தேசப்பற்று இல்லாதவர்கள் பிழைப்புவாதிகளாக மாறி அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று அங்கு பணி செய்கிறார்கள். இப்படி வெளிநாட்டிற்கு ஓடும் திறமை, தகுதி படைத்தவர்களை ஏன் நமது நாட்டில் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை?

திறமையும் தகுதியும் வாய்ந்த நமது நாட்டு விஞ்ஞானிகள் சிலர் தங்கள் விஞ்ஞான அறிவு தாய் நாட்டின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும் எனக்கருதி நமது நாட்டிலேயே வாழ்ந்தார்கள். தேசபக்திமிக்க அந்த விஞ்ஞானிகளில் சிலர் தற்கொலை செய்து கொண்டார்களே, ஏன்? தங்களது விஞ்ஞான வளர்ச்சிக்கு இந்திய அரசு உதவவில்லை என்றுதானே அவர்கள் தங்கள் தற்கொலைக்குக் காரணம் கூறினார்கள். இப்படித் தகுதி, திறமை வாய்ந்தவர்களை விரட்டி அடித்ததற்கும், தற்கொலைக்கு உள்ளாக்கியதற்கும் இந்திய அரசும் இந்திய சமூக அமைப்பும்தானே காரணமாக இருந்திருக்கிறது. தகுதி, திறமை, நாட்டின் முன்னேற்றம் என்று பேசுபவர்கள் இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும்.

சில பத்தாண்டுகளாக அரசு நிறுவனங்களிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் பொறுப்பேற்று நமது நாட்டை வழிநடத்திச் சென்றவர்கள் உயர்சாதிக்காரர்களும், மற்றும் பத்திரிகையாளர்கள் கூறும் தகுதி, திறமை படைத்தவர்கள்தாம். இப்படி தகுதி, திறமை படைத்தவர்கள் நீண்டகாலமாக நமது நாட்டை ஆட்சி செய்தும் நாடு முன்னேற்றப் பாதையில் செல்லவில்லை; மாறாக பெரும்பாலான மக்கள் கல்வி அறிவு இல்லாமலும், வறுமைக் கோட்டிற்குக் கீழும் வாழ்கிறார்கள். அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் போன்ற அன்னிய நாடுகள் நமது நாட்டை கொள்ளை அடித்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்க்கு உள்நாட்டு, வெளிநாட்டு கடன் சுமையுள்ள நாடாக நமது நாடு மாற்றப் பட்டிருக்கிறது. அரசு பொறுப்புகளில் இருந்த தகுதியும் திறமையும் படைத்த அதிகார வர்க்கக் கும்பல் நமது நாட்டை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டது.

அருண்சோரி கூறும் தகுதியும் திறமையும் படைத்த அதிகார வர்க்கம் கடந்த ஆண்டுகளில் தேசவிரோத மக்கள்விரோத வேலைகளில் ஈடுபட்டதை நாம் அறிவோம். யூனியன் கார்பைடு கம்பெனியின்




நல்ல யோசனை! திறமையைப் பற்றித்தான் இனிமேல் நாம் கவலைப்படப் போவதில்லை; அப்புறம் என்ன? எல்லா கல்வி நிறுவனங்களையும் நிரந்தரமாக இழுத்து மூடிவிடுவோம்!

www.padippakam.com

விஷவாயுக் கசிவால் போபாலில் பத்தாயிரம் பேர் மாண்டார்கள். இலட்சக் கணக்கில் மக்கள் பெரும் பாதிப்பிற்குள்ளானார்கள். மக்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக நாலாயிரம் கோடி ரூபாய் வரை அமெரிக்கா கம்பெனியிடமிருந்து பெறவாய்ப்பிருந்தும். வெறும் எழுநூற்று ஐந்து கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை போதும் என்று இந்திய உச்ச நீதி மன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது. அமெரிக்கக் கம்பெனிக்கு ஆதரவான இந்தத் தீர்ப்பை வழங்கியது யார்? மேல் சாதியினர் சொல்லுவதுபோல, இடஒதுக்கீட்டின்படி அரசு பணிக்கு வந்த தகுதி, திறமையற்ற ஒருவர் அல்ல; மாறாக மேல் சாதியினர் கூறும் இலக்கணப்படி தகுதி, திறமை அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்ட உச்சநீதிமன்ற நீதிபதி வெங்கட்ராமையாதான்! பதக், சபயசாச்சி முகர்ஜி, ரங்கனாத் மிஸ்ரா போன்ற மேல்சாதியினர்தாம்!

அடுத்து, முன்னாள் தமிழக ஆளுநர் பி.சி. அலெக்சாண்டர் இந்திராவின் சிறப்பு செயலராக இருந்தபோது பிரதமர் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பெண் சுகத்திற்கும், ஒரு கோப்பை மதுவிற்கும் நமது நாட்டு இராணுவ ரகசியங்களை வெளிநாட்டாருக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி நமது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் இந்திய அதிகாரிகளின் தகுதி, திறமைகளை நாம் மறக்க முடியுமா?

மக்களின் வரிப்பணத்தில் இராணுவசெலவிற்கென்று நிதிஒதுக்கி வைத்து, அதில் வெளிநாட்டாரிடம் ஆயுதம் வாங்குவதில் கோடி கோடியாய் கொள்ளை அடிக்க உதவியது யார்? தகுதி, திறமை படைத்த மேதகு அதிகார வர்க்கக்கும்பல்தானே! இப்படி அரசுப் பொறுப்புகளில் இருந்த, சொல்லப்படும் தகுதி, திறமை படைத்த அதிகார வர்க்கம் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்றதா? அல்லது நாட்டை சீர்கெடுத்ததா?

"தாழ்த்தப்பட்டோர் 'உரிய' தகுதி இல்லாத போதும் தங்கள் சாதியின் காரணமாக இட ஒதுக்கீட்டில் அரசுப் பணி பெறுவது என்பது படிக்காமலேயே ஒருவன் பொய் சான்றிதழைக் காட்டி வேலை பெறுவதற்குச் சமமாகும். உண்மையிலேயே ஒருவன் போலிசான்றிதழ்காட்டி வேலைக்குச் சேர்ந்தால் அரசு அவனைத் தண்டிக்கிறது. ஆனால் இட ஒதுக்கீட்டின் பெயரால் போலிகளை அரசே வேலைக்கு அமர்த்துகிறது என்று ஒரு மேல் சாதிக்காரர் இட ஒதுக்கீட்டை எதிர்த்து தன் சாதி வெறியை காட்டுகிறார்.

அரசுப் பணிகளில் அமர்வதில் பின்பற்றப் படவேண்டும் என்று கோரும் தகுதி, திறமை பற்றிய கொள்கையில் பார்ப்பனர் போன்ற உயர் சாதிக்காரர்களுக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் எவ்வித வேறுபாடு இல்லை. தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு கொள்கையில் இருபிரிவினருமே இதைப் பொறுத்துகிறார்கள்.

அரசு பொறுப்புகளில் தகுதி, திறமை உள்ளவர்கள் அமர்த்தப்பட வேண்டும் என்பதும், தகுதியும், திறமையும் பெரும்பாலும் உயர் சாதிக்காரர்களுக்குத் தான் இருக்கிறது என்பதும் சுரண்டலைப் பாதுகாக்கும் ஆளும் வர்க்கக் கருத்தாகும். ஆளும் தகுதியும், திறமையும் குறிப்பிட்ட சாதிக்கு, இனத்திற்குத்தான் உண்டு என்பது புதிதாகத் தோன்றிய கருத்தல்ல. உலகத்தையே தங்கள் ஜெர்மானிய இனம்தான் ஆளத் தகுதி படைத்தது என்று கூறி இனவெறியை தூண்டிய பாசிஸ்ட் இட்லரின் கருத்துதான் தகுதி திறமை பற்றிய கொள்கையாகும். நீண்ட காலமாக இந்தியாவை ஆள்வதால் ஆளும் தகுதியும் திறமையும் தங்களுக்கு இருக்கிறது எனக்கூறி மேலும் தொடர்ந்து இந்திய நாட்டை அடக்கி ஒடுக்க வெள்ளையன் கையாண்ட கொள்கைதான் தகுதியும் திறமையும் பற்றியதாகும். சீனா, வியட்நாம் போன்ற நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் உழைக்கும் மக்கள் ஆட்சியைக் கைப்பற்றும் நிலையில்கூட ஆளும் வர்க்கம், மக்களுக்கு ஆளும் தகுதி, திறமை இல்லை என்று கூறியது. எனவே அரசு அமைப்புகளில் பணிபுரியும் தகுதியும் திறமையும் மேல்த்தட்டு வர்க்கத்திற்குத்தான் இருக்கிறது என்பது ஆளும் வர்க்கக் கொள்கையாகும்.




தம்பி, ஏன் உன் எதிர்காலத்தை வீணடித்துக் கொள்கிறாய்? உன்னை மாதிரி ஆட்கள்தான் (முட்டாள்கள்) நியாயமாக இடஒதுக்கீட்டை ஆதரிக்க வேண்டும்!

இந்த அரசு அமைப்புகளில் பணிசெய்வதற்குத் தகுதியும் திறமையும் தேவையில்லை. நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவும் உற்பத்தியில் ஆக்கபூர்வமான வேலைகளில் தங்களை இணைத்துக் கொள்வதற்குத்தான் நல்ல தகுதியும் திறமையும் தேவை. ஆனாலும் இந்திய அதிகார வர்க்க கும்பலுக்கு இந்த தகுதியும் திறமையும் இல்லவும் இல்லை; தேவையும் இல்லை. மாறாக மக்களை அடக்கி ஒடுக்கும் மூர்க்கத்தனமும், விஞ்ஞானத்திற்குப் புறம்பாக சமுதாய முன்னேற்றத்தைப் பின்னுக்குத் தள்ளும் முட்டாள்தனமும்தான் ஆளும் வர்க்கத்திடம் தகுதி, திறமையாக இருக்கின்றன.

இத்தகைய அதிகார வர்க்க கும்பலைக் கொண்ட அரசு அமைப்பில் தகுதி, திறமை படைத்த எந்த சாதியைச் சேர்ந்த அதிகாரியானாலும், மக்கள் தங்கள் கோரிக்கைகளுக்காகப் போராடினால், திறமையாக அடக்கி ஒடுக்கி அரசமைப்பையும், ஆளும் வர்க்கத்தையும் பாதுகாத்துத் தன் தகுதியை நிலைநாட்டுகிறார். எந்த சாதியைச் சேர்ந்த திறமை, தகுதி படைத்தவர்கள் அரசு பணிக்குச் சென்றாலும் இந்த நிலைமை மாறப் போவதில்லை; மாறாக தீவிரமடையப் போகிறது. ஆகவே மக்களுக்கு எதிரான இந்த அரசமைப்பில் பேசப்படும் தகுதி, திறமை பற்றிய கொள்கை அப்பட்டமாக பாசிசத்தன்மை வாய்ந்ததாகும்.

தகுதி திறமை எனும் சொற்களின் பொருள் எக்காலத்திலும் ஒரே மாதிரியானதா, இன்று பார்ப்பன மேல் சாதியினர் கொடுக்கும் விளக்கத்தின் அடிப்படையிலானதா என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும்.

இன்றைக்கு ஜனநாயகவாதிகளாகத் தங்களைச் சித்தரித்துக் கொள்ளும் 'பிற்படுத்தப்பட்ட' சாதிகளின் மேல்தட்டு, நடுத்தர வர்க்க சாதி வெறியர்கள் நேற்று வரை முற்பட்ட சாதியினருடன் கைகோர்த்துக் கொண்டு தாழ்த்தப் பட்டவர்களின் 'தகுதி'யை இழிவாகக் கேலி செய்தவர்கள்தான் - என்பதையும் நாம் மறக்கவியலாது.

அவ்வளவு ஏன்? அரசுப் பணிகளின் சாதி அடிப்படையில் ஆளெடுக்கக் கூடாது என்று மாபெரும் சாதி ஒழிப்பு புரட்சியாளர்கள் போலப் பேசும் இவர்கள் இராணுவத்தில் சாதி அடிப்படையில் படைப்பிரிவுகளை உருவாக்கிப் பேணி வருகிறார்களே இதற்கென்ன விளக்கம் சொல்வார்கள்?

மேல்பார்வைக்கு மிகவும் நியாயமானது போலத் தோன்றும் இந்த வாதம் உண்மையில் 'வலியது வெல்லும்' எனும் டார்வினியத்தை சமூகத்திற்குப் பொருத்தும் சமூக டார்வினியமேயாகும்.

**கதிரவன்**

www.padippakam.com

# உலகத்தின் கண்ணில் படாத கண்ணீர்!

''இப்பொழுது ஏதேனும் கொஞ்சம் சாப்பிட்டால் நன்றாக இருக்கும்'' என்று கூறியபடியே அந்த நள்ளிரவு நேரத்தில் விடுதியிலிருந்து வெளியே வந்தார் லெப்டினண்ட் கர்னல் ரெப்ரோடெசே வ். ''சாராடோவ் போன்ற நல்ல நகரங்களில் எந்த நேரத்திலும் விடுதிகளில் உணவு கிடைக்கும். ஆனால் இந்த நாற்றம் பிடித்த செர்வ்யான்ஸ்க் நகரில் வோட்காவும் பூச்சி விழுந்த தேநீரையும் தவிர ஒரு இழவும் கிடைக்காது''

''ஏதாவது கொஞ்சம் கொறித்தால் நன்றாகத்தான் இருக்கும்'' குளிருக்கு தனது பழுப்புநிற மேல் கோட்டை இழுத்து விட்டபடியே ஆமோதித்தார் இறையியல் கல்லூரி ஆய்வாளர் வோடோசியேல். ''மணி இரண்டாகிவிட்டது. சாராயக் கடையெல்லாம் மூடியாகிவிட்டது. ம்... கொஞ்சம் வறுத்தமீன், காளான்... ஏதாவது இருந்தால் அருமையாகத்தான் இருக்கும்''

மேசையிலிருந்து எடுத்துச் சாப்பிடுவது போன்ற அவரது விரலசைவையும், முகபாவனையையும், பார்த்த மற்றவர்கள் சப்புக் கொட்டத் தொடங்கினர். பிறகு சப்புக் கொட்டுவதை நிறுத்திவிட்டு சிந்திக்கத் தொடங்கினர். எவ்வளவுதான் சிந்தித்த போதும் நொறுக்குத்தீனி வெறும் கன்வாகத் தானிருந்தது.

''நேற்று கோலோபேசோவ் வீட்டில் அருமையான சாப்பிட்டேன்'' பெருமூச்சு விட்டார், போலீஸ் உதவித் தலைவர் புருஷின்ஸ்கி. ''அதிருக்கட்டும் கனவான்களே, நீங்கள் எப்பொழுதாவது வார்ஸா போயிருக்கிறீர்களா? அங்கே என்ன செய்கிறார்கள் தெரியுமா? உயிரோடு துள்ளிக் கொண்டிருக்கும் மீனைத் தூக்கி பாலில் போட்டு விடுகிறார்கள். ஒரு நாள் பூராவும் பாலில் நீந்த விட்டு விடுகிறார்கள். அதன் பிறகு அதை வறுத்து சொர்க்கத்துக்கு அனுப்புகிறார்கள். அடடா... இரண்டு கோப்பை வோட்காவும் இருந்து, கொறிப்பதற்கு இந்த மீனும் இருந்தால்... அந்த வாசனைக்கு உயிரையே கொடுத்து விடலாம்!''

''கொஞ்சம் உப்பும் வெள்ளரிப்பிஞ்சும் கூட இருந்தால்'' லயித்துப் போன குரலில் சேர்ந்து கொண்டார் ரெப்ரோடெசேவ். ''நாங்கள் போலந்தில் முகாமடித்திருந்த போது, அவர்களது இறைச்சி இருக்கிறதே... அடடா... சாப்பிட்டதே தெரியாமல் 200 துண்டு இறைச்சியை உள்ளே தள்ளிவிடலாம். ஒரு தட்டில் இறைச்சித் துண்டுகளை குவித்து வைத்து கொஞ்சம் மிளகுத் தூளும் மசாலாவும் தூவிவிட்டால்... அற்புதம்! அதை வார்த்தைகளால் விவரிக்க இயலாது



பேசிக் கொண்டே ரெப்ரோடெசேவ் திடீரென்று சிந்தனை வயப்பட்டு பேச்சை நிறுத்தினார். 1856-இல் டிரினிடி மடாலயத்தில் அருந்திய சூப் அவருக்கு நினைவுக்கு வந்துவிட்டது. சூப்பின் நினைப்பு தந்த சுவையில் அவருக்குத் திடீரென மீன்வாசனை எங்கிருந்தோ அடிப்பது போல வேறு தோன்றியது; சுயநினைவின்றி வெறும் வாயை அசைபோடத் தொடங்கிய ரெப்ரோடெசேவ் தான் சகதியில் நிற்பதையோ கால் ஷூவிற்குள் சகதி நிறைந்து விட்டதையோ கூட கவனிக்கவில்லை.

''என்னால் தாங்க முடியாது'' ''இனி மேலும் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. வீட்டிற்குப் போய் ஏதாவது தயாரித்தே ஆகவேண்டும். வாருங்கள்! கனவான்களே!! என் வீட்டிற்குச் செல்வோம். கடவுள் அருளில் ஒரு கோப்பை மது அருந்துவோம், ஏதேனும் கொறிப்போம்... பழங்காலத்தைப் பற்றிக் கொஞ்சம் அரட்டையடிப்போம். என் மனைவி தூங்கியிருப்பாள். ஆனால் அவளை நாம் எழுப்ப வேண்டாம்... வாருங்கள் போகலாம்''

இந்த அழைப்பிற்குக் கிடைத்த வரவேற்பை விவரிக்க வார்த்தைகளால் இயலாது. அன்றைய நாளில் அந்த இரவில் இருந்ததைப் போல ரெப்ரோடெசேவிற்கு நலம் விரும்பிகளும், விசிறிகளும் எந்த காலத்திலும் இருந்ததில்லை - என்பதில் மட்டும் சந்தேகமில்லை.

''உன் காதைத் திருகிடுவேன். ஆயிரம் முறை உன்னிடம் சொல்லி விட்டேன். முன் அறையில் நீ படுத்துத் தூங்கும் போது இரண்டு வாசனை பத்திகளை கொளுத்திவை என்று'' தனது விருந்தினர்களுடன் வீட்டின் இருண்ட முன்னறையில் நுழையும் போதே வேலையாளிடம் உறுமினார் லெப்டினென்ட். ''போடா முட்டாள்... போய் தேநீர் அடுப்பைப் பற்ற வை. இரினாவிடம் சொல்லி அலமாரியிலிருந்து வெள்ளரிப் பிஞ்சும், முள்ளங்கியும் எடுத்து வா. மீன் வறுவல் கொஞ்சம் தயார் செய்து வெங்காயம் தாளித்து வை; உருளைக் கிழங்கும், பீட்ரூட்டும் வெட்டி கடுகு தாளித்து மிளகுத் தூள் தூவி வை. எல்லாம் கச்சிதமாக இருக்கணும். புரியுதா?...''

வார்த்தைகளால் விவரிக்க இயலாத தனது ஆனந்தத்தை விரல்களால் விவரித்தார் ரெப்ரோடெசேவ். எல்லாம் கச்சிதமாக ஏற்பாடு செய்யப்படுவது போல தனக்குத் தானே பாவனை செய்து கொண்டார். விருந்தினர்கள் காலணிகளைக் கழற்றிவிட்டு இருண்டிருந்த பிரதான அறைக்குள் நுழைந்தனர். லெப்டினன்ட் தீக்குச்சியைக் கிழித்து மெழுகுவர்த்திகளைக் கொளுத்தினார். விருதுகளும், வெனிஸ் நகரக் காட்சிகளும், பிரபல எழுத்தாளர் ஒருவருடன் லெப்டினென்ட் நிற்கும் ஓவியமும் அவர்களை நிறைத்திருந்தன.

''ஒரு நிமிடம்'' பணிவுடன் தாழ்ந்த குரலில் கிசுகிசுத்தபடியே மேசை விரிப்புகளை ஒழுங்குபடுத்தினார் லெப்டினென்ட். ''இந்த மேசைகளைக் கொஞ்சம் ஒழுங்குபடுத்தி விடுகிறேன். நாம் உட்கார்ந்து விடலாம். என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லை; தயவுசெய்து அவளை மன்னியுங்கள். பெண்களின் நோய் பத்தியமிருப்பது

படிப்பகம்

www.padippakam.com

தான் காரணம் என்கிறார் டாக்டர் குலின்; இருக்கலாம்.

"ஆனால் நான் அவளிடம் சொல்வது இதுதான் உணவுக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது. உதடுகளுக்கிடையே உள்ளே செல்வது என்ன என்பதல்ல பிரச்சனை. என்ன வெளியே வருகிறது என்பதுதான் விவகாரம். பத்தியம் இருந்து என்ன பயன்? உன்னுடைய முன்கோபம் மட்டும் குறைய வில்லை. 'உடம்பைக் குறைப்பதைவிட கோபத்தைக் குறை' என்று அடிக்கடி நான் அவளிடம் சொல்வதுண்டு. அவள் காதில் போட்டுக் கொள்வதேயில்லை. 'சின்ன வய திலிருந்தே பழக்கமாகிவிட்டது' என்கிறாள்

பேசிக் கொண்டிருக்கும் போதே வேலையாள் உள்ளே வந்து பணிவுடன் கழுத்தை நீட்டி லெப்டினென்டின் காதில் ஏதோ கிசுகிசுத்தான். லெப்டினென்டின் புருவங்கள் உயர்ந்தன.

"ம்ஹூம்... சரி" முணுமுணுத்துக் கொண்டார். "ம்ம்... ஒன்றுமில்லை. ஒரு சின்ன பிரச்சினை இந்த வேலைக்காரர்கள் பிரச்சினையால் என் மனைவி சாமான்கள் அறையையும், அலமாரியையும் பூட்டி சாவியை எடுத்துச் சென்று விட்டாள். நான் போய் சாவியை வாங்கி வருகிறேன்"

முன்கால்களால் பூனை போல் நடந்து சென்று மெதுவாகக் கதவைத் திறந்து மனைவியிடம் சென்றார் ரெப்ரோடெசேவ். அவள் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

எச்சரிக்கையுடன படுக்கையை நெருங்கி, "கண்ணே... கொஞ்சம் விழித்துக் கொள்ளேன்... ஒரு நிமிடம்... ஒரே ஒரு நிமிடம்"

"யாரது? ஓ... நீங்களா? என்ன வேணும்?"

"ஒன்னுமில்லை கன்னு... அந்த சாவி கொஞ்சம் வேணும் அவ்வளவுதான். நீ ஒன்னும் செய்யவேண்டாம். நீ பாட்டுக் குத் தூங்கு. அவுங்களை நான் பாத்துக்கு றேன். ஆளுக்கு ஒரு வெள்ளரிப்பிஞ்சு மட்டும் எடுத்துக் கொள்கிறேன். வேறு எதையும் தொடக்கூட மாட்டேன். கடவுள் சத்தியமாக."

"ஊருக்குத்தான் தெரியுமே வோடோசியேவ், புருழின்ஸ்கி இன்னும் சிலபேர். அற்புதமான நண்பர்கள். எல்லாரும் பெரிய மனிதர்கள். புருழின்ஸ்கி மன்னர் பிரானிடம் விருதுகூட வாங்கியிருக்கிறார். அவர் உன் மேல எவ்வளவு மரியாதை வச்சிருக்கிறார் தெரியுமா?"

"இத்தனை நேரம் எங்கே உக்காந்து குடிச்சுகிட்டிருந்தீங்க?"

"பாத்தியா... பாத்தியா... உடனே கோபப்படறியே. ஆளுக்கு ஒரு துண்டு வெள்ளரிப்பிஞ்சு, அவ்வளவுதான். அவுங்க போயிடுவாங்க. எல்லாம் நான் பாத்துக்குறேன். உனக்கு தொந்தரவு கொடுக்க மாட்டேன். நீ படுத்துத் தூங்கும்மா.

"அதிருக்கட்டும். உனக்கு உடம்பு இப்போ எப்படி இருக்கு? டாக்டர் வந்து பார்த்தாரா இல்லையா? வந்திருக்குற நண்பர்கள் உன்னைப் பத்தி எவ்வளவு மரியாதை வச்சிருக்காங்க தெரியுமா? வோடோசியேவ் ரொம்ப மத நம்பிக்கையுள்ளவர். புருழினாவும் தான். எல்லோரும் உன்னைப்பத்தி எவ்வளவு உயர்வா நெனக்கிறாங்க தெரியுமா? 'மரியா சாதாரணப் பெண் கிடையாது. இந்த மாவட்டத்திலேயே ஒரு ஒளிவிளக்கு'ன்னு உன்னைப் பத்தி சொல்றாங்க".

"போய் படு. வளவளன்னு பேசாதே. கும்பல் சேத்துகிட்டு போய் குடிக்க வேண்டியது. ராத்திரி பூராவும் இங்கே வந்து ரகளை பண்ண வேண்டியது. வெக்கமா இல்லை. உனக்கு குழந்தைகள் இருக்குங்கிறதாவது ஞாபகம் இருக்குதா இல்லையா?"

"பாத்தியா... சண்டை போடறே பாரு. ஏன் அனாவசியமா அலட்டிக்கிறே. நான் உன்னை எவ்வளவு நேசிக்கிறேன் தெரியுமா? கடவுள் கிருபையில பசங்களுக்கும் நல்லபடியா ஒரு ஏற்பாடு செய்யத்தான் போறேன். குழந்தைகளை வெரட்டியா விடப் போறேன். ச்சே... என்ன சங்கடமான நிலைமை... அவுங்க நம்ம வீட்டுக்கு வந்து சாப்பிட ஏதாவது இருக்குமான்னு என்கிட்ட கேட்டாங்க. வோடோசியேவ், புரு ழின்ஸ்கி... எத்தனை கவுரமான மனிதர்கள். உன்மேல எவ்வளவு மரியாதை வச்சிருக் காங்க தெரியுமா? ஆளுக்கு ஒரு வெள்ள ரிப்பிஞ்சு, கொஞ்சம் வோட்கா... அவ்வள வுதான்! அவுங்க போயிடப் போறாங்க. எல் லாம் நான் பாத்துக்கிறேன்"

"தெரியாமத்தான் கேக்குறேன். உனக்கு மூளை மழுங்கிப் போயிடுச்சா? நடு ராத்திரியில என்ன விருந்தாளி? அவுனுங்க ளுக்கு கொஞ்சங்கூட சூச்சநாச்சம் கிடையாதா? பரதேசிப் பசங்க. நேரங்கெட்ட நேரத்துல தொல்லை பண்ணிகிட்டு! இந்த நேரத்துக்கு எவனாவது விருந்துக்கு வருவானா? இது என்ன வீடா, கள்ளுக்கடையா? நான் சாவியெல்லாம் கொடுக்க முடியாது. அவுங்கள படுத்து தூங்கிட்டு நாளைக்கு வரச்சொல்லு"

"ம்ஹூம்... நீ ஏன் பேசமாட்டே. உங் கிட்ட போய் பணிவா பேசினேன் பாரு. ஒரு பெண்டாட்டி எப்படி இருக்கணும்னு பெரிய வங்க எவ்வளவு சொல்லியிருக்கிறாங்க. நீ புருசனுக்கு ஆதரவா எங்கே இருக்கிறே. நீ... நீ... வாயைத் திறந்தாலே விஷத்தைக் கக்குறியே... பாம்பு, விஷப்பாம்பு".

"ஓகோ! வையத் தொடங்கிட்டியா பிசாசே!" என்றவாறே மனைவி படுக்கையிலிருந்து எழுந்தாள்.

"மன்னித்துக் கொள்... ஏதாவொரு பத் திரிக்கையில் படித்தேன். 'வெளியிலே தேவதை; வீட்டில் சைத்தான்' அது உண்மை தான். நீ சைத்தானேதான்."

"பளார்"

"அடி, அடி! உன்னுடைய ஒரே கண வனை அடி! உன்னை மண்டியிட்டு கெஞ்சுகி றேன். என்னை மன்னித்துக் கொள்! சாவியை மட்டும் கொடுத்துவிடு கண்ணே!

"அரக்கி! கவுரமானவர்கள் மத்தியில் என்னை அவமானப்படுத்தி விடாதே. காட் டுமிராண்டியே இன்னும் எத்தனை காலம் என்னை இப்படி சித்திரவதை செய்யப் போகிறாய்? அடி, நன்றாக அடித்துக்கொள். என்னை மன்னித்துக் கொள். உன்னைக் கெஞ்சித்தானே கேட்கிறேன்"

மேற்கண்டவாறு தம்பதியர் இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டனர். ரெப்ரோ டெசேவ் மண்டியிட்டார், இரண்டுமுறை அழுதார், எழுந்து நின்றார். கன்னத்தைச் சிராய்த்துக் கொண்டார். கடைசியாக அவர் மனைவி எழுந்திருந்தாள். காறி உமிழ்ந் தாள்...

"இந்த சித்திரவதைக்கு முடிவே கிடை யாதென்று நினைக்கிறேன். நாற்காலியிலி ருந்து என்னுடைய உடையை எடுத்துக் கொடு மிருகமே!"

ரெப்ரோடெசேவ் கவனமாக அவளது உடையை எடுத்துக் கொடுத்தார். கலைந்தி ருந்த தலையை சரி செய்தவாறே விருந்தினர் களைச் சந்திக்க விரைந்தார். அவர்களோ ஜெனரலின் உருவப்படத்திற்கு முன்னே நின்று இன்னமும் விவாதித்துக் கொண்டிருந் தார்கள். படத்திலிருக்கும் ஜெனரல், எழுத் தாளர் இருவரில் யாருக்கு வயது அதிகம் என்பதுதான் விவாதப் பொருள்.



படிப்பகம்

''என் மனைவி வருகிறாள். இதோ இப்போது வந்துவிடுவாள்'' கட்டியம் கூறிய வாறே வந்தார் லெப்டினென்ட்.

''உங்களுக்கு மிகுந்த சிரமம் கொடுக்கிறோம். ஆங்... உங்கள் கன்னத்தில் என்ன? யார் என்ன செய்தார்கள்?''

''கன்னமா... கன்னத்திலென்ன...'' லெப்டினென்ட் தடுமாறினார். ''ஓஹோ... ஆமாம்... ஆமாம். என் மனைவியைக் கொஞ்சம் பயமுறுத்தலாம் என்று நைசாக நுழைந்தேனா கட்டிலில் மோதிக் கொண்டேன். ஹா...ஹா...! இதோ வந்து விட்டாளே. தலையெல்லாம் கலைந்து கிடக்கிறது. சரியான லூயி மைகேல்தான்!'' (பிரெஞ்சுப் புரட்சியின் வீராங்கனை)

தூக்கம் கலையாத கண்களுடனும், கலைந்த தலையுடனும் ஆனால் உற்சாகம் பொங்கும் முகத்துடன் வந்தாள் மரியா பெட்ரோவ்னா.

''உங்கள் வரவு நல்வரவாகட்டும். மாலையில் நீங்கள் வரவில்லையெனினும் இப்போதாவது உங்களை என் கணவர் அழைத்து வந்தாரே. நான் இப்போதுதான் தூங்கினேன். பேச்சுக்குரல் கேட்டது. யாரா யிருக்கும் என்று யோசித்தேன். இவர் என்னை எழுந்திருக்க வேண்டாம்ன்னுதான் சொன்னார். ஆனால் அப்படி படுத்திருக்க முடியுமா என்ன?''

மரியா பெட்ரோவ்னா சமையலறைக்குள் நுழைந்தாள். உணவு தயாராகத் தொடங்கியது.

விருந்து முடிந்து கிளம்பினார்கள் விருந்தினர்கள். ''மணவாழ்க்கைதான் எவ்வளவு அற்புதமானது'' பெருமூச்செறிந்தார் புருழின்ஸ்கி. ''நினைத்தால் சாப்பிடலாம்; நினைத்தால் மது அருந்தலாம். நம்மை நேசிப்பதற்கென்றே ஒரு மனைவி இருக்கும் போது என்ன கவலை? ரெப்ரோடெசேவ் கொடுத்து வைத்த மனிதன்!''

வோடோசியேவ் பதிலேதும் பேசவில்லை. பெருமூச்சுடன் யோசித்தவாறே வீடு வந்து சேர்ந்தார். உடை மாற்றிய பிறகு அவர் விட்ட பெருமூச்சின் சத்தம் கொஞ்சம் அதிகமாக இருக்கவே, அவரது மனைவி விழித்துக் கொண்டாள்.

''அரவை மிஷின் மாதிரி ஏன் சத்தம் போடறே. தூங்க விடாதே. மூக்கு முட்ட குடிச்சிட்டு வரவேண்டியது, இங்க வந்து நடு ராத்திரியில சத்தம் போட வேண்டியது. நாற்றம் பிடிச்ச மிருகம்''

''திட்டு... திட்டு... திட்டறதைத் தவிர உனக்கு வேறென்ன தெரியும்? ம்ஹூம்'' பெருமூச்சு விட்டார் இன்ஸ்பெக்டர். ''ரெப்ரொடெசேவும் அவர் மனைவியும் எப்படி குடும்பம் நடத்தறாங்கன்னு நீ பாக்கணும். கடவுளே! என்ன ஆனந்தமான வாழ்க்கை! நீ அவுங்களைப் பார்க்கணும். கண்ணீர் விட்டு அழலாம் போல இருக்குது. அடடா என்ன வாழ்க்கை! நானும் இருக்கிறேனே, அதிருஷ்டக்கட்டை, வந்து வாய்ச்சிருக்கியே எனக்கு சூனியக்காரி! சரி சரி நகர்ந்து படு''.

தனது விதியை நொந்தவாறே போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு கண்ணை மூடினார் இன்ஸ்பெக்டர்.

ஆந்தன் செகாவ்



ராஜனி திரணகம:

# இரு முனைப் போராட்டத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு!

**லண்டனில் குடியேறியுள்ள 'ஈழத்தமிழ் மக்கள் புதிய கலாச்சாரக் குழு'வின் 'பனிமலர்' இதழிலிருந்து சுருக்கி எழுதப்பட்டது.**

துப்பாக்கிகளும், பீரங்கிகளும் துளைத்துச் சிதைத்த யாழ் நகரச் சுவர்களில் ஒரு இளம் தாயின் படம் இடம் பெற்ற சுவரொட்டி ரகசியமாக ஒட்டப் பட்டிருக்கிறது. யாராலோ கொலை செய்யப்பட்டவராக இருக்கலாமோ? இருக்கலாம். குரூரமான கொலைகள் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்ட ஒரு நாட்டில், தனது தந்தையோ, தங்கையோ அன்னையோ, அண்ணனோ, ஏன் மனைவியே கூட இறந்தாலும் அழுவதற்கோ ஆற்றாமையை வெளியிட்டு அறற்றவோ அஞ்சி நடுங்கிக் கிடக்கும் மக்கள் வாழும் நாட்டில் ஒரு பெண் கொலை செய்யப் பட்டதற்குச் சுவரொட்டி ஒட்டப்பட்டால் காரணம் இல்லாமல் இருக்க முடியாது. கடந்த ஆண்டில் மட்டும் கொலை செய்யப் பட்ட முப்பதாயிரம் பேரில் ஒருத்தியாக இருக்க முடியாது என்பதை சுவரொட்டியில் காணப்படும் கேள்வி தெளிவாக்குகிறது. 'ராஜனியை கொன்றது யார்?'

ராஜனி திரணகம - முப்பத்தைந்து வயது மருத்துவர். யாழ்ப் பல்கலைக்கழக மருத்துவத் துறையில் உடற் கூறியல் துறையின் (ANOTOMY) தலைவர். நர்மதா, ஷாரிகா என்ற இரு சிறுமிகளின் தாய்.

சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் நாள் பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்களின் விடைத்தாள்களைத் திருத்தி முடித்து விட்டுத் தனது வீடு நோக்கி சைக்கிளில் சென்ற கொண்டிருந்தார் ராஜனி. சந்தடியற்ற ஒரு இடத்தை நெருங்கும் போது மாலை ஆறு மணி இருக்கும் - ஒரு கொலையாளியால் சுடப்பட்டார். முதல் குண்டு பாய்ந்த உடனேயே சரிந்து சாய்ந்து விட்டார். நிதானமாக மேலும் நான்கு குண்டுகள் அவர் தலையைத் துளைத்தன.

அதிர்ச்சியிலும் அச்சத்திலும் நாக்கு வரண்ட நிலையில் - வழியில் வந்த காரை மறித்து மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர் இரு மாணவர்கள். எத்தனையோ பேருக்கு உயிரை மீட்டுத் தந்த அவர் உயிர் மருத்துவமனையை எட்டுவதற்குள்ளாகவே...

சாலைகளில் பேருந்துகளில் அடிபட்டுச் சாகும் நாய்கள் சாலையோரம் வீசப்படுவது போல் பிணங்கள் வீசப்படும் நாட்டில் ராஜனியின் கொலையும் எந்தவித விசாரணையுமின்றி அடக்கம் செய்யப்பட்டது.

ஒரு பல்கலைக்கழக ஆசிரியராக, தனது மருத்துவப் படிப்பைக் கொண்டு காசு பண்ணும் வியாபாரியாக, ஒரு தாயாக மட்டும் இருந்திருந்தால் ராஜனி கொலை செய்யப்பட்டிருக்க மாட்டார். ஆனால் அவரது நண்பர் குறிப்பிட்டதைப் போல ''ராஜனி சாதாரண மக்களின் குரலும் அபிலாசைகளும் உரத்து ஒலிக்க வேண்டும் என்று போராடினார். அவர்களின் குருச்சரவுகள் சின்னா பின்னமாகிப் போன சமுதாயத்தின் இடிபாடுகளில் மறைக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காகவும் போராடிய பெண் அவர்'' அதனால் தான் கொலை செய்யப் பட்டார். ''எங்கடை ராஜனி ஒரு முட்டாப் பிள்ளை என்று சனம் சொல்லுது. இவ இங்கை நடக்கிற கொலைகளைப் பத்தி கவலைப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால், அவயாரும் கஷ்டப்படுவதை பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டா... இப்ப எங்கட பிள்ளையும் இல்லை. பிள்ளையறுக்குத் தாயுமில்லை'' என்று ராஜனியின் தாயார் கூறும் போது கேட்பவர் கண்களே குளமாகின்றன.

சிங்களப் பேரினவாத அரசு தமிழ் மொழியை முற்று முழுதாக நசுக்கி, இன ஒடுக்கு முறையைத் தீவிரப் படுத்திய போது எல்.டி.டி.யின் சுயநிர்ணய உரிமை, தமிழின விடுதலை லட்சியங்களில் தன்னை இணைத்துக் கொண்டார். வெகு விரைவிலேயே பிரபாகரனின் பாசிசப் போக்கை இனங்கண்டு அதன் சீரழிவுப் பாதைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். ''மக்களைப் பற்றி அக்கறைப்படாத, இளைஞர்களைப் பயன்படுத்திக் கொண்ட வெறும் ராணுவ அமைப்பு'' என்று புலிகளைப் பற்றிய உறுதியான கருத்துக்கு வந்தார்.

ராஜனி மிக நேர்மையான பெண். இலங்கை அரசும், இந்தியப் படையும் நடத்திய மாணவப் படுகொலைகளைப் பற்றி விசாரணை மேற் கொள்ள வேண்டும் என்று கூறியதை பல்கலைக் கழகம் ஏற்க மறுத்த போது அழுது கொண்டே செனட் கூட்டத்தை விட்டு வெளியேறினார். தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல சிங்கள மக்கள் மத்தியிலும் அவர் பணியாற்றினார். தான் பணியாற்றும் மருத்துவமனைக்கு வரும் ஏழைகளிடம் ''இங்கு ஏன் வருகிறீர்கள். அரசு மருத்துவ மனைக்குச் செல்லுங்கள். அங்கு வந்து ஒருகாசும் இல்லாமல் வைத்தியம் பார்கிறேன்.'' என்று கூறுவார். தனது இரண்டாவது குழந்தையைப் பிரசவிக்கும் நேரத்திற்குச் சற்று முன்வரை ஏழை நோயாளிகளுடன் வாழ்ந்தார். இங்கிலாந்தில் தனது மருத்துவ ஆய்வை முடித்துக் கொண்டு உடனேயே தனது மாணவர்களின் தேர்வுக்கு உதவும் பொருட்டு யாழ்ப்பாணம் திரும்பினார்.

www.padippakam.com



யாழ்ப் பல்கலைக் கழக மருத்துவத் துறையை இந்திய ராணுவம் ஆக்கிரமித்து நின்ற போது, தனி ஆளாக நின்று பல்கலைக் கழகத்தைத் திறக்க அரும்பாடு பட்டார். இல்லையேல் மேலும் இரண்டு ஆண்டுகளுக் குப் பல்கலைக் கழகம் திறக்கப் பட்டிருக் காது. ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்த போதும் குண்டு வீச்சால் சிதைந்த பல்கலைக் கழகக் கட்டிடங்களைச் சீரமைத்தார். ராஜனி யின் மனத்திடமும் உறுதியும் சக ஆசிரியர் களை அவருடன் ஒத்துழைக்கச் செய்தன. ''எனது சொந்த மண்ணை விட்டு எனக்கு வாழ்க்கை என ஒன்றும் இல்லை. அதனால் தான் மீண்டும் வந்திருக்கிறேன்'' என லண்ட னிலிருந்து திரும்பியதும் பல்கலைக் கழகத் துறை வேந்தருக்கு எழுதினார். படித்து உயர் கல்வி பெற்ற உடன் வெளிநாட்டுக்கு ஓடிவி டும் 'அறிவாளிகள்' மத்தியில் நாட்டுப் பற்று மிக்கத் தலைமயாகத் திகழ்ந்தார் ராஜனி.

இந்திய, இலங்கை ராணுவத்தின் அரக் கத் தனமான கொலைகளை அம்பலப் படுத் தினார். வாளால் கால் கைகள் துண்டிக்கப் பட்ட இளைஞர்கள், கவச வண்டியில் நசுங் கிய தலைகள், அமிலத்தில் அமிழ்த்தப்பட்ட உடல்கள், பாலியல் வன்முறைகள், கழுத்து நெறித்துக் கொல்லப்பட்டோர், மரங்களி லும், மின் கம்பங்களிலும் தொங்கும் உடல் கள், துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப் பட்டு சாலையோரத்தில் கருகி எரியும் உடல் கள் - அனைத்தையும் அம்பலப்படுத்தினார் ராஜனி.

விடுதலைப் புலிகளும் இதே அட்டூழி யத்தைச் செய்த போதும், இளைஞர்களை அச்சுறுத்தி ராணுவத்தில் சேர்த்த விதத்தை யும் வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதில் முன்னின்றார், ராஜனி.

1987 அக்டோபரில் யாழ் மருத்துவம னையில் டாக்டர்கள் நோயாளிகள் 70 பேரை இந்திய ராணுவம் படுகொலை செய் தது. தனது டாக்டர்கள் படுகொலை செய்யப் பட்டதற்கு அஞ்சலி செலுத்தவே சக டாக்டர் களே அஞ்சியபோது தப்பிப் பிழைத்தவர்க ளிடம் தனியொருத்தியாகச் சென்று விசா ரணை நடத்தி தகவல் சேகரித்தார்.

இந்த படுகொலையின்போது நேர்ந்த தனது அனுபவத்தை எழுதினார் ராஜனி. ''இரவு முழுவதும் இறந்து போன உடல்கள் மத்தியில் சத்தமில்லாமல் படுத்துக் கிடந் தோம். ஒருவனுக்கு இருமல் வந்து இருமி னான். உடனே ஒரு இந்திய வீரன் ஒரு எறி குண்டை வீசினான். இருமியவனோடு வேறு சிலரும் பலியாயினர். ஒருவர் கைகளை உயர்த்தியபடி கூறினார். 'நாங்கள் அப்பாவிகள் இந்திரா காந்தி அம்மாவுக்குத் தான் நாங்கள் ஆதரவு' அப்படிக் கூறிய வனை நோக்கி ஒரு குண்டு வீசப்பட்டது.

www.padippakam.com

அவனும் அவனது சகோதரனும் அதே இடத்தில் மடிந்தனர். குண்டுச் சிதறல்களும், தூசியும் எங்கள் மீது படிந்தன. சற்று முன் இறந்தவர்கள், காயம் பட்டவர்களின் உடல்களிலிருந்து வடிந்த ரத்தத்தில் குண்டுச் சிதறல்கள் அமுந்தப் படிந்தன.

தாய்மார்கள், இளம் பெண்கள் இவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்து தன்னால் இயன்ற அளவு அவர்களுக்கு ஆதரவு வழங்கினார். "இங்கு பெண்கள் என்றால் நகைகளைத்தான் கெட்டியாகப் பிடித்துக் கொள்வார்கள். ஆனால் ராஜனி சாகும் போது அவளிடம் ஒரு குண்டு மணி கூட இல்லை. எல்லாவற்றையும் பிறருக்குத் தந்து விட்டார்" எனக் கூறுகிறார், ராஜனியின் தந்தை ராஜசிங்கம்.

ராஜனி நம்பிக்கையிழந்த, ஆதரவற்ற பெண்களை ஒன்றிணைத்து வலுப்படுத்த அரும்பாடுபட்டார். 'பூரணி' என்ற அமைப்பை நிறுவி தங்கள் வாழ்க்கையை சீரமைத்துக் கொள்ள எல்லா வழிகளிலும் உதவினார். ராஜனி ஒரு முறை "சாதாரணப் பெண்களுக்குப் பெருந்துணிவும் எதையும் தனியாக எதிர்த்துப் போராடும் வல்லமையும் ஒற்றுமையாய் இயங்கவும் முடியும் என்பதை நான் நிரூபித்துக் காட்டுவேன்" என ஒரு போராளிக்குரிய உறுதியோடு எழுதினார். அவ்வாறே செயல்பட்டார்.

ஒரு முறை புலிகள் நடத்திய தாக்குதலில் ஆறு இந்திய வீரர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதற்காக இந்திய ராணுவம் அப்பாவி மக்களை வெறி கொண்டு தாக்கி, 51 பேரைக் கொன்று, 5,000 பேரை வீடு வாசலை அழித்து நிர்க்கதியாக்கியது. அந்த நேரத்தில் இதன் விபரம் கேட்டு தனது லண்டன் நண்பர் எழுதிய கடிதத்திற்குப் பதில் எழுதினார் ராஜனி:

"கொலைச் சம்பவங்கள்?

எத்தனை பேர் என்றா கேட்கிறீர்கள்! தயவு செய்து இப்போது வேண்டாம். என்மனமே நெறிக்கப்பட்டிருக்கிறது.

ஆம்! இப்படித்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

வேதனையும் துக்கமும், அச்சமும். ஆம்! எப்போதும் அச்சத்தில்!

உங்களை ஒன்று கேட்கிறேன் -

மக்கள் கும்பல் கும்பலாய் செத்து விழுந்து கொண்டிருக்கையில் உங்களுக்கு எழுத வருமா?!

மக்களைப் பற்றி யாருக்கு அக்கறை?

அரசு, இந்திய ராணுவம், புலிகள் மற்ற இயக்கங்கள் யாருக்குமே கவலை இல்லை. நாங்கள் பொறியில் அகப்பட்ட மக்கள். ஒரு தற்கொலைப் பாதையில் நடக்க நிர்பந்திக்கப்பட்டிருக்கிறோம்...

நாங்கள் பலி கடாக்கள். கும்பல் கும்பலாய்ச் செத்து விழுந்து கொண்டிருக்கிறோம்."

மக்களின் மீது தனக்குள்ள எல்லையற்ற அன்பை எப்போதும் வெளிப்படுத்தினார். மக்களின் விடுதலை என்ற பெயரால் நடக்கும் அராஜகப் படுகொலைகளை, இலங்கை, இந்திய ராணுவ வெறிச் செயல்களை அஞ்சாது அம்பலப்படுத்தினார்.

பல்கலைக் கழகத்தில் தனது சக ஆசிரியர்களது துறையுடன் மனித உரிமை அமைப்பை நிறுவினார். இவையெல்லாம் விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தின. தனது தவறுகளைச் சுட்டிக் காட்டும் எவரையும் துரோகியாகப் பட்டியலிடும் புலிகள் ராஜனியை 'துரோகி'யாகக் கருதி கொலைப் பட்டியலில் சேர்த்தனர்.

இந்திய ராணுவம் வெளியேறியதன் பின் வடமாகாணத்தின் அன்றாட வாழ்க்கையைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர், புலிகள். சட்டத்தை அமுலாக்கும் பொறுப்பைப் பூரணமாகப் புலிகள் பெற்றனர். இந்த நேரத்தில் தான் ராஜனி சுடப்பட்டார். புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் "எங்களிடம் ஆயுதபலம் இருக்கிறது. அந்த பலத்தின் தளத்தில் நின்று பேசுகிறோம்" என அப்பட்டமாகத் தங்கள் ஆயுத ஆதிக்க அரசியலைப் பிரகடனப்படுத்தினார்.

இளஞ்சிறுவர்கள் கட்டாயமாக ராணுவ மயமாக்கப்படுவதையும், வெறும் ராணுவ நடவடிக்கை மட்டுமே விடுதலையைப் பெற்றுத் தராது என்பதையும், புலிகளின் பிற அராஜகச் செயல்களையும் அம்பலப்படுத்தி 'முறிந்த பனைமரம்'(BROKEN PALMERA)என்ற தலைப்பில் மனித உரிமை அமைப்புடன் இணைந்து ஓர் ஆய்வறிக்கையைத் தயாரித்து அதை ரகசியமாகச் சுற்றுக்கு விட்டார் ராஜனி. இந்த அறிக்கையே ராஜனியின் கொலைக்கு நாள் குறித்து விட்டது.

கொலை செய்யப்படுவதற்கு முன் லண்டனுக்கு எழுதிய கடிதத்தில் ராஜனி "ஒரு நாள் துப்பாக்கி என்னை மௌனமாக்கி விடும். ஒரு அன்னியனால் அல்ல. இந்த என் சமூகத்தின் கருப்பையில் உருவான ஒரு மகனால், என் வாழ்வோடும் வரலாற்றோடும் பிறந்த இந்த மண்ணின் மகள் ஒருத்தியால் இந்த மரணம் என்னை வந்தடையக் கூடும்." என்று எழுதினார். தனக்கு நேரக் கூடிய கதியைப் பற்றி தீர்க்கமாகவே அறிந்திருந்தாலும் நேரிய தனது அரசியல் செயல்பாடுகளை எற்றுமே அவர் நிறுத்திக் கொண்டதில்லை.

"தியாகம், துரோகம் என்ற சொற்கள் புலிகளின் மந்திர உச்சாடங்கள்... ஒரு சீரழிந்த அரசியலுக்குள் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். யாரும் கேள்வி எழுப்பினால் அவன் விடுதலைத் துரோகி என எங்களின் எதிர்காலத் தலைமுறைக்குப் போதிக்கப்படுகிறது. கேள்விக்கிடமில்லாத பூரண விசுவாசம் அதற்கேயுரிய சிறப்பான பலத்தைப் பெற்றிருப்பதுதான் இன்றைய நிலை." என புலிகளால் எச்சரிக்கப்பட்ட ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஆயுத பலமே அரசியலைத் தீர்மானித்துக் கொண்டிருக்கிறது. எதிரிக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் மாற்றுக் கருத்துள்ளவர்களோடு ஐக்கியப்படுவது என்ற பேச்சையே புலிகள் நிராகரிக்கின்றனர். புலிகள் மக்களிடம் துப்பாக்கி முனையில் ஆதரவைப் பெற்றிருக்கின்றனர். மாற்றுக் கருத்துக் கொண்டிருப்பவர்களைக் கருத்து ரீதியாக வெல்வதற்கு, அந்த நபர்களையே அழித்து விடுவது என்ற புலிகளின் பாசிசப் போக்குதான் ராஜனியின் கொலைக்கும் அடிப்படை.

ராஜனி மறைந்ததும் அச்சுறுத்தலையும் மிரட்டலையும் மீறி இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஏழை மக்களும், மாணவர்களும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

பாசிஸ்டுகளானாலும், சமூக பாசிஸ்டுகளானாலும் தங்களது படுகொலைகளை விடுதலையின் பெயரால் நியாயப்படுத்துகிறார்கள். 'நாயைக் கொல்வதற்கு முன் அந்தப் பைத்தியம் பிடித்த நாய் என்று சொல்லி விட்டுக் கொல்' என்ற ஆங்கிலேய ஏகாதிபத்தியக் கொள்கையைதான் இன்று புலிகள் நடைமுறைப் படுத்துகின்றார்.


ராஜனியின் கொலையை எந்த விதத்திலும் கொலையாளிகளால் நியாயப்படுத்த முடியாது. மக்களை, மக்கள் விடுதலையை நேசிப்பதிலும் ஆதரிப்பதிலும் மக்களுக்கு எதிரான பாசிச நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதிலும் ராஜனியின் வாழ்க்கை தலைசிறந்த போராளிக்குரியது. மக்களின் பெயரால் தங்களுடைய சொந்த 'அரசியல் அதிகாரத்'திற்காகச் சண்டையிடுபவர்களால் ராஜனியை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதில் ஆச்சரியமில்லை.

பாசிஸ்டுகள் ராஜனி என்ற ஒரு பெண்ணை மட்டும் கொல்லவில்லை; ஜனநாயகத்தை வெறுக்கும் தங்கள் அரசியல் அடிப்படையைப் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். ஆனாலும் ராஜனியின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட இரண்டாயிரம் பேர் 'வெறும் துப்பாக்கி அதிகாரம் நிலைக்காது' என்பதை மௌனமாக எச்சரித்து இருக்கிறார்கள்.

ஓராண்டுக்கு முன் ராஜனி திரணகம இறந்து விட்டாலும், புதிதாக ராஜனிகள் மலர்ந்து கொண்டிருக்கின்றனர், ரகசியமாக.

**கொலை செய்யப்படுவதற்கு முன் லண்டனுக்கு எழுதிய கடிதத்தில் ராஜனி "ஒரு நாள் துப்பாக்கி என்னை மௌனமாக்கி விடும். ஒரு அன்னியனால் அல்ல. இந்த என் சமூகத்தின் கருப்பையில் உருவான ஒரு மகனால், என் வாழ்வோடும் வரலாற்றோடும் பிறந்த இந்த மண்ணின் மகள் ஒருத்தியால் இந்த மர்ணம் என்னை வந்தடையக் கூடும்." என்று எழுதினார். தனக்கு நேரக் கூடிய கதியைப் பற்றி தீர்க்கமாகவே அறிந்திருந்தாலும் நேரிய தனது அரசியல் செயல்பாடுகளை என்றுமே அவர் நிறுத்திக் கொண்டதில்லை.**

www.padippakam.com



# குடிநாகம்

எச்சரிக்கை!
குடிகாரநாகம் ராஜாவைப்போல
உனது மார்பிலேறிக் குந்தியிருக்கிறது
உனது மூக்குக்கு எதிரேயே
படமெடுத்து ஆடுகிறது.

உனதுமொழி, விசுவாசம், ஜீவன்
அனைத்தையும் குடிக்கிறது
விலக நினைத்தாலோ, வாலால் அடித்துவிடும்.
ஒருவேளை அப்போது உணருவாயோ
விடுதலை என்னவென்று?
தேசம் என்றால் எதுவென்று...?

பாவம்!
அதற்குள் உன்காலம் கடந்துவிடும்
காலம் அதற்குள் மொத்தமும் கடந்துவிடும்.

— தேஜ்சிங் ஜோதா
ராஜஸ்தானி.

இக்கவிதை கிராமிய நம்பிக்கை ஒன்றை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. குடிநாகம் இரவில் வரும். தூங்குபவரின் மார்பிலேறி அமைதியாக அமரும். விஷத்தைக் கக்கும். தூங்குபவர் அவரே அறியாமல் விஷத்தைச் சுவாசித்துச் சுவாசித்து கடைசியில் செத்துப் போவார்.

# பசித்த குருவி

இரை தேடி ஒருகுருவி
பறந்து திரிந்தது - தானியமோ
திரிகல்லில் அரைபட்டுக் கொண்டிருந்தது.
குருவி தச்சனிடம் சென்றது:
அண்ணே அண்ணே
திரிகல்லில் தானியம்
அகப்பட்டுக் கொண்டது.
நான் எதைச் சாப்பிடுவேன்?
எப்படிப் பசியாறுவேன்?
அடுத்த பருவத்துக்கு
எப்படிச் சேர்த்து வைப்பேன்?

தச்சன் திரிகல்லைக் கழற்றிப் போட்டான்
தானியம் வெளியே பறந்தது.
குருவி அதன்பின்னே பறந்தது.
மோசடித் தானியமோ
அரசனின் களஞ்சியத்தில்
அடைக்கலம் புகுந்தது
அங்கு ஒரு காவலன்.
காவலரைக் கேட்டது குருவி:
அண்ணே அண்ணே
களஞ்சியத்தில் தானியம் சேர்ந்துவிட்டது
நான் எதைச் சாப்பிடுவேன்?
நான் என்ன சாப்பிடுவேன்?

காவலன் அமைச்சனிடம்
பிரச்சனையைக் கொண்டு போனான்;
அமைச்சன் அரசனிடம் போனான்;
அரசன் தளபதியை அழைத்தான்;

தளபதி நீதிபதியை நியமித்து
விசாரிக்கச் சொன்னான்.
கத்தை கத்தையாய் சட்டம் படித்து
முன்னும்பின்னுமாய் அவர் வாதாடினார்

முதலில்,
குருவிக்குப் பசி எப்படி வரலாம்?
அப்படியே பசித்தாலும்
தானியத்தை எடுக்கலாமா?
அரசின் களஞ்சியத்தில் தானியம்
விரும்பித்தானே சேர்ந்தது?

விஷயம் ஊரெங்கும் பற்றிஎரிந்தது.
செய்தி ஏடுகள் வடக்கும் தெற்கும் பாய்ந்தன
'குருவிக்கும் தானியத்துக்கும் மோதல்'
காரணமில்லாமல் குருவிக்குப் பசி எடுத்திருக்கிறது
தானியத்தை எடுத்தது குருவியின் குற்றம்
ஓங்கி அடித்துச் சொன்னார்கள் —
தீர்ப்பும் வழங்கப்பட்டது —
பசித்த குருவி சுட்டுக் கொல்லப்பட்டது.

— கோரக்பாண்டே,
இந்தி

www.padippakam.com

# அனைத்திலும் அமெரிக்க வார்ப்படங்கள்!


ஆயுதம் கொண்டு அடக்கிப் பணிய வைத்தது காலனிய கட்டம். இப்போதோ அவை மனோதத்துவ ரீதியான போரைத் தொடுக்கின்றன. அதற்குப் பலவழிகள் வைத்திருக்கின்றன. கலாச்சாரமும் ஒரு வழிமுறை; ரேடியோ, டி.வி., திரைப்படங்கள் அதன் கருவிகள். அதன் பிரதான இலக்கு துடிப்பான இளையதலைமுறை. போனிஎம், மடோனா, மைக்கேல் ஜாக்சன், குளோரியா - இப்படி மலைமலையாக 'ஹிட்' இசையும், சினிமாக்களும் அவநம்பிக்கை, நிச்சயமின்மை, சமுதாயத்தோடு ஒத்து வாழ முடியாத பிணக்கம் ஆகிய மோசமான எண்ணங்களை ஊட்டி விடுகின்றன.

'வேகம், வேகம், போகும் வேகம்... எங்குபோய் நிற்கும்?' - இப்போது நாட்டில் வேகமாக வளரும் 'வேக கலாச்சாரம்' ஒரு தலைமுறை முந்தியவர்களுக்கே கூட திகைப்பாக இருக்கிறது. அதற்கென்று தனி சிந்தனை, தனிப்பாணி, தனிமொழி இருப்பதாக பளப்பள பத்திரிக்கைகளில் எழுதுகிறார்கள்.

இந்தியாவின் தலைநகரங்களில் இந்தக் கலாச்சாரத்தின் இளங்குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள். சினிமா, பத்திரிக்கை, விளம்பரம் மூலம் நவீனகலாச்சாரம் என்று இதுவே பரப்பப்படுகிறது. ஓர் ஆள் அளவின் இரண்டு பங்குக்கு சட்டை, பேண்ட் போடுகிறார்கள்; கலர்கலராக ஆடை மட்டுமல்ல, தலைமயிரையும் சாயம் அடிக்கிறார்கள்; கொட்டு இசையும், வேக இசையும் அவர்களின் தீனி. காக்கைக் கும்பலாகக் கூடி அரட்டை அடிப்பது, நாய்களைப் போல மோட்டார் பைக்கில் ஜீன்ஸ் உடையில் ஊரைச் சுற்றுவது அவர்களின் இலக்கணம். 'நல்ல பையனா, நல்ல பொண்ணா இருப்பா' என்று ஏதாவது பெரிசு அறிவுரை சொன்னால், பெரிசுக்குப் பெயர் வைத்து விடுவார்கள் - 'நோஞ்சான் குதிரை, கழிக்கப்படவேண்டிய சரக்கு, தடி ஊன்றிகள்'.

'ஜாலியாக அனுபவித்து வாழவேண்டும்' - இது அவர்களின் தாரக மந்திரம். திருமணத்துக்கு முன்பே உடலுறவு கொள்வது பொழுதுபோக்கு - ஒருவரிடம் உண்மையான அன்பைத் தெரிவிக்க அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியாம். இப்படிபட்ட குடும்பத்தின் தாய் ஒருத்தி பேட்டி கொடுத்திருந்ததைப் போல, ''(என்) பெண் அமெரிக்காவில் நியூயார்க்கில் விட்டாலும் சமாளித்து விடுவாள்.எது எப்படியோ, அவளது உடையும் அலங்காரமும், கேட்கிற இசையும் அவளை ஜெயிக்க வைத்துவிடும்.''

இந்தக் குழந்தைகளுக்குப் பெயர்: **'இந்தக் கணத்தின் குழந்தைகள்'** இந்த நிமிடம், இந்த நொடியை அனுபவிக்க வேண்டும் - இதுவே அவர்களின் லட்சியம், புரட்சி எல்லாம். 'கவலை வேண்டாம், கிறுக்காயிரு' என்பதே இவர்களின் முழக்கம். இந்த ஜீன்ஸ் யுகத்தின் கலாச்சாரத்துக்குப் பொருத்தமான பெயர் 'பாப் காலச்சாரம்' (POP) இது அமெரிக்கா உலகுக்கே வழங்கிய நன்கொடை. இந்தியா ரொம்ப வேகமாக இப்போது ஓடுவதற்கும் 'பாப்' கலாச்சாரமே காரணம்.



ஜீன்ஸ் உலகின், பாப் உலகின் சாப்பாடும் 'வேகமான சாப்பாடு' தான். அதாவது 'திடீர் உணவு' ஆங்கிலத்தில் இதன் பெயர் ஃபாஸ்ட் ஃபுட் [FAST FOOD] சத்துணவும், உள்ளூர் உணவு முறைகளும் இல்லாத அமெரிக்க முறை உணவு; சாப்பிட்டால் மெல்லிய உடல்வாகு இருக்குமாறு செய்யும் சொற்ப உணவு. இது தின்று ஊதிக்கிடக்கும் பணக்காரனின் கவலை. ஆழ்ந்த சிந்தனை கொடுக்கும் இலக்கியம், சொற்களுக்குப் பதிலாக வழங்கி அடிபட்ட சொற்கள்; இசைக்குப் பதிலாக ஒலி; ஒலிக்குப் பதிலாகச் சத்தம்; இரைச்சல். படிப்பு, ஆழ்ந்து சிரமப்பட்டுப் படித்துச் சிந்தித்துச் செரிப்பதற்கல்ல, மேலோட்டமாகவே மேய்ந்து வந்ததை வாரி விழுங்குவதற்கு; காதலுக்குப் பதிலாக உணர்ச்சிப் பகட்டும், உணர்ச்சி ஆபாசமும்; கூட்டுத்துவச் சமூக நலனுக்குப் பதிலாகத் தனிநபர் சுயநலன்கள், பேராசை. சுருக்கமாகச் சொன்னால் இதுதான் அமெரிக்க கார்ப்பொரேட் வியாபார பாப் கலாச்சாரம்.

ஒருநாள் கடைவீதியில் நடந்து கொண்டிருநதேன். அருகே இருவர் பேசிக் கொண்டே வந்தார்கள். 'பைக்' வண்டியில் ஒரு சிறுவன் வேகமாகக் கடந்து சென்றான். அவனைப் பார்த்ததும் அந்த இருவரில் ஒருவர் சொன்னார்: ''டேய் இதோ போறானே பய - அவன் கிராப்கட் என்ன, சாக்குப்பை பேண்ட் என்ன. ரெண்டே வருசத்துல எப்படிய்யா மாறினான்?'' எப்படி மாறினான்? பாப் கலாச்சாரம் தான். பின்தலையில் நெடுக வாய்க்காலில் செழித்த புல் போல அதிகமாக மயிரை வளரவிட்டு நடந்து கொண்டே அந்தக் குடுமியை இடதுவலதாகக் கோதி தட்டிவிடவேண்டும், தலையைச் சிலுப்பிக் கொள்ள வேண்டும். ஒருத்தன், இன்னொருத்தன், அடுத்தவன், மற்றவன் என்று சங்கிலிபோல பற்றிக் கொள்கிறது இந்த மயிர் கலாச்சாரம்.

www.padippakam.com

இப்போது பார்ப்பனக் குடுமி பழங்கதையாகி, பாப் குடுமி வந்துவிட்டது. 'எங்களுக்கு ஏதாச்சும் வேண்டும்' (ஸம்திங் விவான்ட் - அஞ்சலி படப்பாடல்) என்று திரிகின்ற இளசுகளுக்கு 'ஏதாச்சும்' எது கொடுத்தாலும் வாரிவாரி விழுங்குகிறது; ஆசை ஆசையாய்ப் பருகுகிறது. இதனை 'ஆரம்ப வளர்ச்சி' என்கிறார்கள் விஞ்ஞானிகள். குழந்தை தவழத் தொடங்கும் போது எதை வேண்டுமானாலும் எடுத்து விழுங்கும். அதுபோல, வயது வந்த பிறகும் செய்தால் மூளை வளர்ச்சி குறைந்திருக்கிறது என்று தானே சொல்வோம். இப்படி, பகுத்தறிவை, மூளை வளர்ச்சியைக் குறைக்கச் செய்வது, விளம்பரங்களின் மூலம் கவர்ச்சி காட்டி சந்தையில் கற்பனையாக தேவையை உருவாக்கி சரக்கைத் தள்ளிவிடுவது முதலாளித்துவத்தின் வியாபார முறையாகும்.

நாகரீகம் என பரப்பப்படுவதை நாம் கேவலம், கேலிக்குரியது என்றால் எப்படி? காரணம், இந்தப் புது வாழ்க்கை முறை இந்தியாவில் வேகமாக காளான் போல எங்கும் நீக்கமற வளர்ந்து கொண்டிருக்கிறது. சொல்லே இல்லாமல் ஒருத்தரை ஒருத்தர் பார்த்தே இளைய யுகம் 'பாப்' கலாச்சாரத்தைக் கற்றுக் கொண்டு விடுகிறது. பிரமிடுகள், கோயில், சர்ச், மசூதி போல - பார்த்தாலே ஒரு கலாச்சாரத்தை மக்கள் புரிந்து கொள்ளவில்லையா, அதுபோல. பிரமிடுகள், பரோவோவின் அதிகாரத்தையும் குறித்ததல்லவா? கோயில்களின் பிரும்மாண்டமான உருவம் பார்ப்பனீயத்தின் அதிகாரத்தைக் குறிக்கிறதல்லவா? - அதுபோலவே தான் 'பாப்' தலைமுடி, உடை கலாச்சாரமும். உலகிலேயே உசத்தி அமெரிக்காதான் என்று பலமாகப் பிரச்சாரம் செய்கிறது.

இந்த விதமான பிரச்சாரம் மறைவாக நடக்கிறது; நேராகப் புலப்படாமல் மறைவான தூண்டுதலாக நடக்கிறது. கோகோ கிளாஸ், பேகி பேண்ட், லெஹர் பெப்சி பானம் சகிதமாக பாப் கலாச்சாரம் நம் மண்ணுக்குள்ளே திணிக்கப்படுகிறது. ஏகாதிபத்தியம் முன்பு நேரடியாகத் தன் கலாச்சாரத்தைத் துப்பாக்கி முனையில் திணித்தது; இன்று பல புதிய வடிவங்களில் நாடுகளைத் தன் பிடிக்குள் வைக்கிறது. இதில் கலாச்சாரத்தின் மூலம் பல தயாரிப்புகளைச் செய்து நவகாலனிய முறைகளில் தனது மேலாதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்கிறது. அத்தகைய ஆயுதமே அமெரிக்காவின் பாப் **கலாச்சாரம்.**

தனது அரசியலைப் பரப்புவது மட்டுமல்ல, 'சமூகக் கல்வி'யையும் அமெரிக்கா தனது விருப்பத்துக்கேற்றபடி போதிக்கிறது. ரேடியோ, பத்திரிகை, டி.வி., திரைப்படங்கள், சுற்றுலாத் துறை மூலமாக இவற்றைத் தொடர்ந்து உருவேற்றுகிறது. மேற்கத்திய ஏகாதிபத்திய கலாச்சாரத்தின் சாரமான ஆடம்பரப் பொருள் மோகம், நுகர் பொருளியம், அரசியலில் அக்கறை அற்றிருத்தல், வன்முறை ஆகிய மூன்றையும் இது பரப்புகிறது. இந்தியாவில் பரப்பப்படும் இந்தக் கருத்துக்கள் எப்படி அமெரிக்க மாடலில் ஒட்டி வருகின்றன என்று விரிவாகப் பார்க்கலாம்.

ஐந்து வருடங்களாக இந்தியப் பத்திரிகைகள் வெகுவாக மாறிவிட்டதைக் கவனித்தால் புரியும் - பளப்பள தாள்களில், பல வண்ண ஆஃப் செட் அச்சில் ஏராளமான விளம்பரங்களின் மத்தியில் துணுக்குத் தோரணங்கள், கட்டுரைகள் அநேகமாக ஓரிரு பக்கங்களே. அரை நிர்வாண, கால் நிர்வாண 'கவர்ச்சிக் கன்னிகள்', சினிமா எக்ஸ்டிராக்கள் அலங்கரிக்காத விளம்பரங்களே இல்லை என்று சொல்லலாம்.

இவற்றைப் படிப்பவர்களின் மனத்தில் பொய்யான ஒரு சிந்தனையை ஏற்படுத்துகிறார்கள். சுற்றிலும் ஆயிரக்கணக்கான பிரச்சனைகள், சமூகக் கொந்தளிப்புகள் இருந்தாலும் எதுவுமே நடக்காதது போல உண்மை நிலையை மூடி மறைக்கிறார்கள். வெற்றி அடைந்தவர்களின் வாழ்க்கையைக் காட்டுகிறோம் என்று சில கதைப் பாத்திரங்களைக் காட்டி சமுதாயம் முழுவதும் மக்கள் சந்தோஷமான, சொகுசான, நம்பிக்கையான, இன்பமான வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்று அப்பட்டமாய் புளுகுகிறார்கள். இந்த உத்தி அப்படியே அமெரிக்க மாடல்.

டி.வி. மூலம் ஜனரஞ்சகமாக்கப்பட்டுள்ள 'மிக்கி மவுஸ்' (மிக்கி எலி) - பார்க்கின்றவர்கள் அப்படியே பிரமித்து நின்று போய் விடுகிறார்கள். சிறுவர்கள் மட்டுமல்ல, வயதானவர்கள் கூட தன்வசமிழந்து போகிறார்கள். திருட்டுப் பூனையோ, ரத்த வெறி பிடித்த ஓநாயோ படத்தில் வரும். ஏதாவது பாவம் ஒரு எலியோ, செம்மறி ஆடோ பாதிக்கப்படும். அப்புறம் என்ன? பூனை, ஓநாய் தண்டிக்கப்படும். இந்தக் கட்டுக்கதையில் மெய்மறப்பதற்கு என்ன இருக்கிறது என்று யோசித்தால் ஓர் உண்மை தெரியவரும். பழிக்குப் பழி வாங்குவது என்பதே அடிநாதமான கரு. இவ்வளவே சிறிதான மிக்கி மவுஸ் ஏதோ ஓர் அற்புத சஞ்சீவினியைச் சாப்பிடும்; பிறகு 'சூப்பர்மேன்'





படிப்பகம்

www.padippakam.com

ஆகிவிடும். அப்புறம் அது எல்லா எதிரிகளையும் கண்ணில் விரல் விட்டு ஆட்டும்.

முக்கியமாக இதுதான் அமெரிக்கப் பிரஜையின் மனோவியலை உருவாக்குகிறது. மிகப் பெரிய முதலாளித்துவ சந்தைச் சமூகத்தில் ஒரு துளியாக இருக்கும் தனி நபர் மிக்கி மவுஸ் என்ற அற்பச் சிறு எலியோடு எல்லா விதத்திலும் ஒத்துப் போகிறார். தன்னையே அந்த எலியில் காணும் நபர் அதன் சாகசங்களில் தன் ஆற்றாமை, இயலாமையைக் கரைத்துக் கொள்கிறார். கதையின் உள்ளே வைக்கப்படும் எல்லாக் கருத்துக்களும் பார்ப்பவர்களை அவர்களை அறியாதபடி கவ்விக் கொள்கின்றன. இனவாதம், ஏகாதிபத்திய மமதை, செருக்கு, பணத்துக்காகச் சாகசங்கள் செய்வது, போட்டி போடுவது இவைகள் கதைக் கருக்கள். ஒரு சின்னஞ்சிறிய அமெரிக்க மிக்கி மவுஸுக்குள்ளே இவ்வளவு 'பெரிய விஷயங்கள்' திணித்து இந்தியாவுக்குள் அனுப்பப்படுகின்றன என்று எத்தனைப் பேர் புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

பாவெல் குரேவிச் என்ற ரஷிய எழுத்தாளர் அமெரிக்க கலாச்சார ஆதிக்கம் பற்றிய தனது நூலில் ஏழை நாடுகளின் மீது அமெரிக்கப் படங்கள் எவ்வாறு திணிக்கப்படுகின்றன என்பதை விரிவாக ஆராய்ந்து எழுதியிருக்கிறார்.

டி.வி. மிக்கிமவுஸ் மட்டுமல்ல, விஞ்ஞானக் கதைகள் என்ற பெயரில் கட்டுக்கதைகள் உருவாக்கி சோசலிசத்துக்கு எதிராக அமெரிக்கா பிரச்சாரம் செய்கிறது. லேசர் மற்றும் உயிர்வதைக் கருவிகள் மூலம் உலகில் எங்கோ கற்பனையான முறையில் சண்டைகள் நடப்பதாகக் கதையைப் பின்னி, மூல காரணம் சோசலிச 'சர்வாதிகாரம்' என்று அவதூறுகளைச் செய்கிறது. ஒருபக்கம் யுத்த வெறியையும், வன்முறையையும் மூட்டுவது, இன்னொரு பக்கம் முதலாளித்துவமே வெல்ல வேண்டும் என்று கருத்து உருவாக்குவது. இப்படிப்பட்ட யுத்தங்கள், சினிமாக்கள் இந்தியா முழுவதும் ஊடுருவி உள்ளன. அமெரிக்க தயாரிப்பான 'ஸ்பைடர் மேன்' (சிலந்தி மனிதன்) சமூக அநீதிகளுக்கு எதிராகத் தனி நபராகச் சண்டை போடுவான்; அவனுக்குச் சிலந்தியின் விஸ்வரூபம் கிடைத்ததும் எங்கு வேண்டுமானாலும் தாவுவான்; 24 மாடிக் கட்டிடங்களில் ஏறுவான். எதிரிகளைத் தாக்குவான். சாரமான அம்சம். தனி நபர் வீரசாகசம். ஸ்வீடனில் இந்த ஒரே காரணத்துக்காகவே, படம் குழந்தைகளை வன்முறைக்குத் தூண்டுகிறது என்று தடை செய்யப்பட்டுவிட்டது. ஆனால் இந்திய டி.வி., ரேடியோ எதைப் பற்றியும் கவலைப்படாமல் 'ஸ்பைடர் மேனை' வாங்கி ஒளிபரப்பி வருகிறது. இந்திய பத்திரிகைகளில் இதன் கார்ட்டூன் வந்துவிட்டது. இப்போது 'குமுதம்' தமிழ் வார ஏடும் 'ஸ்பைடர் மேனை'த் தொடராகப் போடத் தொடங்கிவிட்டது.

சினிமாக்களில், வியட்நாமுக்கு எதிராகச் சண்டை நடந்த போது போர் வெறியைத் தூண்ட ஹாலிவுட் படங்கள் எடுக்கப்பட்டன. இவை இந்தியாவிற்குள் சரளமாக வருகின்றன. ராம்போ படங்கள் சிறப்பான எடுத்துக்காட்டுகள். இப்படி அனைத்துத் துறையிலும் அமெரிக்காவை உயர்த்திப் போற்றும் கதைகளே நிறைந்துள்ளன. ஒன்று யுத்த வெறி, இல்லாவிடில் பேரழிவு, நாசத்தைப் பற்றி திகிலூட்டும் போக்கு. இவையே அமெரிக்க பிரச்சாரத்தின் இலக்கு. 60-ஆம் ஆண்டுகளில் தொடங்கி 30 ஆண்டுகளாக இது தீவிரமாகி வருகிறது. எத்தனையோ இந்தியப் பிரச்சனைகள் தலைக்கு மேல் இருக்க, கற்பனையான விமான விபத்து, கப்பல் விபத்து, கட்டிட விபத்து ஆகிய கதைகள் (ஏர்போர்ட், டவரிங் இன்ஃபர்னோ, எர்த்குவேக், ஜாஸ்) நிஜ வாழ்க்கையைச் சிந்திக்க விடாதபடி திசை திருப்புகின்றன. இதன் பெயர்தான் அமெரிக்காவின் சமூகக் கல்வி.

அமெரிக்காவிலேயே இதற்கு எதிர்ப்பு தொடங்கி நடந்தாலும், முதலாளிகள் இந்தக் குப்பைகளை உலக ஏழை நாடுகளில் கொண்டு வந்து கொட்டத் தயங்குவதில்லை. குறிப்பாக, இந்தியா போன்ற மூன்றாம் உலக ஏழை நாடுகளில் உள்ள மக்கள் தொடர்புச் சாதனங்களை ஒட்டு மொத்தக் குத்தகையாகத் தங்கள் கையிலே வைத்திருப்பவர்கள் அமெரிக்காவுக்கு எடுபிடி, ஐந்தாம் படையாக வேலை செய்யத் தயாராக இருக்கிறார்கள். இந்தக் கைக் கூலிகளே அமெரிக்க, மற்றும் பிற ஏகாதிபத்திய கலாச்சாரங்களை டி.வி. மூலம் ஒளிபரப்ப ஏற்பாடு செய்கிறார்கள். இதுதவிர, அமெரிக்காவே 83-84 ஆம் ஆண்டுகளில் உலக டி.வி., வலைப்பின்னலை நிறுவியது. இதன் மூலம் நேரடியாகவே மூன்றாம் உலக நாடுகளில் தனது நிகழ்ச்சிகளை அமெரிக்கா ஒளிபரப்ப முடியும்.

அமெரிக்க அரசாங்கம் மட்டுமல்ல, அமெரிக்க ஆளும் வர்க்கங்களான ராக்ஃபெல்லர், ஃபோர்டு, கெல்லோகி போன்றவர்கள் ஏழை நாடுகளுக்குள் ஏராளமான பிரச்சார சரக்குகளை, தருமம், கல்விபோதனை, கலாச்சார பரிமாற்றம், நவீனமயமாக்குதல், நாகரிகப்படுத்துதல் என்ற பல பெயர்களில் நுழைக்கின்றனர். இங்குள்ள தரகுமுதலாளிகளும், அரசுகளும் தயாராகக் காத்திருந்து வரவேற்கின்றனர். லத்தீன் அமெரிக்க நாடுகளில் பாலே நடன சுற்றுப்பயணங்களையும், இசைப் போட்டிகளையும், கவிஞர்களுக்குப் பொற்கிழிகளையும் வாரி வழங்கும் தரகுமுதலைகள் போலவே, இந்தியாவிலும் டன்லப், அசோக் லேலாண்டு, வில்ஸ், வெல்கம் ஹோட்டல் குரூப்ஸ் போன்ற தரகுக் கம்பெனிகள் அதே வேலையைச் செய்கின்றன. ஒரே கல்லில் அவை இரண்டு மாங்காய்களை அடித்து வருகின்றன - கூலிக்கலைஞர்களை உருவாக்கும்போதே, அடிமைக் கலாச்சார வித்தையும் ஊன்றி விடுகின்றன. இந்திய டி.வி., ரேடியோ 'சுயேச்சை'யாக்கப்பட்டால் தரகுவேலைகள் பலமடங்கு பெருகிவிடும்.

ஆயுதம் கொண்டு அடக்கிப் பணிய வைத்தது காலனிய கட்டம். இப்போதோ அவை மனோதத்துவ ரீதியான போரைத் தொடுக்கின்றன. அதற்குப் பலவழிகள் வைத்திருக்கின்றன. கலாச்சாரமும் ஒரு வழிமுறை; ரேடியோ, டி.வி., திரைப்படங்கள் அதன் கருவிகள். அதன் பிரதான இலக்கு துடிப்பான இளையதலைமுறை போனிஎம், மடோனா, மைக்கேல் ஜாக்சன், குளோரியா இப்படி மலைமலையாக 'ஹிட்' இசையும், சினிமாக்களும் அவநம்பிக்கை, நிச்சயமின்மை, சமுதாயத்தோடு ஒத்து வாழ முடியாத பிணக்கம் ஆகிய மோசமான எண்ணங்களை ஊட்டி விடுகின்றன. ஒளிப்பழம் என்று மயங்கி நெருப்பில் வந்துவிழும் விட்டில் பூச்சிகள் போல இளைய தலைமுறை பலியாகிக் கொண்டிருக்கிறது. மேல்நாட்டில் உள்ள இளைய ஆண், பெண்கள் வாழ்க்கையில் முன்னேறி ஆடம்பரமான வசதிகளோடு சொந்த வீடுகள், சப்பல்கள், வண்ண ஓவியங்கள் உட்பட ஏராளமான சொத்துக்களைச் சேர்ப்பதாகச் சித்தரிக்கும் படங்களைப் பார்த்து அவை உண்மை என்றும் அதுபோலவே நாமும் வாழவேண்டும் என்றும் வெறியோடு விரும்புகிறார்கள். காசு பணம் அதிகம் படைத்தவர்கள்தான் அங்கேயும் முன்னேற முடியும். இந்த உண்மைகள் இங்கே முழுதாக மறைக்கப்படுகின்றன. வெளிநாட்டுப் பத்திரிக்கையிலிருந்து விவரங்களை எடுத்துப் பிரசுரம் செய்யும் இந்தியப் பத்திரிக்கைகள் இந்த வேலையைத் திட்டமிட்டுச் செய்கின்றன.

பாப் கலாச்சாரம் இவ்வளவு விரிவாக ஏகாதிபத்தியங்களால், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் பரப்பப்படுவதற்கு என்ன காரணம்? உலகத்தை ஒரே சந்தையாக்குவது என்பதே. எப்படி தொழில்

## அமெரிக்கப்பாணி வேண்டாம்!

1980-ஆம் ஆண்டுகளின் மத்தியில் அமெரிக்க கம்பெனி ஒன்றுக்கும் ஃபிரான்ஸ் அரசுக்கும் இடையே உலகின் மிகப் பெரிய 4-வது டிஸ்னிலேண்டு கட்டுவதற்கு ஓர் ஒப்பந்தம் போடப்பட்டது. உடனே ஃபிரான்ஸ் முழுவதும் மக்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். பாரிஸ் அருகே உள்ள நகரில் டிஸ்னிலேண்டு கட்டப்படுவதால் 40,000 பேருக்கு வேலை கிடைக்கும் என்று சொல்லப்படுவது மோசடி என்று மக்கள் சாடினார்கள். உள்கட்டுமான வேலைகளுக்காகவே மற்ற செலவினங்களில் இருந்து எடுத்து ஏராளமாக இதற்குச் செலவு செய்து விடுவார்கள் என்று எச்சரித்தார்கள். தவிர, 2000 ஏக்கர் விளைச்சல் நிலம் பறிமுதல் செய்யப்படும்; பண்ணைகள் அழிக்கப்படும்; ஆயிரக்கணக்கான உழைப்பாளிகள் வேலை இழப்பார்கள்; ஒப்பந்தப்படி 10 கி.மீ. பரப்பளவுக்குச் சுற்றிலும் உள்நாட்டு வர்த்தகக் கட்டுமானங்களோ, கலாச்சார பொழுதுபோக்கு வசதிகளோ பிரான்ஸ் அரசு புதிதாகக் கட்டக்கூடாது.

இது எல்லாவற்றையும் விட "ஃபிரான்சிலேயே அற்புதமான, அழகான நாட்டுப்புறக் கதைகளும், குழந்தை நூல்களும், கேலிச் சித்திரங்களும் இருக்கும் போது அமெரிக்கப் பாணி பொழுதுபோக்கு எதற்காக? நாமென்ன லாயக்கில்லாதவர்களா?" என்று மக்கள் குமுறினார்கள். தேச உணர்வு புண்படுத்தப்படுவதையும், அமெரிக்க ஆதிக்கம் திணிக்கப்படுவதையும் கண்டு அவர்கள் கொதித்தார்கள். டிஸ்னிலாண்டு ஒப்பந்தத்தை நொறுக்கி வீசி எறிந்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



துறை, நிதித்துறைகளை உலகம்பூராவும் வங்கிகள், உலக கூட்டுகள் மூலம் செய்து வருகிறதோ, அதற்கேற்ப, அதேபோல தகவல் தொடர்புத் துறையிலும் வியாபார நிறுவனங்களாகச் செய்தி நிறுவனங்களை வளர்க்கின்றன. உலகம் முழுவதும் 120 செய்தி நிறுவனங்களுக்கு மேல் முதலாளித்துவ நாடுகளில் இருந்தாலும், மொத்தம் ஐந்து நிறுவனங்களே (அமெரிக்காவின் அசோசியேடட் பிரஸ், யுனைடெட் பிரஸ் இண்டர்நேஷனல்; பிரிட்டனின் ராய்டர்ஸ் லிட்; பிரெஞ்சு நாட்டின் ஏஜென்சி ஃபிரான்ஸ் பிரஸ், ரஷ்யாவின் டாஸ்) மிக முன்னேறிய செய்தித் தொடர்பு தொழில் நுட்பத்தைக் கைவசம் வைத்துள்ளன; உலகின் செய்திகள் இவைகள் மூலம்தான் அதிகபட்சம் பரப்பப்படுகின்றன.

கம்யூனிச எதிர்ப்பு, விடுதலைப் போராட்ட எதிர்ப்பு இரண்டும் அவற்றின் நோக்கங்கள். இவையே அவற்றின் சித்தாந்த, அரசியல் போர்க்கருவிகள். இத்தகைய பிரச்சாரத்திலும் மூன்று படிநிலைகள் உண்டு. ஒன்று: ஏழை நாடுகள் மற்றும் இரண்டாம் உலக நாடுகளில் அறிவுஜீவிகள், சித்தாந்தவாதிகள், பிரச்சாரகர்களைக் குறிவைப்பது. ஆராய்ச்சி மையங்கள் கட்டி அதன் மூலம் முற்போக்கான, ஜனநாயக, சோசலிச கருத்துகளுக்கு எதிரான கருத்து, கோட்பாடுகளை உருவாக்குவதும், பரப்புவதும் ஒரு வேலை. இரண்டு: ஜனரஞ்சகமான அறிவியல் வெளியீடுகள், பள்ளிப் பாட நூல்கள், அறிவுஜீவிகள் பல்வேறு கட்சி ஊழியர்களுக்காக செய்தித் தொகுப்பு நூல்கள்; மூன்று: ஜனரஞ்சகமான பிரச்சாரம் — பத்திரிகை, டி.வி., ரேடியோ மூலமாக. சும்மாவா கோடிக்கணக்கில் பணம் கொட்டுவார்கள் ஏகாதிபத்தியங்கள்? முதலாளித்துவத்தை எவ்வகையாயிலும் ஒப்பனை செய்து அழகுபடுத்துவது; அதன் மனித குல விரோத, அநீதியான குணங்களை மூடி மறைப்பது; அதன் வாழ்க்கை முறையை, கலாச்சாரப் பண்பை உலகில் திணிப்பது - ஆகிய 'லட்சியங்களுக்'காகத்தான் அவ்வளவு செலவுகள் செய்கிறார்கள்.

அமெரிக்கா, பிரிட்டன், ஃபிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் ஏழை நாடுகளை கருத்துக்கள் மூலம் தாக்கும்போது அதற்குப் போலியான ஜனரஞ்சக முழக்கங்களைச் சூட்டிவிடுகிறார்கள். நீரோட்டமான தகவல் பரிவர்த்தனை, சுதந்திரக் கருத்துப் பரிமாற்றம், பத்திரிகைச் சுதந்திரம், கலாச்சாரப் பரிமாற்றச் சுதந்திரம் - போன்றவை ஒருசில எடுத்துக்காட்டுகள்.

ஆனால் லெனின் கூறியது போல — "உலகெங்கும், எங்கெல்லாம் முதலாளிகள் இருந்தாலும் அங்கெல்லாம், பத்திரிகைச் சுதந்திரம் என்பது முதலாளிகளின் நலன்களுக்காக பத்திரிகைகளை விலைபேசி வாங்குவது, எழுத்தாளர்களை விலைபேசி வாங்குவது, லஞ்சம் கொடுத்து வாங்கி மக்களுக்குப் பொய்யான கருத்துக்களைப் பரப்புவது என்பதுதான்".

சுதந்திரம் என்ற பெயரில் சுதந்திரத்தை நசுக்குவது, பரிமாற்றம் என்ற பெயரில் தனது கருத்தை மட்டும் வளர்க்க வேண்டும் என்று திணிப்பது என்பதுதான் ஏகாதிபத்தியங்கள் நோக்கம். இவை எவ்வளவுக்கெவ்வளவு அம்பலமாகிறதோ, அந்த அளவுக்கு புதுப்புது விளக்கங்கள் கொடுக்க முனைகிறார்கள் முதலாளித்துவ அறிவாளிகள். அமெரிக்கச் சித்தாந்தியான எபிக்னீவ் பிரெஷின்ஸ்கி கூறுகிறார்: "இது மரபு வழிப்பட்ட புரட்சியுகம் அல்ல; மனித வரலாற்றின் ஒரு புதிய கட்டத்தை அடைந்திருக்கிறோம். பிரெஞ்சு, போல்ஷ்விக் புரட்சிகள் கொண்டு வந்ததைக் காட்டிலும் பிரும்மாண்டமான விளைவுகள் நிகழக்கூடிய மாற்றங்கள் வரப் போகின்றது. அதன் வாயிலில் நாம் நிற்கின்றோம்" மிகமிகப் பெரிய அற்புதங்கள் என்று எபிக்னீவ் வருணிப்பதில் ஒரு வெங்காயமும் இல்லை. இனி உலகை மாற்றப் போவது அமெரிக்கா மட்டுமே என்பது தான் அவரது கண்டுபிடிப்பு.

தேசங்கள் என்ற எல்லை மனிதகுலத்துக்குத் தேவையில்லை - தேச இறையாண்மையோ, தேசபக்தியோ, தேசீய இன கலாச்சாரங்களோ, பாரம்பரிய மதிப்புக்களோ எதுவுமே தேவையில்லை - என்பதுதான் ஏகாதிபத்தியங்களின் 'புரட்சி'கரமான கண்டுபிடிப்பு. எழுபதாம் ஆண்டுகளில் பிரான்சில் தோன்றிய 'புதிய தத்துவக்காரர்கள்' இந்தக் கருத்தைத்தான் அறிவித்தார்கள். கலாச்சாரப் புத்துயிர்ப்புக்கு தேசீய இனங்களின் தனித்துவமான குணங்கள் தேவையில்லை, அவைகளை வெட்டி எறிந்துவிட வேண்டும் என்றார்கள். இது கம்யூனிச சர்வ தேசீயத்துக்கு நேர் எதிரானது; கம்யூனிச தத்துவம் தேசீய இன கலாச்சாரங்களின் தனித்துவங்களை மதித்துத்தான் புரட்சி நடக்கவேண்டும் என்று கூறுகிறது. புதிய தத்துவக்காரர்கள் அமெரிக்க கலாச்சாரமே கவர்ச்சியானது, ஏனெனில் அதற்கு பாரம்பரிய, குழுச் சமுதாய வேர்கள் கிடையாது என்றார்கள். இதே காரணங்களால் தான் நாங்கள் கம்யூனிசத்துக்கு எதிரி என்றும் அறிவித்துக் கொண்டார்கள்.

இத்தகைய சிந்தனைகளின் சாராம்சம் அமெரிக்கா உலக மேலாதிக்கத்தைப் பிடிப்பது சரியானதே என்பதாகும். ஏகாதிபத்தியங்களின் கலாச்சாரங்கள் இந்தியாவில் குவிக்கப்படுவதற்கான நோக்கத்தை உழைக்கும் மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஏகாதிபத்தியங்களின் அரசியல், கலாச்சார, ஆதிக்கங்களை இடையறாது எதிர்ப்பவர்கள் உலகெங்கும் உள்ள கம்யூனிஸ்டு இயக்கங்களே. சில மூன்றாம் உலக நாடுகளும், இரண்டாம் உலக நாடுகளும் ஏகாதிபத்தியங்களுடன் எழும் முரண்பாடுகளின் காரணமாக ஒரு சில நேரங்களில் ஏகாதிபத்திய கலாச்சாரங்களுக்கு எதிராகவும், உலக மேலாதிக்கத்திற்கு எதிராகவும் குரல் எழுப்புவதுண்டு. 1982 ஆகஸ்டு மாதம் மெக்சிகோவில் யுனெஸ்கோ கூட்டிய உலக கலாச்சார மாநாட்டில் மாநாடே கலாச்சாரத் திணிப்புகளைக் கண்டனம் செய்தது.


அங்கு பேசிய பிரெஞ்சு கலாச்சாரத் துறை அமைச்சர் ஜாக்லாங் அமெரிக்க மேலாதிக்கத்தைப் பெயர் குறிப்பிடாமல் சாடினார். ஆனால் மூன்றாம் உலக நாடுகளில், குறிப்பாக நமதுநாட்டில் ஏகாதிபத்தியங்களின், குறிப்பாக அமெரிக்காவின் ஐந்தாம் படைகள் அதற்கு ஆதரவளிப்பதால் ரேடியோ - டி.வி. - வீடியோ பத்திரிகைகள் மூலம் ஏகாதிபத்திய கலாச்சாரம் பலமாகப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

உலகெங்கும் அமெரிக்க பாப் கலாச்சாரத்துக்கு எதிராகப் போர் தொடங்கிவிட்டது. இங்கும் அதை முறியடித்திட வேண்டுமானால் எதிர்ப்புப் போரைப் பலமாகவும் விரிவாகவும் எடுக்கவேண்டும். உழைக்கும் வர்க்கமான நாம் இதில் முன்னோடியாக நிற்கவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



திருச்சூர் - அனைத்திந்தியப் புரட்சிப் பண்பாட்டுக் கழகத்தின் நான்காவது மாநாடு:

# முன்னேறுகிறது பண்பாட்டுப் படை!



அக்டோபர் 19-21 — 3 நாட்கள் கேரளாவின் திருச்சூர் நகரம் தேக்கின் காடு மைதானத்தில் அகில இந்தியப் புரட்சிப் பண்பாட்டு மையத்தின் (AILRC) நக்சல்பாரிப் பிரகடனம் உரத்து ஒலித்தது. பல நூற்றுக்கணக்கான புரட்சிக் கலைஞர்களின் ஆடல், பாடல்கள் மைதானத்தில் இருந்த கோயில்களின் வெடிச் சத்தங்களையும், நகரத்தில் ஓயாது ஒலித்த ஆடம்பரக் கலாச்சாரச் சலசலப்புக்களையும் மீறி சவாலாக ஒலித்தன. நக்சல்பாரிப் புரட்சியாளர் தோழர் அடியார் பெருமான் வர்கீஸின் நினைவாக 'வர்கீஸ் நகர்' என்று தேக்கின் காட்டுக்குப் பெயர் சூட்டப்பட்டது. அவசர நிலைக் காலத்தில் பாசிச இந்திரா கும்பலால் கொல்லப்பட்ட தோழர் ராஜன் நினைவாக அரங்கத்தின் பெயர் சூட்டப்பட்டது.

அக்டோபர் 19 காலை அ.இ.பு.ப.மை. பொதுச் செயலாளர் தோழர் கே.வி.ஆர். அமைப்பின் கொடியேற்றினார். வரவேற்புக் கமிட்டித் தலைவர் எழுத்தாளர் கோவிலன் மாநாட்டை ஏற்பாடு செய்த அ.இ.பு.ப.மை. உறுப்பினரான 'ஜனகீய கலாசாகித்ய வேதி'யின் (ஜ.க.சா.வே) அமைப்புக் கொடியை ஏற்றி வைத்தார். தோழர் சுப்பாராவ் பாணிக்கிரகியின் 'கஷ்டஜீவிகள் நாங்கள் கம்யூனிஸ்ட்டுகள்' என்ற பாடல் பல மொழிகளிலும் இசைக்கப்பட்டன. விண்ணதிர்ந்த முழக்கங்களுடன் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

தொடக்க உரையில் தோழர் கே.வி.ஆர். சர்வதேச அரசியல் சூழ்நிலையை விளக்கினார். கம்யூனிசம் தோற்றுவிட்டது என்று முதலாளித்துவம் செய்துவரும் பிரச்சாரத்தைத் தோலுரித்துக்காட்டி, தோல்வி திரிபுவாதத்துக்கே என்று விளக்கினார். தொடர்ந்து கோவிலன் உரையுடன் மாநாடு தொடங்கியது. இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா-லெ) செங்கொடி, மக்கள் யுத்தம் குழுக்களின் வாழ்த்துரைகள், மற்றும் பிற வாழ்த்துரைகள் படிக்கப்பட்டன.

தோழர் கே.வி.ஆர். தமது அனுபவத் தொகுப்பில் அ.இ.பு.ப.மை. உறுப்பு அமைப்புக்களின் செயல்பாடுகள் பற்றி எடுத்துச் சொன்னார். மதவெறி சக்திகள் கனவேகமாக நாட்டையே பின்னோக்கிப் படுகுழிக்குள் தள்ளிவரும் இவ்வேளையில் நிலப்பிரபுத்துவப் பழமைப் பிற்போக்கு கலாச்சாரத்துக்கு எதிராக உறுப்பினர் தொடுத்துவரும் போராட்டங்களை விளக்கினார்.

உரைகள் மலையாளம், ஆங்கிலம் இருமொழிகளிலும் இருந்தன. அரங்கில் 200 பேருக்குமேல் ம.க.இ.க. சார்பில் பிரதிநிதிகள் தமிழகத்திலிருந்து வந்திருந்ததால் உரைகளின் சுருக்கம் தமிழிலும் தரப்பட்டது.

அன்றைய இரண்டாவது அமர்வில், கேரள கலாச்சாரத்தின் மீது நக்சல்பாரிப் புரட்சியின் தாக்கம்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது. ஜ.க.சா.வே. தலைவர் தோழர் கே.ஏ.மோகன்தாசும், கவிஞர் சச்சிதானந்தனும் உரையாற்றினார்கள். தோழர் காகுராலா 'தெலுங்கு சினிமாவில் நக்சல்பாரியின் தாக்கம்' என்ற தலைப்பில் பேசினார். அமர்விற்கு தோழர் பி.ஜே.ஜேம்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

தலைமை தாங்க, டாக்டர் சண்முகம் புள்ளே பட்டா வரவேற்றுப் பேசினார். நிகழ்ச்சியின் போது மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன: 'இந்திய சோசலிசப் புதுக் கவிதைகள்' - தொகுப்பு: சச்சிதானந்தன்; 'பவிஷ்யத் சித்திரபாடம்' - தோழர் வரவரராவின் கவிதைத் தொகுப்பு (மலையாள மொழியாக்கம்); 'வசந்த கீதம்' தெலுங்கு கவிதைகள் தொகுப்பு.

அன்று பிற்பகல் கவியரங்கில் சச்சிதானந்தன் தலைமையில், பல்வேறு மொழிகளின் புரட்சிக் கவிஞர்கள் தோழர்கள் வி.வி. ஆர். ஏ.பி.சர்மா, ராஜ்கிஷோர், சுரேந்திர் சிங், ரஜனி, அருண் சன்யமாத், ஜே.என். எதிபிரதிபா, வருண்சங்கர், ராஜீவன், வேம்பன் ஆகியோர் கவிதைகள் பாடினர்.

அக்டோபர் 20 - அன்று காலை முதல் அமர்வில் 'பரவிவரும் திரிபுவாதத்துக்கெதிராக கலாச்சாரப் புரட்சியை உயர்த்திப் பிடிப்போம்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. தோழர் அசித்குமார் (ஜன நாட்டிய மண்டலி, ம.பி.) தலைமை தாங்க, தோழர் சேகர் அத்தானிக்கல் வரவேற்றுப் பேச, தோழர்கள் டாக்டர். டீபிள்யூ.சி.தேவ், எம்.எம்.சோமசேகரன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

மாநாட்டு மேடையில் பல்வேறு மாநில புரட்சித் தியாகிகளின் உறவினர்கள் அறிமுகப்படுத்தப் பட்டனர். ஐ.க.சா.வே. செயலாளர் தோழர் பி.கே.வேணுகோபால், வர்கீஸ், பாலகிருஷ்ணன் ஆகியோரின் உறவினர்களை அறிமுகப்படுத்தும் போது 'இரத்த சாட்சிகளுக்கு மரணம் இல்லை' என்ற எழுச்சிக்குரல்கள் அரங்கிலே அலைஅலையாய் எழுந்தன.

இருநாட்களிலும் - அரங்கிலும், பொதுக்கூட்ட மேடையிலும் ஜ.நா.ம. (ஆந்திரம்) ஐ.க.சா.வே., ம.க.இ.க., ஆவுகான், பீகார் கே.எஸ்.எஸ்.சந்தால் ஆதிவாசிகள் போன்ற கலைக்குழுக்களின் கனல் மணக்கும் பூக்கள் மேடையில் முழங்கின. பசித்த வயிறுகளின் கொந்தளிப்பான வீரநாட்டியங்களும், நாளைய புரட்சியின் வெற்றியை இன்றே வரவேற்கும் மகிழ்ச்சிக்கூத்தும் எழுச்சியோடு நிகழ்த்தப்பட்டன. ஆவுகான், ஐ.க.சா.வே., ம.க.இ.க. நாடகங்கள் சிறப்பான வரவேற்பைப் பெற்றன.

மாநாட்டின் இறுதி நாளில் கொத்துக் கொத்தான சிவப்புப் பூக்கள் போல செங்கொடிகள் விண்ணில் அசைய, பிரும்மாண்டமான மார்க்ஸ், தியாகிகளின் உருவப்படங்கள் ஏந்தி, முழக்க அட்டைகளுடன், ஆடல், பாடல், முழக்கங்களுடன் 6000 பாட்டாளி வர்க்க வீரர்கள் வீறுநடை போட்டுச் சென்றது அற்புதக் காட்சியாகஇருந்தது. ஊர்வலம் முடிந்து நடந்த பொதுக் கூட்டத்தில் 10,000 பேர் நடுஇரவையும் கடந்து கட்டுப்பாட்டோடு அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்த்தனர்.

ஆளும் வர்க்கங்களின், திரிபுவாத - போலி கம்யூனிஸ்டுகளின் முகத்திரை கிழிக்கும் சவாலாக, ஆர்.எஸ்.எஸ். போன்ற மத வெறிகளை முறியடிக்கும் ஆயுதமாக, நக்சல்பாரிச் செய்தியாக அ.இ.பு.ப.மை-ன் 4-வது மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்தது.



# ரசியா: நாறுகிறது சுதந்திரத்தின் பிணம்!

தடுக்கவே முடியாது என்றுதான் தோன்றுகிறது. ரசியாவின் 'நியூடைம்ஸ்' என்ற வாரஏட்டை (ஜூன் 12-18, 1990) படித்து முடித்த போது அப்படித்தான் தோன்றியது. ரசிய வாழ்க்கைமுறைப்பற்றி ஒரே ஒரு பக்கத்தில் புதுவிவரம் கொடுத்திருந்தார்கள்.

யூரி சமாய்லாவ் என்ற எழுத்தாளர் அதில் கொடுத்த விபரங்களிலிருந்து ஒரு சில விஷயங்களை மட்டும் நான் இங்கு தருகிறேன். அதற்குமேல் எடுத்துக்காட்டு கொடுத்தால்கூட நமது பத்திரிக்கை மஞ்சள் பத்திரிக்கை ஆகிவிடும்.

''மாஸ்கோவின் குர்ஸ்கி ரயில் நிலையத்தில் ஒரு புத்தகக் கடையில் நின்றிருந்தேன். வரிசையாக அங்கு வைத்திருந்த பாக்கெட் காலண்டர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அம்மணப்படங்கள் பலவிதங்களில் அச்சிடப்பட்டிருந்தன. யாரோ கையைத் தொட்டதுபோலத் தோன்ற திரும்பினேன். இருபது வயதிருக்கும், இளைஞர் ஒருவன், சற்றுத்தள்ளி அழைத்துக் கொண்டு போனான். கையில் ஒரு கத்தை போட்டோக்களைக் காட்டினான்.

அத்தனையும் கறுப்பு-வெள்ளை காமசூத்திரப் படங்கள். 'ஐந்து ரூபிள் தானே' என்று குருட்டடியாக ஊகித்துக் கேட்டேன். அவன் பலமாகத் தலையை ஆட்டினான். வெட்கத்தோடு 'வேண்டாம்' என்றேன். அடுத்த நிமிடம் வெகுவேகமாக இன்னொரு கத்தையை நீட்டி 3 விரல்களைக் காட்டினான். ''அட வேண்டாம்பா'' என்றேன். அந்த ஊமை என் கண்களை உற்றுப் பார்த்தான். கெஞ்சினான். வேறு ஒரு கத்தையை நீட்டி இரண்டே ரூபிள் தான் என்றான்...'' யூரி சமாய்லாவின் தூரிகை வெகுவேகமாக மிகச் சுருக்கமான கோடுகளில் மாஸ்கோவைத் தீட்டிவிட்டது.

பெரஸ்டிரோய்கா வேகமாகத்தான் நடக்கிறது. காரணமில்லாமலா கோர்பச்சேவுக்கு நோபல் பரிசு கொடுக்கிறார்கள்?

ரசியா முழுவதும் இத்தகைய ஆபாச நிழற்படங்களின் வியாபாரம் அதிகரித்து வருகிறது. காசெட்டுகளின் மேல்அட்டையில் பிரபல அமெரிக்க 'பாப் பாடகர்கள்' நட்சத்திரங்களின் அரை நிர்வாணப் படங்களோடு, உள்ளூர் நிர்வாணப் படங்களும் அச்சடிக்கப்படுகின்றன. இதுவரை ஆபாசம் என்று எறியப்பட்டு தூர ஒதுக்கப்பட்ட 'பிளேபாய்' போன்ற முதலாளித்துவ ஏடுகள் இப்போது முதல்தரமாக மதிக்கப்படுகின்றன.

அண்மையில் வெளிநாட்டிலிருந்து வந்த ஒரு நாடகக் குழுவினர் 'ஒரு ஓசிப் பயணியின் மரணம்' என்றொரு நாடகம் வந்திருந்ததாம். அபத்த நாடகம் **(THEATRE OF THE ABSURD)** வகையைச் சேர்ந்தது. டைரக்டரின் கற்பனை வளம் ஆபாசக்காட்சிகளில்தான் தெரிந்ததாம். இரு கதாபாத்திரங்கள் மேடையில் வந்தன. ஆடைகளை அவிழ்த்துப் போட்டன; ஆபாசமாகப் பேசிக் கொண்டடன; பின்னணியில் நிறையபேர் வந்து உட்கார்ந்துவிட்டுப் போனார்களாம் அம்மணமாக - எதற்காக? - ஒரே நேரத்தில் அமர்ந்து மலம் கழிப்பதற்காக.

கார் தொழிற்சாலை ஒன்று. அதன் கிளப் காபரே நடனம் நடத்திக் காட்டியது. நிகழ்ச்சியை யாரும் படம் எடுக்கக்கூடாது என்று எச்சரிக்கை கொடுத்திருந்தார்களாம். ஒரே ஒருவர் மட்டும் படமெடுக்க அனுமதிக்கப்பட்டது. அவர்கள் டச்சுக் கம்பெனிக்காரர்கள். அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஐரோப்பாவில் நடத்த ஏற்பாடு செய்யப் போகிறார்கள். அப்படி என்ன புரட்சி செய்திருக்கிறார்களாம் காபரேவில். ஒரு மண்ணுமில்லை. அப்படியே அமெரிக்க ஆபாசம்தான். மேலாடை இல்லாத இரு பெண்கள் ராணுவ தொப்பியோடு நிறுத்தாமல் ஆடினார்களாம். புரட்சிக்காலத்தில் புகழ்பெற்ற 'இளம் வழிகாட்டிகளின்' ''சோவியத் மண்ணிலே வாழ்க்கை இனிமையானது'' என்ற பாடலைப் பாடினார்களாம். ''எவ்வளவு விரைவில் நமது லட்சியத்தை அடைகிறோமோ அவ்வளவு விரைவில் நாம் கம்யூனிசத்தை அடைவோம்'' என்று ஆபாச நடிகன் மேடையில் வசனம் பேசுகிறான். திரை விழுவதற்கு முன் பார்வையாளரைப் பார்த்து துப்பாக்கி காட்டுகிறான்; ''எதிரிகளைக் கொல்லுவோம்'' என்று கத்துகிறான். இதற்கு என்ன பொருள் தெரியுமா? பெரஸ்டிரோய்காவுக்கும் எதிரிகள் இருக்கிறார்கள் என்பதுதானாம். அந்த கார் தொழிற்சாலையின் பெயர் என்ன தெரியுமா? லெனினிஸ்ட் கரம் சொமல் கார் வொர்க்ஸ். இதைக் காட்டிலும் கேவலம் வேறென்ன வேண்டும்?

ரசியத் தலைநகரான மாஸ்கோ புரட்சியின் மையமாக முன்பு இருந்தது. இப்போது எதிர்ப்புரட்சியின் மையமாக இருக்கிறது. பெரஸ்டிரோய்கா, கிளாஸ்நாஸ்ட் என்ற பெயர்களில் 'பாப்' சீரழிவுகளுக்கு கதவை அகலமாகத் திறந்து விடுகிறார்கள். ரசியா நாறிக் கொண்டிருக்கிறது!

— தகவல்: இ.வே.




படிப்பகம்

www.padippakam.com

# பணம் கொழிக்கும் பக்தி வியாபாரம்







பக்தி பணம் கொழிக்கும் வியாபாரமாக வளர்ந்துவிட்டது. சங்கரமடம், தருமபுரம் ஆதினம் போன்ற பரம்பரை மடாதிபதிகள், ஆதினங்கள் நடத்திவரும் பக்தி வியாபாரத்தைச் சொல்லவில்லை. புட்டபர்த்தி சாயிபாபா, பங்காரு அடிகள் போன்ற திடீர் அவதாரங்களின் கள்ளத்தனமான பக்தி வியாபாரத்தையும் சொல்லவில்லை. கோடம்பாக்கம் இராம.நாராயணன்கள் நடத்தும் பக்திச் சினிமா வியாபாரத்தைச் சொல்கிறோம்.

ஏற்கனவே மதமே மக்களை நினைவிழக்கச் செய்யுமளவு போதையூட்டும் அரசாங்க சாராயமாக இருக்கிறது. அதோடு இன்னொரு கள்ளச்சாராயச் சரக்கு சினிமாவும் கலக்கிப் போதையேற்றுகிறார்கள். தந்தைக் குலத்துக்கு அரசாங்க மலிவுவிலை மதுவென்றால் தாய்க்குலத்துக்கு சினிமா மூலம் மலிவுவிலை பக்திப் போதை ஏற்றுகிறார்கள்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஏ.பி.நாகராஜன் - சிவாஜிகணேசன் போன்ற பழம்பெருச்சாளிகள் கூட்டுச் சேர்ந்து திருவிளையாடல், சரஸ்வதி சபதம், கந்தன் கருணை போன்ற புராணச் சினிமாக்கள் எடுத்து பக்தி வியாபாரத்தை முடுக்கி விட்டார்கள். அப்போது யானை, குதிரை, நாய் போன்ற மிருகங்களின் சாகசங்களைக் காட்டி சாண்டோ சின்னப்பா தேவர் - எம்.ஜி.ஆர். போன்ற இன்னொரு பழம்பெருச்சாளிக் கும்பல் வேறுமாதிரியான மூடநம்பிக்கை வியாபாரம் நடத்தியது.

மிருகங்களின் சாகசங்களையும், புராண இதிகாச பக்தியையும் இணைத்து வீரிய ஒட்டு ரகங்களை உருவாக்குவதிலும், அவற்றிலே வசூல் சாதனைகள் படைப்பதிலும் வழிகாட்டியாக இருந்துவிட்டுப் போய் விட்டார் சின்னப்பா தேவர். புராண - இதிகாச பக்திப் படங்கள் என்றால் பிரம்மாண்டமான அரங்க அமைப்புகள், தகுந்த நடிகர் - நடிகைகள், ஒப்பனைகள் என்று ஏராளமாக செலவும், மூளை வேலையும் கூட தேவையாக இருந்தது. ஆனால் தேவரின் 'ஃபார்முலா' பக்திப் படங்கள் என்றால் ஏதாவது ஒரு நடிகையையும் மிருகங்களையும் வைத்து சமூக - குடும்பக் கதைகளையே பக்திப் பரவசமூட்டும் சரக்காக விற்று ஏராளமாகக் குவித்துவிடலாம். எனவே கோடம்பாக்கம் சினிமா வியாபாரிகள் முழுமூச்சில் இதில் இறங்கிவிட்டனர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த "யார்?", கடந்த ஆண்டு வெளிவந்த "ஆடிவெள்ளி", "சக்தி பராசக்தி". இந்த ஆண்டின் "துர்கா" போன்ற பக்திச் சினிமாக்கள் வசூலில் சக்கைப் போடு போட்டன. அதைவிட முக்கியமானது இந்தச் சினிமாக்கள் மக்கள் மத்தியிலே ஏற்படுத்தும் விளைவுகள்.

முலாம் பூசிய 'கவரிங்' நகைகள், பட்டுச்சரிகை ஆடைகளுடன் வந்த ராமராவ் போன்ற நடிகர்களையே புராண - இதிகாசக் கடவுள் அவதாரங்களாக நமது மக்களில் பெரும்பிரிவினர் நம்பினர். இப்போது பட்டுப்பாவாடை - தாவணியில் உள்ள பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கு தெய்வீக அருள் வருவதாகவும், பாம்பு, நாய், யானை, குரங்கு, மயில் போன்ற மிருகங்கள் மனிதர்களாலும் முடியாத சாகசங்கள் புரிவதாகவும் இந்தக் கதைப் பாத்திரங்கள் எல்லாம் சேர்ந்து அற்புதங்கள் நிகழ்த்துவதாகவும் காட்டுகிறார்கள்.

சாதாரணமான - பலவீனமான குடும்பப் பெண்ணாக இருந்தவள் அம்மன் அருள் இறங்கி - தெய்வீக சக்தி பெற்று பத்துத் தடியன்களை நேருக்கு நேர் எதிர்கொண்டு சவால்விட்டு அழிக்கிறாள்! யானையோ, குரங்கோ, நாயோ, பாம்போ, ஆடோ வில்லன்களைத் துரத்தித் துரத்திப் பழிவாங்குகின்றன! இந்தக் கதாபாத்திரங்கள் உலகிலுள்ள தீமைகள் அனைத்தையும் எதிர்த்துப் போராடி வெல்லுகின்றன. முக்கியமாக கொடுமைக்கார மாமியாரைப் பழிவாங்குகின்றன; பொல்லாத பண்ணையாரைத் தண்டிக்கின்றன; கெட்டுப்போன கணவனைத் திருத்துகின்றன. இன்னும் என்னவெல்லாமோ சாதிக்கின்றன!

புராண, இதிகாச கடவுளர்கள் மட்டுமல்ல, நிகழ்கால சமூக, குடும்பப் பெண்கள், மிருகங்களின் வடிவிலான அவதாரங்கள் கூட மக்களது சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கமுடியும் என்கிற மூடநம்பிக்கையை இந்த பக்திச் சினிமாக்கள் பரப்புகின்றன. கோடம்பாக்கத்து அரைநிர்வாண நடிகைகளையும், விபச்சாரிகளையும் கூட தெய்வீக சக்தியுடையவர்கள் என்று ரசிகர்கள் - பக்தர்களை நம்பும்படி செய்கின்றனர்.

"யார்?" முதற்கொண்டு பல பக்திப் படங்களில் நடித்த நடிகை நளினி உண்மையிலேயே காளிபக்தை, அருள்வரும், குறிசொல்வார் என்று சினிமாக்காரர்கள் பிரச்சாரம் செய்தனர். அதற்காக அவரும், பக்திப்படங்களின் படப்பிடிப்புக்கு முன்பு விரதம் இருந்து, அம்மன்



படிப்பகம்

சிலைக்கு பூசை போட்டு, பாலிலே குளித்து, ஆரத்தி சுற்றி மேளங் கொட்டி அருள் இறக்கி நடிக்க வைப்பார்களாம். ஏதோ நரம்புநோய் என்று மருந்து கொடுத்துப் பார்த்து, பிறகு இல்லை என்றும், அவருக்கு அற்புத சக்தி உண்டு என்றும் முடிவு செய்தார்களாம். படப்பிடிப்பிலேயே குறிசொல்வாராம். அவை பலித்ததாகவும் பிரச்சாரம் செய்து, பக்த ரசிகர்கள் திருமணத்துக்கு முன்பு நேரில் வந்து ஆசி பெற்று, குறிகேட்டுப் போனார்களாம். இப்படியாகப் பக்தி வியாபாரத்துக்கு மலிவான விளம்பரமும், மூடநம்பிக்கையையும் இந்தச் சினிமாக்காரர்கள் பரப்புகிறார்கள்.

''யார்?'' சினிமாவிலிருந்து இந்த பக்தி மோசடியும் வியாபாரமும் உச்சகட்டத்தையும் புதுவடிவத்தையும் எடுத்தது. சாதாரணமாக சினிமாப் பார்க்கும் போது, ரசிகர்களிடையே சிரிப்பு அலைமோதியது, தாய்மார்கள் உருகிக் கண்ணீர் விட்டார்கள், விசிலடித்து ரசிகர்கள் கும்மாளமிட்டனர் என்றுதான் செய்திகள் - விளம்பரங்கள் வரும். ஆனால் 'யார்?' 'ஆடிவெள்ளி' முதலிய சினிமாக்களைப் பார்த்துப் பெண்கள் சாமி வந்து ஆடினார்கள்; திருநீறு, குங்குமம், மஞ்சள் பூசி, வேப்பிலை அடித்து, கற்பூரம் கொளுத்தி சினிமாக் கொட்டகையே கோவில் பிரகாரமானது; சினிமாப் பார்க்க வரும் பெண்கள் துணையுடன் வரவேண்டும்; அருள்வரும் பெண்களிடம் குறிகேட்கலாம் - என்கிற செய்திகள் - விளம்பரங்கள் வருகின்றன.

இவ்வளவு மூட நம்பிக்கைகளுக்கு இழுபட ரசிகர்கள் - பக்தர்கள் தயாராய் இருப்பதைக் கண்டதும் கோடம்பாக்கத்து சினிமாக்காரர்களுக்குத் திமிர் தலைக்கேறிவிட்டது. எவ்வளவு தரக்குறைவான சரக்குகளையும் வியாபாரம் செய்துவிடலாம் என்கிற துணிச்சலும், கோடிகோடியாக அவர்களுக்குக் கொட்டும் ரசிகர்களை துச்சமாக மதிப்பதும் வந்துவிட்டது.

இந்தச் சினிமாக்காரர்களுக்கு எப்போதும் ஒத்தூதும் விகடன், கல்கி, குமுதம், தினத்தந்தி, தினமணி போன்ற பத்திரிக்கைகளே என்ன எழுதுகின்றன தெரியுமா? ''பகுத்தறிவை அடகு வைத்துவிட்டுப் பார்க்கவேண்டிய படம்'', ''காதுகளில் பந்துபந்தாகப் பூ சுற்றுகிறார்கள்'' ''மூளையைக் கழட்டி வைத்துவிட்டு இந்தப் படத்துக்குப் போகலாம்'' என்பதுதான் விமர்சனம்.

பக்தி, அருள், அற்புதங்களை நடிகர் - நடிகைகள் செய்வதைப் போலக் காட்டுவது கூட போதாது என்று யானை, நாய், பாம்பு, மயில் போன்ற பிராணிகள் பறவைகள் செய்வதாகவும் காட்டுகிறார்கள். ''ஆடிவெள்ளி'' சினிமாவில் நடித்த யானை 'அம்மன் கோவில் திருவிழா' சினிமாவில் தீ மிதித்து, தீச்சட்டி ஏந்தி ஆடுகிறது! 'தேவி துணையிருப்பாள்' என்ற சினிமாவில் துண்டிக்கப்பட்ட கை மட்டும் அம்மன் அருள் - தெய்வீகத் தன்மை பெற்று ரத்தம் சொட்டச் சொட்ட வெட்டரிவாளோடு அந்தரத்திலே பறந்துபோய் பகைவனை வெட்டிப் பழித் தீர்க்கிறது.

''ஆடிவெள்ளி'' சினிமாவில் அதிநவீன கம்ப்யூட்டரையே இம்மாதிரியான மூடநம்பிக்கை - பக்தி வியாபாரத்துக்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதன் கதாநாயகி கண்ணைச் சிமிட்டினால் மின்னல் வெட்டுகிறது! வில்லனை இடி தாக்குகிறது. கதாநாயகி வள்ளிக்கு (நடிகை சீதா) வந்திருக்கும் 'அருளை'ப் பற்றி ஆய்வு செய்வதற்காக ஒரு விஞ்ஞானி கம்ப்யூட்டரை இயக்குகிறார். கம்ப்யூட்டர் தாறுமாறாகக் காட்டுகிறது; அவர் புகைப்படக் கருவியை அனுப்புகிறார் அது தானே சுழல்கிறது.

புராண, இதிகாச கடவுளர்கள் மட்டுமல்ல, நிகழ்கால சமூக, குடும்பப் பெண்கள், மிருகங்களின் வடிவிலான அவதாரங்கள் கூட மக்களது சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கமுடியும் என்கிற மூட நம்பிக்கையை இந்த பக்திச் சினிமாக்கள் பரப்புகின்றன. கோடம்பாக்கத்து அரைநிர்வாண நடிகைகளையும், விபச்சாரிகளையும் கூட தெய்வீக சக்தியுடையவர்கள் என்று ரசிகர்கள் – பக்தர்களை நம்பும்படி செய்கின்றனர்.



அதே சினிமாவில் வள்ளிக்குத் துணையாக ஒரு யானைக்குட்டியும், பாம்பும் வருகின்றன. யானை மருந்து வாங்கி வருகிறது; வில்லன்களுக்கு எதிராகச் சதிசெய்கிறது; பாம்பு வள்ளிக்காக செய்தி கொண்டு போகிறது; அது விரும்பாத திருமணம் நடத்தக் கூடாதென்று தாலியை ஒளித்து வைக்கிறது. படத்தின் உச்சகட்டமாக 3, 4 வயது சிறுமி சேலை கட்டிக் கொண்டு, தீ மிதித்து, தலைவிரிகோலமாக சாமி ஆடுகிறாள். ''உச்சஸ்தாயியில்'' மேளமடிக்கிறாற்போல் இசை முழங்குகிறது. நாயகி வள்ளிக்கு அருள்வந்து ஆடுகிறாள்.

அவ்வளவுதான் ரசிகர்கள் - பக்தர்கள் மத்தியில் சில பெண்களும் சாமி ஆடத் துவங்கி விடுகிறார்கள்; உடனே மஞ்சள், குங்குமம், விபூதி, வேப்பிலை அடிக்கிறார்கள்; மகமாயி, மகமாயி என்று கூச்சல் எழும்புகிறது. சினிமா கொட்டகையே பரபரப்பாகிறது; கொஞ்ச நேரம் ஆடி முடித்ததும் தண்ணீர் - சோடா தெளித்து எழுப்புகிறார்கள். அதற்குள் தொடர்ந்து ஓடும் சினிமாவில் வள்ளி வில்லன்களைக் கொன்று, கெட்டுப் போனவர்களைத் திருத்தி, குற்றங்களுக்குப் பழிதீர்த்து தெய்வமாகி கோபுர உச்சியில் வருகிறாள். பக்திப் பரவசத்தோடு ரசிகர்கள் - பக்தர்கள் வெளியே வருகிறார்கள்.

இந்த மாதிரியான மூடத்தனமான பக்தி சினிமா வியாபாரத்தின் வெற்றி மேலும் பல குறுகிய காலத் தயாரிப்புகள் வெளிவரக் காரணமாகி விட்டது. அடுத்து சக்தி பராசக்தி, துர்கா, சத்தியம் சிவம் சுந்தரம், அம்மன் கோவில் திருவிழா, ஆடிக்கிருத்திகை என்று பன்றி குட்டிகள் போட்டது போல வருகின்றன. பக்தி அருள் - அற்புதங்கள். முழுமையாக இல்லாவிட்டாலும், குரங்கு, நாய், மயில், யானை, ஆடு, பாம்பு இவற்றை வைத்து வேறுமாதிரியான மூடநம்பிக்கைச் சினிமாக்களாவது சினிமா வியாபாரத்துக்கு அவசியம் என்று கருதுவது அதிகமாகி விட்டது. இதைத் தொடர்ந்து சினிமா நடிகர்களின் வாரிசுகள் நடிக்க வருவது போல இந்த யானை, நாய், ஆடுகளின் வாரிசுகளும் நடிக்கின்றன என்ற விளம்பரம் செய்கிறார்கள். 'ஆட்டுக்கார அலமேலு' சினிமாவில் நடித்த ஆடு ராமுவின் மகன் மணிகண்டன் என்ற ஆடு 'எங்க ஊரு ஆட்டுக்காரன்' சினிமாவில் அதன் கலை உலக வாரிசாம்! இந்த ஆடு மனிதர்களைப் போலவே, மனிதர்களின் பிரச்சினைகளைப் பற்றி கடந்தகால சம்பவங்களை எண்ணிப் பார்ப்பதாக காட்சிகள் வருகின்றன.

இவ்வாறு பக்தி - அருள் - அற்புதங்கள் என்கிற மூடநம்பிக்கை வியாபாரத்தின் விளைவு, கலியுலக அவதாரங்களாக நடிக்கும் கள்ள நோட்டு, ஆபாச வக்கிர மோசடிச் சாமியார்களான பங்காரு அடிகள், சாயிபாபா போன்றவர்கள் மீது நம்பிக்கை வளர்க்கவும் பயன்படுகின்றது. பங்காரு அடிகள் கும்பல்தானே பணம் போட்டு மேல்மருவத்தூர் அற்புதங்கள்; மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி போன்ற சினிமாக்களை எடுத்துப் பிரச்சாரம் செய்கிறது.

தமிழகத்தின் பகுத்தறிவுப் பாரம்பரியம் குறித்து உரிமை பாராட்டிக் கொள்ளும் திராவிட இயக்கத்தினர் இந்த பக்தி சினிமா வியாபாரத்தைக் கண்டுகொள்வதில்லை என்பது மட்டுமல்ல, இதில் முன்னணியில் நிற்கும் இராம.நாராயணனே ஒரு தி.மு.க. எம்.எல்.ஏ.! வழக்கமான மஞ்சள் மசாலா சினிமா வியாபாரத்தோடு இந்த பக்தி சினிமா வியாபாரம் தமிழ்ச்சினிமா உலகத்தை மீளமுடியாத சீரழிவிற்குள் இழுத்துத் தள்ளிவிட்டது.

க.மு.

www.padippakam.com

கவிதை:

# நடுத்தர வர்க்கத்தின் நழுவல்

கனவு. பள்ளிப்பருவக் கனவு.
ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடம்.
வகுப்பறையில் உட்கார்ந்திருக்கிறேன்.
ஒரு கட்டுரை எழுத ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன்.
கட்டுரையில் எனது அபிப்பிராயத்தை எப்படி எழுதுவது
எனக் கேட்டேன் ஆசிரியரை.
"அது மிகக் கடினம்! இரு... உனக்கு ஒரு கதை
சொல்கிறேன்" - அவர் மூக்குக் கண்ணாடிக்கு
மேலாக ஓரப்பார்வை பார்த்துக் கொண்டே கூறினார்.
"ஒரு குடும்பத்தில் ஆண்குழந்தை பிறந்தது. பெற்றோருக்கு
மிகவும் மகிழ்ச்சி. குழந்தைக்கு ஒரு மாதம் ஆனது.
வந்துபோகிறவர்களிடமெல்லாம் பெற்றோர் குழந்தையைக்
காட்டினர். பாராட்டுகளைக் கேட்க அவர்கள்
ஆசைப்படுவது இயல்புதானே!
'இந்தக் குழந்தை பெரிய பணக்காரன் ஆவான்'
— என்றார் ஒருவர்.
அந்த உத்தமருக்கு பெற்றோர் நெஞ்சார நன்றி
தெரிவித்தனர்.
'இந்தக் குழந்தை பெரிய அதிகாரியாவான்' என்றார்
மற்றொருவர்.
அவருக்குப் புகழாரங்களைச் சூட்டினர்.
இன்னொருவன் வந்தான் —
'இந்தக் குழந்தை மரணமடைவான்' என்றான்.
பெற்றோர் உள்ளம் கொதித்தது; எல்லோரும்
சேர்ந்து அவனை அடித்துப் புரட்டி விட்டார்கள்."
ஆசிரியர் மேலும் சொன்னார்:
"அந்தக் குழந்தை பணக்காரனாய் வருவதும், பெரிய
அதிகாரியாய் வருவதும் நாளை பொய்யாகிப் போகலாம்.
ஆனால் அவன் மரணமோ உறுதி. எனினும் இங்கே
பொய்யைச் சொன்னவனுக்குப் புகழாரம்! உண்மை
பேசியவனுக்கு அடி, உதை!"

அவர் அப்படிச் சொல்லிவிட்டு என்னைப் பார்த்துக்
கேட்டார்: "அப்ப... அந்த இடத்துல நீ என்ன
சொல்லுவே?"
"ஐயா, நான் பொய் சொல்லவும் விரும்பவில்லை,
உதைபடவும் விரும்பவில்லை. அப்படியானால் என் கருத்தை
எப்படிச் சொல்வது?"
ஆசிரியர் நிதானமாகச் சொன்னார்:
"அந்த மாதிரி நேரங்களில் நீ சொல்லவேண்டியது
இதுதான். இந்தக் குழந்தையைப் பாருங்களேன்!
ஆகா! ஆகா! இவன் வந்து... ஓஹோ.. ஓஹோ!
குழந்தை பற்றி என்னுடைய கருத்தா? ஹி... ஹி...
ஹி... ஹி... ஹி..."



லூ சுன்,
(சீனப்புரட்சி எழுத்தாளர், கவிஞர்,
ஓவியர்)

மிகச் சிக்கலான சீன சமூக சூழ்நிலைமைகளில் பொறுப்பேற்கத் தயங்கிய நடுத்தரவர்க்கப் பிரதிநிதிகளை லூசுன் கிழித்தெறிந்தார். கிண்டல் நடையில் பெயர் பெற்ற அவரது இக்கவிதை, குறிப்பாக, தமிழகத்தில் உள்ள அறிவுஜீவிகள் மற்றும் போலி மார்க்சீயவாதிகளுக்கும் பொருந்தும்.

எந்த ஒரு அரசியல், கலாச்சார, சமூகப் பிரச்சனைக்கும் தெளிவான கருத்து (பதில்) சொல்லிவிட்டால் அது வறட்டுவாதம் என்ற கருத்து மேற்படி ஆசாமிகளால் பரப்பப்பட்டு வருகிறது. 'இதுதான் சரியான கருத்து என்று வெளிப்படையாகச் சொல்லாதே!' என்பது அவர்களின் புதிய வேதம். முடிவுக்கே வராமல் சந்தேகத்திலேயே நிரந்தரமாக நில் என்று சொல்லும் இவர்கள் பாட்டாளி அணிகளைச் சீர்குலைப்பவர்கள்.

முரண்பாடுகளை 'கண்ணியமாக' 'நாகரிகமாக' விவாதிக்கலாம் என்று சொன்னவர்கள் இன்று கருத்து சொல்லவும் தயங்குகிறார்கள். ஏனென்றால் கருத்துக்களை வெளிப்படையாகச் சொன்னால் முரண்பாடுகள் வந்துவிடுமாம். இதுதான் கும்மிருட்டில் கரிக்குருவி பிடிக்கப் புறப்பட்டிருக்கும் 'புதிய தத்துவக்காரர்'களின் தேடல்!

— மருத்துவன்.


ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி.வல்லபேசன், 45, செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம், சென்னை-600 049. அச்சிடுபவர்: பிரேம் பிரஸ், 107, ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094. புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!
படிப்பகம்

www.padippakam.com



# மயிலும் கூட தானாக இறகு போடாது!

நமது நாட்டு அதிகாரிகள், ஆளும் கட்சித் தலைவர்கள் இவர்களுக்கு ஒரு சிறப்புத் தன்மை உண்டு. சாதாரண மக்கள் தங்களுடைய துயரங்களை, பிரச்சனைகளை வாயால் சொன்னால் இவர்களின் காது செவிடாகிவிடும். எழுதிக்கொடுத்தால் கண் குருடாகி விடும். காலைத் தொட்டால் கூட உடல்உணர்ச்சியிற்றி கரணையற்றுப் போய் விடும்.

சாதாரணமாக எந்த ஊர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கே அன்றாடம் ஏதாவதொரு உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், தர்ணா என்று ஏதாவது போராட்டம் நடந்து கொண்டே இருக்கும். தினமும் கலெக்டர் வருவார். மக்களைப் பார்த்ததும் தனது காரில் இருக்கும் கருப்புக் கண்ணாடியை இருக்கி மூடிக் கொண்டு உள்ளே சர்ரென்று போய்விடுவார். போராட்டத்தை முடித்துக் கொண்டு மனுக் கொடுக்க சென்றால் கலெக்டர் 'பிசியாக' இருப்பார். 'பிறரிடம் கொடுங்கள்' என்று பியூன் சொல்வார். 'கவனிக்கிறேன், போயிட்டு வாங்க'. இதற்குமேல் பி.ஏ-வுக்குத் தாய்மொழி தெரியாது

பொறுப்பற்ற திமிர்த்தனமான அதிகார வர்க்கத்தின் இந்த நடைமுறையிலிருந்து சிலர் சில அனுபவங்களைக் கற்றுக் கொள்கின்றனர். அதுதான் மயில் தானாக இறகு போடாது என்பது. இந்த அனுபவத்தை நடைமுறையில் கையாண்ட சில நடவடிக்கைகள் சமீபத்தில் மகாராட்டிர மாநிலத்தில் நடந்துள்ளன.

ரூபா, நீட்டா, அருணா, கவிதா, மனோரமா, ஊர்மிளா, பிரேமா - நாக்பூரில் பணியாற்றும் ரயில்வே போலீஸ்காரரின் ஏழுபெண்கள் இவர்கள். தங்களுடைய தந்தையை அவரின் மேலதிகாரியான ரயில்வே போலீஸ் கண்காணிப்பாளர் இக்பால் அகமது தொடர்ந்து துன்புறுத்தி வந்தார். இதனால் ஆத்திரமுற்ற ஏழுசகோதரிகளும் மகாராட்டிர முதல்வர் சரத்பவருக்கு ஒரு கடிதம் எழுதினர். தங்கள் தந்தையைத் துன்புறுத்துவதை சம்பந்தப்பட்ட அதிகாரி நிறுத்தா விட்டால் காந்திஜெயந்தி அன்று பொது இடத்தில் சாட்டையால் அடிக்கப் போவதாகவும், தங்கள் ஏழுபேரும் குறைந்தது தலா இரண்டு அடியாவது கொடுக்க முதல்வர் அனுமதிக்க வேண்டும் எனக் கடிதத்தில் கேட்டிருந்தனர். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடனேயே அதிகாரி இக்பால் அகமது ஏழு சகோதரிகளின் குறைகளைப் போக்குவதாக உறுதி அளித்தார்.

இந்தச் சகோதரிகளுக்கு எப்படி இந்தத் தைரியம் பிறந்தது என்பதற்கு ஒரு முன்னுதாரணம் உண்டு. இதே மகாராட்டிர மாநிலத்தில் வார்தா என்றொரு ஊர். அங்கு கலபா சிங்கோல் என்ற மணமாகாத இளம்பெண் வசித்து வருகிறாள். இவருக்கும் பக்கத்து வீட்டுக்காரருக்கும் பொதுச் சந்தினைப் (புறக்கடைப் பகுதியில்) பயன்படுத்துவது தொடர்பாக ஏழு ஆண்டுகளாகத் தகராறு இருந்து வருகிறது. இதில் தனக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று பலமுறை மாவட்ட கலெக்டருக்குக் கடிதம் எழுதினார். பலனில்லை. இதனால் ஆத்திரமுற்ற கலபா மாவட்ட ஆட்சியாளர் ஜெயராத்தை 'சுதந்திர' தினத்தன்று சாட்டையால் அடிக்கப் போவதாக வீட்டின் முன் ஒரு தட்டியை எழுதிவைத்தார்.

சொன்னதைப் போலவே மாவட்ட ஆட்சியாளர் ஜெய்ராத்தை சாட்டையால் விளாசி 'சுதந்திரதின விருது' வழங்கினார், கலபா. அடிவாங்கிய கறுகறுப்போடு தான் கலபாவின் பிரச்சனையைக் கண்டு கொள்ளாமல் இருந்ததை ஒத்துக் கொண்டு நீண்ட விளக்கக் கடிதத்தை எழுதினார் ஜெய்ராத். இந்தச் சம்பவம் எங்கும் பரவியவுடன் பல தனிநபர்களும், சிறுசிறு அமைப்புகளும் தவறுசெய்யும் அதிகாரிகளுக்கு எதிராக இந்த முறையைக் கையாளத் தொடங்கி விட்டனர். கலபா போல் வீர மிக்கதாக இல்லாவிடினும் பணிய வைக்கும் யுக்திகளை மேற்கொள்கின்றனர்.

கலபாவின் செயலைக் கேள்விப்பட்ட நாக்பூர் அமைதிக்குழு தலைவர் டாக்டர் சாந்திலால் கோத்தாரி கலபாவின் தைரியத்தைப் பாராட்டி கடிதம் எழுதினார். தனது ஊரிலும் இத்தகைய வடிவங்களைத்தான் மேற்கொள்ளப்போவதாகவும் கடிதத்தில் எழுதுகிறார். உடனே செயலிலும் இறங்கினார் கோத்தாரி. இவருடைய முதல் இலக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள்.

பொதுத்துறை நிறுவனங்களில் இந்தியைப் பரப்பும் பாராளுமன்றக் குழு தான் வருகைதரும் நிறுவனத்திடம் மிக ஆடம்பரமான வசதிகளை அனுபவிப்பார்கள். வெளிநாட்டு மதுவகைகள் வரை பெற்று அனுபவிப்பார்கள். இந்தப் பாராளுமன்றக் குழு ஆகஸ்ட் மாதம் வெல்டன் கோல்ட்பீல்ட் என்ற பொதுத்துறை நிறுவனத்திற்கு வந்தனர். அவர்கள் தங்க உள்ளூர் அரசினர் விடுதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் 'மாண்புமிகு' பாராளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் தங்க ஐந்து நட்சத்திர விடுதியும், ஒவ்வொருவருக்கும் தனித்தனி காரும் கேட்டனர். கேட்டவற்றை நிறுவனம் ஏற்பாடு செய்தது. இதை அறிந்த டாக்டர் கோத்தாரி பாராளுமன்றக்குழு தங்கியிருந்த ஓட்டல் முன் ஆர்ப்பாட்டம் நடத்தி ரத்நாகர் பாண்டே என்ற எம்.பி.யை வெளியே கொண்டுவந்து இனி அரசு விடுதிகளில் மட்டும் தங்குவதாக எழுதி வாங்கிக் கொண்டார்.

அதே போல மகாராட்டிர மாநில மின் வாரியக் கூட்டம் ஓர் ஆடம்பர ஓட்டலில் நடந்த போது அங்கே ஆர்ப்பாட்டம் நடத்தி மின்துறை அமைச்சர் பதம்சிங் பட்டேலிடம் இவ்வாறு நடக்காது என உறுதி மொழியைப் பெற்றார் டாக்டர் கோத்தாரி. மின்கட்டணம் அதிகமாக இருப்பதற்கு இத்தகைய ஆடம்பரச் செலவுகள் ஒரு காரணம் என்பதை மந்திரியிடம் இடித்துரைக்கத் தவறவில்லை.

'காபி ஹவுஸ் கிளப்' என்ற பொழுது போக்கு அமைப்பின் தலைவர் வசந்த் சர்மா. ஞாயிற்றுக் கிழமைகளில் அரசு ஊர்திகளைப் பயன்படுத்தக் கூடாது என்ற மத்திய அரசின் ஆணையை மீறும் அதிகாரிகள் மீது கோபங் கொண்டார். சென்ற ஆகஸ்ட் மாதம் ஒரு ஞாயிறன்று அரசு ஊர்திகளில் செல்லும் அதிகாரிகளை மறித்து முறையாக விசாரித்தார். ஒரு காரில் அதிகாரியின் மனைவி தனது செல்லமான நாய்க்கு ஊர் சுற்றிக் காண்பிக்க வந்திருந்தார்; ஒரு கார் அதிகாரி வீட்டில் நடக்கும் மாலை 'விருந்து'க்கு சோடா மற்றும் சில சில்லறைப் பொருட்கள் வாங்க வந்து கொண்டிருந்தது. ஒரு போலீஸ் அதிகாரியின் மனைவி வந்த கார் மறிக்கப்பட்டதும் அவர் ஆத்திரம் கொண்டு மிரட்டினார். ஒன்றும் பலிக்கவில்லை.

அடுத்த ஞாயிறும் இதைத் தொடர்ந்தார் வசந்த் சர்மா. முதல் ஞாயிறன்று ஓடிய 200 அரசு வாகனங்கள் இந்த ஞாயிறு 20 ஆகக் குறைந்தன. அடுத்த ஞாயிறன்று அதிகாரிகள் குடியிருப்புப் பகுதிக்கு சர்மாவும் அவரது நண்பர்களும் ஒரு சுற்று சுற்றி வந்தனர். அவ்வளவுதான், அடுத்த வாரம் அதிகாரிகள் மனைவியர், செல்லப் பிராணிகள் எல்லாமே வெளியே தலைக் காட்டவில்லை.

அந்த ஏழு சகோதரிகள், கலபா, டாக்டர் கோத்தாரி, சர்மா இவர்கள் யாரும் பெரிய புரட்சியைச் செய்து விடவில்லை தான். ஆனால் தாங்கள் மக்களைவிட உயர்ந்தவர்கள், எஜமானர்கள், எந்தச் சட்டத்தையும் மீறத் தனக்கு அதிகாரம் உண்டு என்று மமதையில் புரளும் அதிகார வர்க்கத்தின் திமிரை அடக்க எடுத்த முதல்படி என்பதை மறுக்க முடியாது.

இந்த நாட்டில் அதிகார வர்க்கத்தை மிஞ்சிய கோழைகள் எவருமில்லை. வேலைக்கோ, உயிருக்கோ ஆபத்து என்றால் மானம் உட்பட எதையும் இழக்க அவர்கள் தயார் என்று புரிந்து கொள்ளும் எவருக்கும் தைரியம் தானாக வரும்.

— குப்பண்ணன்.

# சாணைக் கல்லில் தீட்டிய ஒரு பாடல்

தீய்ந்து போகும் இதயம்
எழுதும் பாடல்
இன்னொரு இதயம் பற்றித் தீய்க்கும்.

எரிஅடுப்பிலிருந்து எடுத்த கொள்ளி
பனிக்கட்டி போல இருக்கமுடியுமோ?

நானெழுதும் இப்பாடல்
கணவன் முன் கற்பழிக்கப்பட்ட
பெண்களின் வேதனையிலிருந்து வருகிறது.

- பசித்துச் சோறுகேட்ட ஓரே குற்றத்திற்காக
மனிதர்களாக மட்டுமே வாழ்வோம்
என்று குரல் கொடுத்ததற்காக
கட்டி வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட
மக்கள் தலைவர்களின்
மரணவேதனையிலிருந்து வருகிறது

இந்தப்பாடல்
எப்படி உனக்கு இன்பம் கொடுக்கும்?
இதயம் மட்டும் உனக்கு இருக்குமானால்
அது துடிதுடிக்கும்

வாழ்க்கை எனும்
சாணைக்கல்லில் தீட்டியது
இந்தப் பாடல்
எப்படி இது நடுநிலை வகிக்கும்?
எப்படி இது எல்லோருக்கும் இன்பம் கொடுக்கும்?

ஒன்று நீ நம் ஆளாயிருக்கவேண்டும்
அல்லது எதிரியாக இருக்கவேண்டும்

எதிரிக்கு எதிராய் நடக்கும் போரில்
என்னைப் பொருத்தவரை
என் பாடலும் ஓர் ஆயுதமே!

— எச்.ஆர்.கே. தெலுங்கு

